Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

விலை: 40/=

சுடர் : 37
கதிர் : 72

ஞாயிற்றுக்கிழமை
06 பெப்ரவரி 2022

தை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 20+12

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## க.பொ.த. உ/த பரீட்சை; ஏற்பாடுகள் பூர்த்தி!

கொழும்பு, பெப். 6
2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தர பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப் 19

# அரசியல் கைதிகள் விடுதலை; இலங்கை அரசு தகிடுதத்தம்

### சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றவே இந்த நடவடிக்கை என்று முன்னணி சாடல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி. 6

அரசியல் கைதிகளை விடுவிக்கின்றோம் என்று சர்வதேச சமூகத்துக்கு 'படம் காட்டும்' நடவடிக்கையையே இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது. நீண்ட காலம் தடுப்பில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்காமல் ஆறு மாதங்கள், ஒன்பது மாதங்களாக தடுப்பில் இருந்தவர்களை விடுவித்து அரசியல் கைதிகளை விடுவித்துவிட்டோம் என்று இலங்கை பொய்யுரைக்கின்றது. 19

## நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்ற மூவர் நேற்றும் உயிரிழப்பு!!!

கொழும்பு, பெப். 6
வெல்லவாய - எல்ல வல நீர்வீழ்ச்சியில் 19

## ஒன்றிணைந்த துணை மருத்துவ சேவையினர் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, பெப்.6
சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 19

## பாகிஸ்தான் சீமெந்து விரைவில் சந்தைக்கு!

கொழும்பு, பெப். 6
பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்து இன்னும் 3 வாரங்களுக்குள் சந்தைக்கு விற்ப 19

## மோடிக்கு அனுப்பிவைத்த ஆவணம் தமிழரசே குழப்பத்துக்கு காரணம்!

மனோ குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 6
தமிழ்க் கட்சிகளால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி 19

## குடாநாட்டில் கடந்த ஆண்டு- கரையொதுங்கிய 6 சடலங்களின் உடற்கூற்று பரிசோதனை முடிவு

யாழ்ப்பாணம், பெப். 6
குடாநாட்டின் கடற்பரப்பில் கடந்த ஆண்டு கரையொ 19

## இலங்கைப் படையதிகாரிகள் மீது - உலகளாவிய நீதி அதிகாரத்தை பிரயோகிக்க வேண்டும் பிரிட்டன்

### தமிழ்க் கட்சித் தலைவர்கள் கூட்டாகக் கடிதம்

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை அதிகாரிகள் மீது பிரிட்டன் தடை விதிப்பதுடன் அதனது உலகளாவிய நீதி அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கோரியுள்ளனர். பிரிட்டன் அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (விரிவு - பக்:8)



## பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கக்கோரி கையெழுத்து

கிளிநொச்சி, பெப். 6
பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்திடும் மக்கள் போராட்டம் கிளி 19

## 2ஆம் நிலைச் செயலர்கள் வடக்கில் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 6
வடக்கு மாகாணத்தில் இரண்டாம் நிலைச் செயலாளர்கள் மூன்று பேர் திடீரென இடமாற்றப்பட்டுள்ளனர். 19

## ஆணைக்குழு அனுமதிக்காவிடினும் - மின்வெட்டு தொடரும்!

கொழும்பு, பெப். 6
பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதி இல்லாவிட்டாலும் போதியளவு மின் உற்பத்தி இல்லாத காரணத்தால் மின்சாரத்தை துண் 19








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## இராசரத்தினம் பிரகாஷ்



கண் மூடி திறப்பதற்குள்
ஆண்டு ஒன்று ஓடிவிட்டது.
நேற்று நடந்த மாதிரியே உன் பிரிவு
எங்களை வாட்டி வதைக்கிறது.
நீ விட்டுச்சென்ற கடமைகளை
நாங்கள் செய்து முடிக்கமுடியாத கையறு
நிலையில் தவித்து நிற்கின்றோம்
உன்னுடைய நினைவுகள் எங்கள் காலம்
உள்ளவரை நிலைத்திருக்கும்
மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புச் சகோதரனே
நீ மீண்டும் உயிர்த்து காலை வராயோ
என்று ஏங்கி துடித்துக் காத்திருக்கும்

உன் பிரிவால் வாடும்
சகோதரர் மற்றும்
சகோதரிகள்.
077 8019 367

தோற்றம் 29.04.1945 மறைவு 06.02.2021

(cs 42745) (2.6)

# 2ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 15.08.1935 இறப்பு 06.02.2021

திருமதி
## செல்லத்துரை இரத்தினம்

கண்ணிமைத்து
விழிக்கவில்லை
இரண்டு ஆண்டுகள்
சென்று விட்டதம்மா
ஒரு நொடிப் பொழுதும்
அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம்

உங்கள் நினைவுகளுடன் வாடும்
பிள்ளைகள்...
தயா, ஜெயா, விஜி.

# நூலகம் திறப்பு: மக்கள் எதிர்ப்பு!

நிந்தவூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட அட்டப்பள்ளம் பிரதேச மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாக, பொது நூலகம் திறக்கப்பட்டுள்ளது. எனினும் மக்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிரின் பெருமுயற்சியின் பயனாக இந்த நூலகம் திறக்கப்பட்டுள்ளது. இதேவேளை நூலகத்துக்கு எதிராகவுள்ள அட்டப்பள்ளம் சிங்காரபுர மாரியம்மன் ஆலய வளாகத்தில் பிரதேச மக்கள் பலர் திரண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். குறித்த நூலகத்துக்கு சித்தி விநாயகர் பொது நூலகம் என்று பெயரிடவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ம-4-30)


## பராமரிப்பாளர் தேவை

யாழ்.நகரில் முதியபெண் ஒருவரைப் பராமரிக்க பெண் பராமரிப்பாளர் உடன் தேவை.

**தொடர்புக்கு: 0714115000**

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்கள் பெற்றுக்கொள்ளலாம்.**

பிளாஸ்டிக் பொருட்கள், சில்வர் வகைகள், பாட்டா வகைகள், தையல் உபகரணங்கள், நவீன பட்டின்கள், பொம்மை வகைகள், மாஸ்க் வகைகள், சனிரேசர் வகைகள், விளையாட்டு பொருட்கள், கவரிங் நகைகள், அன்புளிப்பு பொருட்கள் இவை அனைத்தும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

26/1, ஜும்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்.
077 468 3354

உரிமையாளர்
தே.கலைத்தாசன் (கரன்)
சரவணபவன் பான்சி கவுஸ்

## வேலையாட்கள் தேவை

யாழ். நல்லூரில் இயங்கும் புடைவை வியாபார நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
**076 3476 733**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றில்
ஆண் பெண் இருபாலாரும் தேவை : வயது 18-30
கிளினிங் வேலை (ஆண்) : வயது 40 - 55
குழந்தை பராமரிப்பதற்கு (பெண்) : வயது 35-55 (தங்கி நிற்ககூடியவர்)
வாகன சாரதி தேவை (ஆண்) : வயது 22-55
**075 988 0000, 075 988 1000, 077 937 0000, 075 498 5400**


# மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 02 . 1956 மறைவு 04 . 02 . 2022

## திரு. துரைச்சாமி யோகநாதன் (வட்டு)

யாழ். கொட்டடியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி யோகநாதன் கடந்த (04.02.2022) காலமானார்..

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி இராசலெட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நடராசா நீலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மருமகனும், கிருபாநிதியின் பாசமிகு கணவரும், தனுஷியா, செந்தூரனின் பாசமிகு தந்தையும், திருக்குமரனின் மாமனாரும், காலஞ்சென்ற யோகரட்ணம் மற்றும் யோகராணி, யோகநாயகி, யோகேஸ்வரன் (ஜேர்மனி) யோகாம்பிகை, யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கிருபா (பிரான்ஸ்), ஜெயகாந்த் (கனடா), காலஞ்சென்ற கண்ணன், காலஞ்சென்ற சுனித்தா மற்றும் கிருஷ்ணா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் ஜீவன் (கனடா), சர்வேஸ்வரி (பிரான்ஸ்), தாரணி (கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்றவர்களான மகேந்திரன், யோகேந்திரன் மற்றும் ஈஸ்வரி, மகேஸ்வரன் (ஜேர்மனி), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், தனபாலசிங்கம், சந்திராதேவி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, கனகலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பத்மநாதன் தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.60, வைமன் வீதி,
நல்லூர்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 943 5088

(CS 18394) 1-6

# மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 03 . 1936 இறப்பு 05 . 02 . 2022

## சின்னையா சண்முகம்

மாசுவன் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் மாந்தை வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னையா சண்முகம் அவர்கள் நேற்று (05.02.2022) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சின்னையா தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், சிவபாக்கியத்தின் அன்பு கணவரும், ஆச்சிமுத்து, பொன்னம்பலம், கதிரவேலு, கந்தையா, பிள்ளையம்மா, மகேஸ்வரி, சகுந்தலேஸ்வரி, சத்தியேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவனேசனின் பாசமிகு மைத்துனனும், பிரேமாவதி, உருத்திரா, பத்மாவதி, பரமாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரியங்கா, ரஜிதன், சயந்தன், தாட்சாயினி, சனாதனன், பிரவீன், பிரசானி, சதுர்சன், அபிநயா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 973 9330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார நிலைமை தொடர்பில்

# பஸில், நிவாட் கப்ரால் முரணான கருத்துக்கள்

### ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

**கொழும்பு, பெப். 6**

**கடன் மீள்செலுத்துகை மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர்.**



இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவா அல்லது மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலா பொய்யுரைப்பது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடன் மீள் செலுத்துகையை மறுசீரமைப்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாகவும், நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்க உறுதியளித்துள்ளதாகவும் பஸில் ராஜபக்ச கூறியிருந்தார்.

எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபுணர்கள் தொழில்நுட்ப பயிற்சி ஒன்றை வழங்குவதற்காக இலங்கை வருகின்றனர் எனவும், இந்தப் பயிற்சிக்கு ஜப்பான் நிதி உதவி வழங்குகிறது எனவும் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான தகவல் எனக்குக் கிடைத்துள்ளது.

ஆனால் அதில் பயிற்சி பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)



## மைத்திரியைக் காக்க முயற்சிக்கிறதா அரசு?

### சனத் நிசாந்த பெரேரா கேள்வி

கொழும்பு, பெப். 6

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஏன் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.

மஹாகும்புக்வெல்ல பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில், கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்களை மூடி மறைத்தனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் காலப் பகுதியில் நாட்டின் ஜனாதிபதியாகவும் படைத் தளபதியாகவும் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவிடம் ஏன் ஒரு வாக்குமூலம் கூட பதியப்படவில்லை? இவ்வாறான செயற்பாடுகளால் அரசாங்கம் மைத்திரியைப் பாதுகாக்கின்றதா என்ற சந்தேகம் கத்தோலிக்க மக்கள் மத்தியில் எழுகின்றது. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மீதும் பிரதமர் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

ஜனாதிபதியும் பிரதமரும் தங்களது மனச்சாட்சியிடம் இது பற்றி கேள்வி எழுப்பவேண்டும்- என்றார். (எ-இ)

## குற்றவாளிகளை விடுவிக்கும் அரசே குற்றத்துக்கு பொறுப்பு

### சாடுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, பெப். 6

குற்றவாளிகளை எவ்வித விசாரணையும் இன்றி விடுதலை செய்யும் அரசாங்கம் நடந்த குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அல்லது கட்சியினர் எவருக்காவது சிறு கீறல் சேதத்தை ஏற்படுத்தினாலும் அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும்.

அண்மையில் கம்பஹா மாவட்டத்தில் நடந்த மாநாட்டுக்கு வந்து தாக்குதல் நடத்த முயற்சித்தவர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த போதும் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலங்களை மாத்திரம் பதிவு செய்துள்ளனர். கைது செய்யவில்லை. இதன் மூலம் இந்தத் தாக்குதல் முயற்சியின் பின்னால் பலமிக்க சக்தி இருப்பது தெரிகிறது.-என்றார். (எ-இ)

## ஒட்சிசன் தேவைப்படுவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 6

கொழும்பு தேசிய மருத்துவமனைத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் கொரோனாத் தொற்றாளர்கள் பலருக்கு தொடர்ந்து ஒட்சிசன் வழங்கநேரிட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அவர்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் என தேசிய மருத்துவமனையின் விசேட மருத்துவர் ஹர்ஷ சத்சந்திர தெரிவித்துள்ளார்.

தேசிய மருத்துவமனையில் கொரோனாத் தொற்றாளர்கள் 325 பேர் இதுவரையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அவர்களில் 75க்கும் அதிகமானோர் ஒட்சிசன் மூலம் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-இ)

## இலங்கை வருவோருக்கு அறிமுகமாகிறது புதிய வசதி

கொழும்பு, பெப். 6

இலங்கைக்கு வர விரும்பும் பயணிகளில், 30 நாடுகளைச் சேர்ந்தோருக்கு இலத்திரனியல் அட்டைக் கொடுப்பனவுகள் அந்தந்த நாடுகளில் செயலிழந்துள்ளதால் அவர்கள் இலங்கைக்கு வந்த பின்னர் தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், சிங்கப்பூர், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா உள்ளிட்ட 30 நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கே இந்த வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## நாணய நிதியத்திடம் துரிதமாகச் செல்க!

கொழும்பு, பெப். 6

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதை துரிதப்படுத்துமாறு அமைச்சர்கள் சிலர் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை தவிர ஏனைய அமைச்சர்கள் அனைவரும் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியை பெற்றுக்கொள்வது தொடர்பில் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதை நான் தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றேன் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (ம)

## துறைமுகத்தில் தற்போதும் தேங்கியுள்ள கொள்கலன்கள்

கொழும்பு, பெப். 6

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய சுமார் ஆயிரத்து 800 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தற்போதும் தேங்கியுள்ளன என்று அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இவற்றில் [illegible] கொள்கலன்களில் அரிசி உள்ளது. அத்துடன், பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட மேலும் பல உணவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களும் துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

டொலர் தொடர்பான பிரச்சினை உள்ளமையால், அந்தக் கொள்கலன்களை விடுவிக்க மத்திய வங்கி தலையீடு [illegible] வேண்டும் என்றும் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு மாநகருக்குள்

## பூஸ்டர் ஏற்றியோர் உயிரிழக்கவில்லை

கொழும்பு, பெப். 6

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இதுவரையில் கொழும்பு மாநகரத்துக்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்று கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

மாநகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி ருவான் விஜேயமுனி நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் குறிப்பிட்டார். (வ-இ)

# மாதகல் நுணசை கூடல்விளாத்தி அருள்மிகு சாந்தநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சுவாமி தேவஸ்தானம் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ் 06.02.2022

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

மாதகல் நுணசை கூடல்விளாத்தியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சாந்த நாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சுவாமி தேவஸ் தானத் திற்கு புதிய சித்திரத்தேர் வடிவமைக்கப்பட் டிருப்பது மாதகல் கிராமத்து இந்து மக்களுக்கு மட்டுமல்ல வடபகுதியிலுள்ள அனைத்து அடியார் களுக்கும் பெருமகிழச்சிக் குரியதாக அமைந்துள்ளது.

ஆதியும் அந்தமும் இல்லாத எம் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்து அடியார்களின் மனக் குறைகளைத் தீர்த்து திருவருட் கடாட்சம் வழங்கும் நிகழ்வு தெய்வீகச் சிறப்பு வாய்ந்தது. ஊர் கூடி வடம் பிடித்து தேர் இழுப்பது என்பது கிராமத்துக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே நல்தைாக அமைந்துள்ளது.

இந்த மக்களது நிதியுதவியாலும் ஒத்துழைப்பி னாலும், சிற்பக் கலைஞர்களது கைவண்ணத்தினாலும் புதிதாக வடிவமைக் கப்பட்ட சித்திரத்தேரின் வெள் ளோட்டப் பெருவிழா சிறப்பாக அமைய வேண்டும் என்பதுடன் ஆலய திருப்பணிச் சபையினரின் முழுமையான ஆதரவுடன் ஆலயம் மேலும் வளர்ச்சி யடைய எம் பெருமான் திருவருள் கிடைக்க வேண்டுமெனவும் ஆசி கூறி பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்.

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

அருள்வளாம் நிறைந்த மாதகல் திருவூரில் அருள் பாலிக்கும் நுணசை கூடல்விளாத்தி ஸ்ரீ சாந்தநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரப் பெருமானுக்கு புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது அறிந்து மிக்வும் ஆனந்தமடைகிறேன்.

இயற்கை வளம் நிறைந்த மாதகலில் சிவனாருக்கு அழகான சித்திரத தேரை உருவாக்கிய சிற்பக்கலைஞர் திரு. மா. குகப்பிரகாசம் அவர்களின் உன்னதபணி கண்டு பெருமை கொள்கிறோம். திருத்தேர் உருவாக்கத்துக்கு காணிக்கை வழங்கிய அடியவர்களுக்கு நல்லருள் நிறைவாகக் கிடைக்க நாமும் பிரார்த்திக்கிறோம். அற்புதத் தேரில் எம் பெருமான் எழுந்து வந்து எங்கும் அறம் நிலைக்க அருள்பாலிக்க வேண்டிப் பிரார்த்திப்போம். ஆலயத்தை சீரிய முறையில் காக்கும் அறங் காவலர்கள், சிவாச்சாரியார்கள் அடியவர்களின் கூட்டு முயற்சி மேலும் தொடர வேண்டி எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசி களையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்,
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை இலங்கை

## ஆதீன கர்த்தாவின் ஆசிச் செய்தி

அருள்வளாம் நிறைந்த மாதகல் திருவூரில் அருள் பாலிக்கும் நுணசை கூடல்விளாத்தி ஸ்ரீ சாந்தநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரப் பெருமானுக்கு புதிய சித்திரத் தேர் அமைக்கப் பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். இயற்கை வளம் நிறைந்த மாதகலில் சிவனாருக்கு அழகான சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பக்கலைஞர் திரு. மா. குகப் பிரகாசம் அவர்களின் உன்னதபணிகண்டு பெருமை கொள்கிறோம். திருத்தேர் உருவாக்கத்துக்கு காணிக்கை வழங்கிய அடியவர்களுக்கு நல்லருள் நிறைவாகக் கிடைக்க நாமும் பிரார்த்திக்கிறோம். அற்புதத் தேரில் எம் பெருமான் எழுந்து வந்து எங்கும் அறம் நிலைக்க அருள்பாலிக்க வேண்டிப் பிரார்த்திப்போம். ஆலயத்தை சீரிய முறையில் காக்கும் அறங் காவலர்கள், சிவாச்சாரியார்கள் அடியவர்களின் கூட்டு முயற்சி மேலும் தொடர வேண்டி எனது இதயபூர்வமான வாழ்த்துக் களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

இ. மாணிக்கவாசகக்குருக்கள்
சிவஸ்ரீ இரத்தின மாணிக்கவாசகக்குருக்கள்
ஆதீனகர்த்தா , மாதகல் நுணசை கூடல்விளாத்தி

சிவபூமி என்று சிறப்பித்துப் போற்றப்படும் இலங் கைத் திரு நாட்டின் வடமா நிலத்திலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயற் கைவளம் நிறைந்த புண்ணிய பூமியான மாதகல் நுணசை கூடல்விளாத்தி பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் அருள்மிகு சாந்தநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சுவாமிக்கு புதிதாக வடிவமைக் கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறுகிறது.

**வருடாந்த மாசிமக மகோற்சவப் பெருவிழா**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : | 08.02.2022 செவ்வாய்க்கிழமை |
| கைலாசவாகனம் | : | 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை |
| திருமஞ்சம் | : | 14.02.2022 திங்கட்கிழமை |
| வேட்டைத்திருவிழா | | |
| சப்பறம் | : | 15.02.2022 செவ்வாய்க்கிழமை |
| இரதோற்சவம் | : | 16.02.2022 புதன்கிழமை |
| தீர்த்தோற்சவம் | : | 17.02.2022 வியாழக்கிழமை |

**ஆலய வரலாற்றிலிருந்து சில துளிகள்**

இந்த ஆலயம் 100 ஆண்டுகாலத்திற்கும் மேலான வர லாற் றுப்பெருமை கொண்டது. தங்களது குலதெய்வ, குடும்ப வழிபாட் டுக்காக இங்குள்ள அந்தணப்பெருமக் களால் ஸ்தாபிக்கப்பட்டது இந்த ஆலயம். காலப்போக்கில் இங்குள்ள சைவப் பெருமக்கள் பலர் தாங்களும் வழிபாடு செய்ய விருப்பம் கொண்டனர். கிராமத்து அடியார்களின் வேண்டு கோளை நிறைவேற்றும் வகையில் அந்தணப் பெருமக்கள் அதற்கான வசதிகளையும், ஏற்பாடு களையும் செய்து கொடுத்தனர். கிராமத்து அடியார்கள், ஆலய வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு செயற்பட்டனர். 2011 ஆம் ஆண்டு ஆலய ஆதீனகர்த்தாவான பிரதம குரு அவர்களது தலைமையில் திருப்பணிச்சபையொன்று அமைக்கப்பட்டது. அடியார்கள் பலர் ஒன்றிணைந்து தங்களது முழுமையான ஒத்துழைப்பையும், உதவியையும் வழங்கிவருவதன் ஊடாக ஆலயம் வளர்ச்சி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## இணுவில், தர்மசாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா. மஹாதேவக்குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசியுரை

"ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" என்பது சித்தாந்த நூற் துணிபு எங்கும் நிறைந்த இறைவனை எமது எதிரில் கண்டு வணங்கும் உணர்வினை ஏற்படுத்து பவை ஆலயங்கள். ஆலயங்கள் அமைத்து அங்கு இறை வனுக்கான திருவுருவை பிரதிஷ்டை செய்து அனைத்தை யும் கடந்து நிற்கும் ஆண்டவனை அத்திருவுருவில் எழுந்த ருளவைத்து உபசரித்து வணங்கும் முறைமையை ஆகமங்கள் எடுத்துரைக்கின்றன.

நித்திய பூஜைகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகளைக் களைந்து இறை சாந்நித்தியத்தை அதிகரிப்பதற்கு மஹோற் சவம் உதவுகிறது. மஹோற்சவத்தின் முக்கிய மான ஓர் அங்கம் ரதோற்சவம் என்னும் தேர்த்திருவிழா ஆகும். தேவோபசாரம், ராஜோபசாரம் என்ற வகையில் இறைவனைத் தேரில் ஏற்றி அடியவர்கள் யாவரும் கூடி இழுத்து வரும் பக்தி உணர்வானது ஆன்ம ஈடேற்றத்திற்கும் லௌகிக வாழ்வின் சிறப்புக்கும் உதவும் என்பது ஆகம விளக்கமாகும்.

கலைநயத்துடன் கூடிய சித்திரத்தேரை உருவாக்குவது நமது நாட்டு சிற்பக் கலைஞர்களின் பெருமையை உலகெங்கும் பறை சாற்றி நிற்பதாகும். தேரின் சிற்பக்கலை வண்ணமும் அது இறைவனைச் சுமந்தவாறு ஆடி அசைந்துவரும் அழகும் கண் கொள்ளக்காட்சியாகும். மாதகல் நுணசை கூடல்விளாத்தி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அருள்மிகு சாந்த நாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர சுவாமிக்கு இவ்வருடம் புதிய சித்திரத்தேரை உருவாக்கி வெள்ளோட்டம் செய்கிறார்கள். அருமையான இந்த முயற்சியில் ஈடுபட்ட ஆலய ஆதீனகர்த்தர்கள், சிற்பாசாரியர்கள், பொருளுதவி புரிந்த வள்ளல்கள், அடிபணிந்து வடம்பிடிக்கும் அடியார்கள் அனைவருக்கும் எனது நல்லாசி களைத் தெரிவிப்பதில் மன நிறைவு கொள்கிறேன்.

சிவஸ்ரீ தா. மஹாதேவக்குருக்கள்,
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில், கோண்டாவில்

## எம்பெருமானுக்கு புதிய சித்திரத்தேர்

தன்னை நாடிவரமுடியாத அன்பர்க்காய் அவர் தாமும் ஈடேற்றம் பெற வேண்டும் என்தாய் சாந்திநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம் போன்றே திராவிட சிற்பசாஸ்திர நெறிமுறைகளோடு அமைக்கபெற்ற தேரிலே ஆரோஹனித்து. ஆலயத்தின் அசையும் வடிவமே "தேர்" என்று நான்முகனே அதன் சாரதியென்றும் பல உயர்ந்த வாழ்வியல் நெறி முறைகளை உணர்த்தும் தமிழர் தம் கலை அறிவியல் வடிவாய் இத்தேர் மிளர்கின்றது. இத்தேரினைசிற்பசாஸ்திர முறைப்படி ஆதவன் கலைக் கூடத்தின் சிபகலை மாமணி திரு. செல்லத்துரை சக்திவேல் ஸ்திபதி அவர்களின் வழிகாட்டடிலில் ஆச்சாரியார் திரு. மாசிலாமணி குகப்பிரகாசம் அவர்களின் தலைமையில் ஆச்சாரியார்களான திரு.செ. செந்தில்நாதன் திரு. மா.மகேஸ்வரன், திரு.கு.ராவிராஜ், திரு.குண தாசன், திரு.டிலக்கசன், இரும்பு வேலைகள் திரு. க. அருள்நேசன், திரு.து.சதீஸ் குழுவினர்கள் வர்ணப்பூச்சு வேலைகள் திரு.அ.அஜந்தன் (இத்தா) குழுவினர் திரு.ம.கண்ணன் திரு.செ. கருணா இன்னும் பல உதவியாளர்கள் இணைந்து பூசாந்திர சித்திரைத் தேரை உருவாக்கியுள்ளனார். இவர்கள் அனைவருக்கும் மற்றும் இத்தேரினை உருவாக்க முழுமுயற்சி எடுத்த எமது ஆலய திருப்பணி சபை பொருளாளர் திரு. வி. சிற்றம்பலம் அவர்களுக்கும் மற்றும் கனடா வாழ் திரு.ந. கணேச மூர்த்தி அவர்களுக்கும் நிதியுதவியளித்த சிவனாடியர்கள் அனைவருக்கும் எம்பெருமானின் பிரிபூரண திருவருள் கிடைக்க பிரார்த்தித்தும் நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களை யும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாணிக்கம் சிவப்பிரியகுருக்கள்
ஆதீன இளவரசு
ஆலயகுரு

## தேரேறிய சங்கரர் துதி

போழொத்த வெண்மதியம் சூடிப் பொலித் திலங்க வேழத்து உரிபோர்த்தான் வெள்வளையாள் தான்வெருவ ஊழித்தீ அன்னானை ஓங்கொலி மாப் பூண்டதோர் ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே.

ஆலயதிருவிழாவில் இறைவன் தேர்மீது எழுந்தருளி வீதிவலம் வருவது மிகச்சிறந்த வழிபாட்டிற்கு உரியதாகும். இறைவன் தேரில் வருவது துஷ்டர்களை மாய்த்து சிஷ்டர்களைக் காக்கும் ஸம்ஹார, அனுக்ரஹ செயல்களை உணர்த்தும் திருக்காட்சியாகும். தேரின் வடிவமைப்பு அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் சமானமாகும். விசுவவிராட்சொரூபமே தேரின் எட்டு அடுக்குகளாகும். அவை மேலிருந்து முறையே கலசம் சிவசக்தி, கும்பம் (சிகரம்) ஷோடசாந்த ஸ்தானம் அடுத்தகீழ் அடுக்கு துவாதசாந்தம், அடுத்து மஸ்தக அதிஷ்டானம் அடுத்து புருவமத்தியஸ்தானம், நடுவில் தாங்கிடும் குத்துக்கால்கள் தத்துவமாகும் தூண்கள் முன் முன்று துறைகள் மூன்றுகண்கள் பின்னலை சிகையும், இடவலக்காதுகள் என்பவையாம். இறைவன் அமர்ந்துள்ள கேடயபீடம் முப்பாழ்மண்டலங்கள், சூரியசந்திரகலைகள் சாரதி அக்னிக்கலை இவை நாசியாகும் அடுத்த அடுக்கு கண்டஸ்தானம். அதை அடுத்த அடுக்கு இருதயஸ்தானம் அதை அடுத்த அடுக்கு நாபி, அதற்கு அடுத்த அடுக்கு குண்டலிஸ்தானம். பத்து சக்கரங்களும் பத்துவகை வாயுக்கள் இவைக்கு கர்த்தா இறைவன் இவ்வாறு அமைந்தபிண்டதல சரீரமாகிய தேரில் தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்றமனதை உந்தி, குண்டலியிலிருந்து நாபிக்கும், அதிலிருந்து கழுத்திற்கும், அதிலிருந்து வாய்க்கும், ஏற்றி இலயப்படுத்தி முறையே இரதக் குதிரையாம் நாசிக்கும், அங்கிருந்து கண் வழியாகவும் நடுவழியாக மேல்நோக்கி ஆறாம் அடுக்காகிய புருவநடுவிற்கு (ஆக்ஞைசகரம்) ஏற்றி லயப்பட்டு சும்மா இருந்தபடி இருக்கும் நித்தியசகியாய் இருந்திடல் வேண்டும் என்ற இத்தாகப் இலயக்கிரமத்தைக் காட்டுவதே திருத்தேர்விழாவாம் மேலும் மும்மலமான முப்புராசுரர்களை சிரித்தெரித்து சிவன் ஆன்மகோடிகளைக் காப்பாற்றிய பாதுகாப்புத்தொழிலை உணர்த்துவதே தேரோட்டமாம் ஆன்மயத்தால் சிவபோகம் எய்த விழைவதே தேரோட்டவிழாவாகும், தனை ஞானசம்பந்தர் மூவார்புறங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார். என்றும், தொடுத்தார் புரம் மூன்று எரிய சிலைமேல் ஏரி ஒன்பகழியார் என்றும், நாவுக்கரசர் திரிபுரங்கள் துபயெழத்தின் சிலைகைக்கொண்ட போரான்" என்றும், அருணகிரிநாதர் முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம் என்றும் கூறுவர். ரதோத்ஸவம் சிவத்தன்மை எனும் எட்டுகுணங்கள் ஆன்மாவிற்கு விளங்குதற்பொருட்டு நடத்தப்படுவதாம் அவை 1.சர்வக்ஞத்வம், 2 நித்யதிருப்தி 3 அநாதிபோதம், 4 சுதந்திரதவம், 5.அலுப்தசக்தி, 6.அனந்தசக்தி 7 நிராமயான்மா விசுத்ததேகம் என்பன இறையருளால் விளைவிக்கப்படும் அருட்பேறு குணங்களாகும், இதனை தேர் உணர்த்துகிறது. ரதோத்ஸவ ஸேவாபலன் சிவனாருக்கு ஒருகிராமத்தில் சிறப்பாக தேர்த்திருவிழாவை அனைத்துவிதமான சுகபோகங்களையும் சிவனருளால் செய்வதால் அந்த ரதோத்சவத்தை செய்தவர், இவ்வுலகி பெற்று உய்வார். மேலும் அவர் மறுமையில் அவரது இருபத்தியோரு தலைமுறை யினருடன் குலத்தோருடன் சிவலோகத்திலேயே பேரின்பவாழ்வில் வசிப்பார் என்கிறது ஆகமம் மேலும் இந்த தேர்த்திருவிழாவைக் கண்டுதரிசிக்கும் மக்கள், சகலவிதமான பாவங்களிலிருந்தும் விடுபடுவார்கள் என்கிறது சைவாகம் பூர்வகாரணாகமச் சான்று இதுவே ஆகும். கராமாதிஷ விசேஷண ரதயாத்ராம் சிவஸ்யது. இஹ போகான் அவாப்நோதி தத் ப்ரஸாதாத் சிவஸ்யது. ஏக விம்சதி குலோ பேதம் சிவ லோகே வஸேத் சிவம் முச்யதே ஸர்வ பாபேப்யோ ரத ஸேவாபரோ பவேத் ரதோத்ஸவத்தின் நோக்கப்பயன்கள் மேலும் தேரோட்டவிழாவை ஆகமநூல்கள் விதிக்கின்ற பொழுதில் நோக்கப்பயன்களைக் கூறுகின்றன ஸகல பாவங்களை நீக்குவதும், அரசருக்கு வெற்றியைத் தருவதும், எல்லோரையும் பாதுகாப்பதும், தேரேற்றத்திருவிழாவாகும் என்கிறது. இவைகளை பெறச்செய்வதால் தேர்திருவிழா அவசியம் என்கிறது காரணாகமம், ஸர்வ பாபஹரம் புண்யம் ஸர்வ துக்க நிவாரணம், ஜயதம் பூப்தேச்சைவ ஸர்வேஷாம் ரக்ஷணாத்மகம், (காரணாகமம்) இவ்வாறு திருவிழாவில் சிவனை நேரில் கண்டுவணங்குவோருக்கு மறுபிறப்பில்லை என்று சிறப்புடன் கூறப்படுகின்றது. இதற்கான ஆகம வருஷஸ்தம் வா ரதஸ்தம் வா சந்தனாலிப்த தாண்டவம், ஸகிருத் தர்சன மாத்ரேண புனர்ஜன்ம ந வித்யதே (சைவாகமம்) இவ்வசனப்படி தேர்த்திருவிழாவைச் செய்வோர் இவ்வுலகில் ஸகலசுகபோகங்களையும் அனுபவித்து, பிறகு முடிவில் தேவர்கள் சூழ்ந்து வந்து வரவேர்க்கப்படுபவராய் சிவனாரின் பரமபத அடைவார்கள் என்கிறது சிவாகமம். இதனைதெரிவிக்கும் சான் இஹலோகே ஸ/கம் ஸர்வம் ஸம்ப்ராப்யைவ ததப் பரம் தேவைப் பரிவ்ருதோ கச்சேத் சிவஸ்ய பரமம் பதம். (சைவாகமம்) ஆதலால் மகோத்சவகாலத்தில் அனைவரும் தேர்திருவிழாவில் பங்கேற்று பரமனைப் பணிந்து அருள்பெற்று உய்ய வேண்டும் என்பதே அருள்நெறிமுறை. நாமும் - தேரில் உலாவரும் சிவனாரை தரிசித்து பயன்பெறுவோம் சிறப்பான முறையில் வெள்ளோட்டம் நடைபெறாத இறைவன் பிரார்த்தித்து ஆலய ஆதீனகர்த்தாவிற்கும் இளவரசிற்கும் தேரினைதிறம்படச் செய்த சிற்பாச்சாரியார்களுக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மெய்த்திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்!

சிவாகமரத்னா ப்ரம்மஸ்ரீ பரமேஸ்வர ஐங்கரசர்மா
M.A அதிபர், ஸ்தாபகர்

சித்திரத்தேர் சிறப்புற வாழ்த்துவோர்

C.K Paint Shop
No.19, Main Street, Pandatharippu.
T.P : 077 266 6051, 077 903 7690

கந்தன் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு

மங்களா ரேடேர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
T.P : 021 490 9000, 077 764 2009

நகுலேஸ் ஹாட்வெயர்
NAKULESH HARDWARE
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு,
T.P : 077 717 4445, 077 810 2898

ஸ்ரீ ராஜேஸ்வரி களஞ்சியம்
(மருந்துக்கடை)
SRI RAJESHWARY Stores
மானிப்பாய் வீதி
T.P : 021 224 4665, 077 284 0408
071 477 4090

Eagle Car Wash Lanka
(PVT) LTD
Kodikamam Road, Nelliyady
T.P : 077 149 2439

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CANADA
## JOB MARKET IS NOW OPEN FOR ALL

- Prospects galore for Skilled and Unskilled candidates
- Abundant Vacancies For **"Food Counter"** jobs that leads to PR
- Parents of Kids in Primary Education given 10 year Multiple Visa
- Whole immigration works handled by Canadian Legal Luminaries

+94 777 788 732 ☎ +94 11 289 0692

**Consolidated Academic Lanka (Private) Limited**
No.22-B, Station Lane, Nugegoda.
ceo@academiclanka.com | info@academiclanka.com
Web : www.academiclanka.lk

---

பல்கலைக்கழக பிரதிநிதிகளுடன் நேரடியாக கலந்துரையாட

## EDLOCATE நிறுவனத்தின் STUDY ABROAD DAYS



SCHOLARSHIPS FOR HIGH ACHIEVERS*

**Post study work rights for all***

Malaysia — Thu 10th Feb 3pm to 5.30pm

UK & Ireland — Sat 12th Feb 2pm to 4.30pm

New Zealand — Sat 19th Feb 10am to 1pm

*T&C APPLY

edlocate — Reach Light Beyond Borders — www.edlocate.lk

முற்பதிவுகளுக்கு: 077 2 223178

BEMARK

---

### சாவகச்சேரி
### கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
### விசேட பொதுக் கூட்டம் - 19.02.2022
### அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 19.02.2022 சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. செல்வரத்தினம் செந்தூரன் தலைமையில் சாவகச்சேரி டச்சு வீதி, செருக்கல் பிள்ளையார் கோவிலடியில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விசேட கூட்டத்திற்கான அழைப்பிதழ் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தனித்தனியே அனுப்பப்பட்டுள்ளது. கூட்ட அழைப்பிதழ் கிடைக்கப்பெறாத இப் பிரதேசத்தில் வதியாத அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி விசேட பொதுச் சபைக் கூட்டத்திற்கு குறித்த நேரத்துக்கு வருகை தந்து நிர்வாக சபைத் தெரிவை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கம்

---

### 230AC POWER BANK POWER KAD USE

230AC POWER BANK POWER KAD USE
ELECTRICITY SIVE BATTERY CHARGEING SAVE
POWER NO KAD WORKING 10 HOURS
DC 12V AC230V INVERTER POWERBANK
CAN USE ALL 230V AC POWER ELECTRONICS
Brand new 2 year warranty
BEST PRICE 15000/=
WiFi Color Night Vision CCTV 5MP Camera Full HD
Two Way Audio with LED Light Alarm / Security
Brand new 2 year warranty Installation
callme:0775555100 BEST PRICE 8500/=

(CS 18369) (2.6)

---

### இலங்கையின் முதற்தர நிதி நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

உங்கள் எதிர்கால கனவினை நனவாக்கிட இன்றே எம்முடன் இணையுங்கள்

- கிளை முகாமையாளர் **(Branch Manager)**
- நிதி ஆலோசகர் **(Sales Consultant)**
- குழு முகாமையாளர் **(Agency Team Manager )**

(அரச தனியார் உத்தியோகத்தர்களும் பகுதி நேரமாக பணியாற்றலாம்)

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல.
**076 183 4721**

(cs 18351) (2.7)

---

### சாவகச்சேரி மக்களே உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

**புளோரன்ஸ் நைற்றின்கேல் தாதியர் பயிற்சிப் பாடசாலை தனது அடுத்த கிளையை சாவகச் சேரியில் வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளது.**



- ஒரு வருட பயிற்சின் பின் தனியார் வைத்தியசாலையில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.
- அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**அனுமதிகளை பெற்றுக்கொள்ள எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்**

**முந்திக்கொள்ளும் முதல் 10 பேருக்கு அனுமதி கட்டணம் குறைக்கப்படும்.**

**புதிய மாணவர்கள் இணைத்து கொள்வதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

கடமை நேரம் : 9.00 - 3.00 மணிவரை
முகவரி : சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி, (சாவகச்சேரி மெடிகெயார் வைத்தியசாலைக்கு அருகில்)

தொடர்புகளுக்கு: 0777 186 438, 021 4928 916

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"தோல்வியே வெற்றிக்கான திறவுகோல், ஒவ்வொரு தவறும் நமக்கு ஏதோ ஒன்றைக் கற்றுக்கொடுக்கிறது."
- மோரிஹெய் உஷிபா

## தோற்றாலும் போராடுவோம்


கடந்த சில நாள்களாக வடக்கு ஒரு போராட்டக் களமாக மாற்றமடைந்திருக்கின்றது. இந்திய இழுவைப் படகுகளுக்கு எதிரான மீனவர் போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் எனத் தமிழர் பிரதேசம் கொதி நிலையில் இருக்கின்றது.

நீண்டகாலமாகத் தொடரும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி போராட்டங்கள் பல முன்னரும் நடத்தப்பட்டிருந்தன. ஆனால் தீர்வுகள் எவையும் இதுவரை கிடைத்ததாக இல்லை. தீர்வு கிடைக்காமைக்கு திட்ட மிடப்படாது மேற்கொள்ளப்படும் போராட்டங்களும் ஒரு காரணம் என்று கூறலாம். சில மணி நேரப் போராட்டங்களால் எதையும் சாதித்து விடமுடியாது. எமது இருப்புக்காக – வாழ்வாதாரத்துக்காக போராட்டங்களை மேற்கொள்ளும்போது, உரிய தீர்வு கிடைக்கும் வரையில் அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து எடுத்துச் செல்வது மிகமுக்கியமானது. அவ்வாறு மேற்கொள்வதன் ஊடாக்வே தீர்வுக்கான அழுத்தங்களைக் கொடுக்கமுடியும்.

தமிழர் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் வெறும் "அடையாளப்" போராட்டங்களாகவே மாறியிருந்ததை அவதானிக்க முடியும். காணி சுவீகரிப்பாக இருக்கட்டும், ஏனைய பிரச்சினைகளாக இருக்கட்டும் போராட்டம் என ஒரு பதாகையைக் காட்டி ஓரிரு மணி நேரம் கோஷங்களை எழுப்பிவிட்டு, அனைத்தையும் சுருட்டிக் கட்டிக்கொண்டு செல்லும் போக்கே எம்மிடையே இருக்கிறது. அரசியல்வாதிகளும், ஏனையோரும் போராட்டம் முடிந்த பின்னர் அடுத்த அலுவலைப் பார்க்கச் செல்ல, பிரச்சினையும் தீர்வின்றி மெல்ல அமிழ்ந்துவிடும். மீண்டும் ஏதும் அசம்பாவிதம் நடக்கும்போது மீண்டும் பதாகை , மீண்டும் கோஷம், மீண்டும் ஒரு போராட்டமுடிவு. இப்படி ஒரே காலச்சக்கரத்தில் சிக்குண்ட 'மாநாடு' பட சிம்பு போல, திரும்பத் திரும்ப ஒரே நிகழ்வுகளே நடந்தேறுகின்றனவேயொழிய, எந்தவொரு பிரச்சினையும் உரிய தீர்வைக் கண்டடையவில்லை.

இப்போதும் எமது இருப்புக்காக– வாழ்வுக்காக மக்கள் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் போராட்டங்கள் அடையாளப் போராட்டங்களா அல்லது தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான தொடர் தீவிரப் போராட்டங்களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நடத்தப்பட்டுவரும் தொடர் போராட்டத்தை அரசு வேண்டும் என்றே கண்டும் காணாது விட்டிருக்கின்றது. ஆனாலும் அவர்கள் எந்த உதவியும் இல்லாது, தங்களுக்கான நீதிக்காகத் தளராமல் இன்னமும் ஆயிரம் நாள்கள் தாண்டிப் போராடிக்கொண்டே இருக்கின்றனர். தமிழ் மக்கள் கற்றுக்கொள்ளவேண்டியது அதுவே. தோற்றோம் என்பதை விடப் போராடித்தோற்றோம் என்று வரலாற்றில் இருக்கட்டுமே.



ஹபாயா விவகாரம்

# இனப்பிரச்சினைக்கு வழிகோலக்கூடாது!

## சம்பந்தன் வலியுறுத்து

**கொழும்பு, பெப். 6**

**திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் எழுந்துள்ள 'ஹபாயா' சர்ச்சையால் அதிருப்தியடைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், இது இனப்பிரச்சினைக்கு வழிவகுக்கக்கூடாது எனவும் வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழ்பேசும்மக்கள் என்ற ரீதியில் தமிழ் மக்களும் முஸ்லிம்மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அத்தியாவசியம். 'ஹபாயா' அணிந்து வந்திருந்த குறித்த முஸ்லிம் பெண் ஆசிரியர் உண்மையில் அதிபர் மீது தாக்குதல் நடத்தியிருந்தால் அது தவறான விடயம். இந்தக் கருமத்தை நாம் சமாதானமாகத் தீர்க்க வேண்டும்.
ஒருவரையொருவர் மதித்து மற்றவர்களுடைய கருமத்துக்கு சுயமரியாதைக்கு இறைமைகளுக்குப் பாதகம் இல்லாமல் நாம் செயற்படவேண்டும். அனைவரும் இந்தக் கடமையை ஒற்றுமையாகச் செய்ய வேண்டும் என நான் மிகத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். என்றார். (ம-22)

# வாள்களைக் காண்பித்து அச்சுறுத்திக் கொள்ளை!

யாழ்ப்பாணம், பெப். 6
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருவேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு வாள்களைக் காண்பித்து அச்சுறுத்தி கொள்ளையிடப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்லிப்பழை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இரவு பயணித்த முதியவரிடம் வாளைக் காண்பித்து அவர் அணிந்திருந்த தங்க மோதிரத்தையும் 5 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.
அதேவேளை, மூளாய் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், மூளாய் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள சித்திவிநாயகர் வர்த்தக நிலையத்துக்குச் சென்று உரிமையாளரின் கழுத்தில் கத்தியை வைத்து 85 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை அபகரித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
(ம-125)

நாளை 07.02.2022 திங்கட்கிழமை தை 25
சுபநேரம் : 12.35 - 02.05
ராகுகாலம் : 08.05 - 09.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவாகக் கேட்கிறேன்*

# வாழும் மீனவர்களையாவது காப்பாற்ற முன்வாருங்கள்!

*சுப்பர்மடம் போராட்டத்தில் நபரொருவர் வலியுறுத்து*

**யாழ்ப்பாணம், பெப். 6**

**உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவாக கேட்கிறேன். அத்துமீறல்களை கட்டுப்படுத்தி, உயிரோடு வாழும் மீனவர்களை காப்பாற்றுங்கள் என்று சுப்பர்மடம் பகுதியில் இடம்பெற்றுவரும் போராட்டத்தில் கலந்துகொண்ட நபரொருவர் வலியுறுத்தினார்.**



கறுப்பு உடையுடன் நேற்றுமுன்தினம் போராட்டக் களத்துக்கு வந்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் கடலில் உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவாக, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துமாறு கோருகிறேன். அதே வேளை இந்திய மீனவர்களிடமும், எமது கடல் வளங்களை, எமது சக மீனவர்களின் வாழ்வாதரத்தை, உயிரை அழிக்காதீர்கள் எனக் கோருகிறேன். உயிர் வாழும் மனிதர்களாக பல தடவைகள் பலரிடம் கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஐந்து நாள்களாக தொழிலுக்குச் செல்லாமல் தொடர் போராட்டத்தினை முன்னெடுத்து வருகிறோம். எமக்கான தீர்வைத் தருவதற்கு எவரும் தயாராக இல்லை.

அதனால், உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவாக கோரிக்கை விடுக்கிறேன். உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவுக்கு மதிப்பளித்தாவது நடவடிக்கைகளை எடுங்கள். அந்த மீனவர்களின் ஆத்மா சாந்தியடையும் - என்றார். (ம-26)




## நேரக்கணிப்பாளருக்கு விண்ணப்பம் கோரல்

கொடிகாமம், பெப்.6

தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் நேரங்களை கண்காணிப்பதற்கு நேரக்கணிப்பாளர்கள் இருவர் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிவரக்கோவையோடு கொடிகாமத்திலுள்ள தென்மராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்துக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை 12 மணிக்கு முன்பாக சமுகம் தரும்படி சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (வ-159)

## வீடுகளுக்கு சென்று பூஸ்டர் தடுப்பூசி

கொழும்பு, பெப்.6

வீடுகளிலிருந்து வெளியேற முடியாதவர்களுக்கு, வீடுகளுக்கே சென்று பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்த நடமாடும் வேலைத்திட்டத்தில், இராணுவ மற்றும் சுகாதாரத்துறை பிரதிநிதிகளின் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-இ)



## சுதந்திரதினத்தில் வீட்டில் மது விற்பனை

*ஒருவர் கைது*

யாழ்ப்பாணம், பெப். 6

சுதந்திரதினத்தில் வீட்டில்வைத்து மதுப் போத்தல்களை விற்பனை செய்த ஒருவர் காங்கேசன்துறை சிறப்புக் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை புதிய கொலனி பகுதியில் உள்ள அவரது வீட்டில் 180 மில்லி லீற்றர் கொள்ளளவுடைய 54 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுதந்திரதினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் மதுபானசாலைகள் நேற்றுமுன்தினம் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் அதிக விலைக்கு மதுபான போத்தல்களை விற்பனை செய்யும் நோக்கில் அவர் இவ்வாறு செயற்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-23)



சுபீட்சத்தின் இலக்கு வேலைத்திட்டத்தின் கீழ், ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் போக்கட்டி அ.த.க பாடசாலையில் வகுப்பறை மற்றும் மைதான திருத்தத்துக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது. (ம-ரி1-159)

## இலங்கையின் சுதந்திர தினம் தமிழர் தாயகத்தின் கரிநாள்!

*டென்மார்க்கிலும் போராட்டம்*

கொபென்ஹகன், பெப். 6

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து, டென்மார்க்கில் நேற்றுமுன்தினம் பேரணி நடத்தப்பட்டது. டென்மார்க்கின் நாடாளுமன்ற முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில், தமிழர்கள் மீதான இனவழிப்பை நினைவுகூரும் விதமான பதாகைகளை கவன்வீர்ப்பாளர்களை ஏந்தியிருந்தனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பிரதிநிதி அஹமட் பிரபுவுக்கு தமிழ் அரசியல் தலைவர்கள் கடிதம்!

## கண்டும் காணாத போக்குக்கும் கண்டனம்

தெற்கு, மத்திய ஆசியா, ஐக்கிய நாடுகள், மற்றும் பொதுநலவாய நாடுகள் விவகார அமைச்சரும் மோதல்களின் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கான பிரிட்டன் பிரதமரின் சிறப்புப் பிரதிநிதியுமான தரிக் அஹமட் பிரவுக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ள தமிழ் அரசியல் தலைவர்கள், தரிக் அஹமட் பிரபு இலங்கையில் தொடரும் சட்டவிரோதமான கைதுகளும் தடுத்து வைப்புக்களும், சித்திரவதைகளும், காணாமற் போதல்களும் தொடர்பாக எந்தவிதக் கருத்தும் தெரிவிக்க தவறியமைக்குக் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் பொலிஸாரின் தடுப்பில் நடைபெற்ற சித்திரவதைகளும் உயிரிழப்புகளும், எழுந்தமானமான கைதுகள், சட்டவிரோத தடுத்துவைப்புக்கள், காணாமற்போதல்கள், மர்மச் சாவுகள் என்பன பற்றிய தொடர் அறிக்கைகள், சமீபத்தில் பாதிக்கப்பட்டவர்களது விவரங்கள், தூண்டுதலாக அமையும் காரணங்கள், முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மீதான வன்முறை, இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் என பல்வேறு உப தலைப்புக்களில் இந்தக் கடிதம் விரிவான விவரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்புக்களின் கீழும் ஊடகங்களில் வந்த சம்பவங்கள் ஆதாரமாக வழங்கப்பட்டுள்ளன.

நவம்பர் 2019 முதல் இன்று வரையான காலப்பகுதியில், ஊடகங்களில் பதிவான, 808 மனித உரிமைமீறல் சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்ட, 66 பக்கங்கள் கொண்ட விரிவான பட்டியலும் இந்தக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சி வழங்கும் நடவடிக்கையை ஸ்கொட்லாந்துப் பொலிஸார் நிறுத்தியதை வரவேற்கிறோம் என்றும், இந்த முடிவில் மாற்றம் இருக்காது என்று நாம் நம்புகின்றோம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் இலங்கைப் பொலிஸாரின் தடுப்பில் நடந்த சித்திரவதைகள் மற்றும் மரணங்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளனர். நாட்டில் உள்ளவர்களுக்கு இங்கு நடக்கும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி வெளிப்படையாகக் கதைப்பதற்கு சுதந்திரம் இல்லை என்றும், வெளிநாடுகளில் உள்ள ஊடகவியலாளர்களே இந்தச் சம்பவங்கள் பற்றி அச்சமின்றி செய்தி வெளியிடும் நிலைமையே இப்போது காணப்படுகின்றது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினரால் தமிழர்கள் சட்டத்துக்குப் புறம்பான முறையில் கைதுசெய்யப்படுவது, கடத்தப்படுவது, சட்டத்துக்கு மாறாக தடுத்துவைக்கப்படுவது பற்றிய முறைப்பாடுகள் தொடர்ச்சியாக எமக்குக் கிடைக்கின்றன, அது மட்டுமன்றி பல தமிழ் இளைஞர்கள் மர்மமான முறையில் காணாமல் போவதும் பின்னர் மரணமடைவதும் பற்றி அதிர்ச்சியூட்டும் தகவல்களும் எமக்குக் கிடைக்கின்றன என்று அவர்கள் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கைதுசெய்யப்படுபவர்களில் பலருக்கு விடுதலைப் புலிகளுடன் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை என்றும், போர் நடந்த காலத்தில் அவர்களில் பலர் பதின்ம வயதைக்கூட எட்டியிருக்கவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் டுவிற்றர் பதிவை மேற்கோள்காட்டி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

போரில் இறந்தவர்களை நினைவுகூர்ந்தமையும் எங்கள் உரிமைகளுக்காக அமைதி வழி ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டமையும் சமூக ஊடகங்களில் போரில் இறந்தவர்களைப் பற்றிய பதிவுகளைப் பகிர்ந்தமையும் பலர் கைது செய்யப்படுவதற்கு தூண்டுதலாக அமைந்தது என்று கடிதத்தில் சுட்டிக்காட்டிய தமிழ்த் தலைவர்கள், கைதுசெய்யப்பட்டவர்களில் ஊடகவியலாளர்களும் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள் பலரும் மீளக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள தமிழ்த் தலைவர்கள், ஆர்ப்பாட்டங்கள் நினைவேந்தல்களில் பங்குபற்றியதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பயங்கரவாத தடுப்புப் பிரிவால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதையும், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டதையும் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை அதிகாரிகள் மீது பிரிட்டன் தடை விதிப்பதுடன் அதனது உலகளாவிய நீதி அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், எங்களது மக்கள் பலரை நாட்டைவிட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் புகலிடம் கோருவதற்குக் காணரமாக இருக்கும் தற்போதும் நடந்துகொண்டிருக்கும் மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றி பிரிட்டன் பேசவேண்டும் என்றும் தாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான நேரடி வாக்குமூலங்கள், மேலதிக தகவல்கள் மற்றும் கூடுதல் ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், இது தொடர்பில் பிரிட்டன் அரசு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுப்பதற்கு உதவுவதற்கும், தாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றும், இதற்காக ஒரு சந்திப்பை நாங்கள் கோருகிறோம் என்றும் அத்தக் கடிதத்தின் ஊடாகத் தமிழ்த் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

நீதியரசரும், முன்னாள் வடமாகாண முதலமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினராகிய, தர்மலிங்கம் சித்தார்த்தன், வன்னி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிமலநாதன், மட்டக்களப்பு மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஆகியோருடன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடமாகாண சபை யின் முன்னாள் அமைச்சரும் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலருமான அனந்தி சசிதரன் ஆகி யோரும் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளார்கள். யாழ். மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் இதே கடிதத்தை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார்.

---

# பஸில் கூறிய தகவலால் நெருக்கடியில் இலங்கை

கொழும்பு, ஜன.6

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச ஊடகங்களிடம் தெரிவித்த கருத்துத் தொடர்பாக சர்வதேச அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்கள் கவனம் செலுத்தி வருகின்றன என்று தெரியவருகின்றது.

சர்வதேச போர் நியமங்கள் மற்றும் மனித உரிமைகள் விழுமியங்கள் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய விடயங்களின் அடிப்படையில், நிதியமைச்சரின் தகவல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதியமைச்சர் வெளியிட்டுள்ள இந்தத் தகவல் தொடர்பாக முறையான விசாரணைகளை நடத்த சர்வதேச அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்கள் சர்வதேச மட்டத்தில் கலந்துரையாடி வருகின்றன என்று கூறப்படுகிறது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச இந்த விடயத்தை பெரிதாக பொருட்படுத்தாமல் வெளியிட்டிருப்பதை காண முடிந்தாலும் சர்வதேசத்தில் அது பாரதூரமான அவதானிப்புக்கு உள்ளாகியுள்ளது என இலங்கையில் செயற்படும் மனித உரிமை தொடர்பான சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார்.

இது எதிர்வரும் காலத்தில் நடக்கும் ஜெனிவா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் கட்டாயம் சர்ச்சைக்குரிய தொனிப்பொருளாக மாறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பஸில் ராஜபக்சவின் இந்தத் தகவல் தொடர்பில் கண்டிப்பாக சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிறுவனங்கள் கவனம் செலுத்தும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞான விரிவுரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற எதிர்பார்த்திருக்கும் சந்தர்ப்பத்தில் இப்படியான தகவலை வெளியிட்டுள்ளதன் மூலம் அதனுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# போதைப்பொருளுடன் மூவர் மன்னாரில் கைது

மன்னார், பெப்.6

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் எருக்கலம்பிட்டி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் 76 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.


சந்தேகத்துக்கிடமான மோட்டார் சைக்கிள் ஒன்றைச் சோதனையிட்டபோது போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்றும், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், அவரிடம் இருந்து முச்சக்கர வண்டி ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் மற்றும் பேசாலையைச் சேர்ந்த 21 மற்றும் 39 வயதுடையவர்கள் என்றும், சந்தேகநபர்கள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். (எ-56)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 02 • 11 • 1952



மறைவு 16 • 02 • 2021

### அமரர் கந்தையா நவரட்ணம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

குடும்பத்தின் குலவிளக்காய் மிளிர்ந்து
ஆலமரமென நிழல் பரப்பிய எம் தந்தையே
வாழ்வதற்கு நன்றே வழிகாட்டி
உங்கள் விழுதுகளாய் கிளை பரப்பி விரிந்து
வாழ்வில் உயரும் நேரத்தில். உம் வேந்தன் (ராசா)
காடு நோக்கி சென்றதேனோ?
உங்கள் புன்னகை பூத்த முகம் கண்டு
இறைவனுக்கும் உங்களுடன் நேரம் கழிக்க
ஆசை வந்ததோ?
உங்களை தெரியாத ஆட்கள் உண்டோ!
உங்களை புகழாத ஊரார் உண்டோ!
பல காலம் தம்மோட வாழ பலதவங்கள்
செய்ய வேண்டுமோ?
எம்மை பாதிவழியில் தவிக்கவிட்டு சென்றதேனோ?
ஒரு ஆண்டு ஆகிவிட்டதாம் தம் நினைவில் மாற்றமில்லை
வருடங்கள் கடந்தாலும் வாழ்ந்த கதை மறைந்திடுமோ?
நீங்கள் இறை உருவில் இறைவனால். எம் நினைவில்
உயிர் வாழ்கின்றீர்கள் என்றென்றும் எம் இதயங்களில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!*

பிருந்தாவனம்
இல.38, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(cs.42746) (2.6)

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 • 04 • 1957



மறைவு 07 • 01 • 2022

கடந்த (07.01.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி

### சிவபாதசுந்தரம் விஜயலட்சுமி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்


1010 / 30, கே.கே.எஸ். வீதி,
தலையாழி லேன்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(cs.18327) 92.6)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 03 • 12 • 1942



ஆண்டவன் அடியில் 04 • 02 • 2022

### திரு.இராஜரெத்தினம் பாலசுப்பிரமணிம்

புங்குடுதீவு மடத்துவழி 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுருவில் வேலணைமேற்கை வசிப்பிடமாகவும், சுன்னாகம் சூறாவத்தையை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட திரு. இராஜரெத்தினம் பாலசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (04.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அனனார் காலஞ்சென்றவர்களான இராஜரெத்தினம் - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜபூமளத்தின் அன்புக்கணவரும், ஸ்ரீபாஸ்கரனின் அன்புத் தந்தையும், சுகதாஷினியின் அன்பு மாமனாரும், சிந்துஷன், லக்ஷன், சபீஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தனபாலசிங்கம், தியாகராஜா, நாகேஸ்வரி, கனகலட்சுமி, காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பவளமலர், லட்சுமி, கோமதி மற்றும் காலஞ்சென்றவர்களான ரகுநாதன், யோகலிங்கம் மற்றும் ஞானசேகர், காலஞ்சென்றவர்களான கருணைநாயகி, நடராஜா, விமலநாதன் மற்றும் புஸ்பகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக சூறாவத்தை சுன்னாகம் இல்லத்தில் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 993 7406
076 588 6319

(cs42621) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 • 12 • 1955



மறைவு 04 • 02 • 2022

### திருமதி ஜெகதீஸ்வரன் கமலினி

கலைமகள் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரன் கமலினி 04.02.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - அன்னம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர் களான பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும், சிவசுப்பிரமணியம் அன்னராணி (Germany) ஆகியோரின் சகோதரியும், செல்வராணி, ஜெகதாம்பிகை, விஜயகுமார் (பாரின்), சிவநேசன் பவானி, கருணாகரன் (பிரான்ஸ்), சுகுணகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சஞ்ஜிவன், கஜிலா, தர்ஜிகா, பானுஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தாரணி, ராஜ்குமார், கோபிகரன், கிஷ்ணகுமார் ஆகியோரின் மாமியாரும், சவிந், அமிழ்தினி, அஜின், ஜஸ்நிகா, பிரஜீஸ், கிருத்திகா, அட்விகா, ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

கலைமகள் வீதி,
கல்வியங்காடு.

(cs442734) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# இணுவில் திரு
# ஸ்ரீ பரராஜசேகரப்
# புனராவர்த்தன அஷ்டப
# மஹாயாக கும்பாபிஷே

## ஆசியுரை



**சிவஸ்ரீ சோமஸ்கந்த அரவிந்தக் குருக்கள்**
பிரதமகுருக்கள்
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளைப்பிள்ளையார் கோவில் .

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளாம் இறைவன் ஈசன் ஆன்மாக்களாகிய எமக்கு தனு, கரண புவன போகங்களும் தந்து வழிகாட்டிய போதும் அவை காணாது என உணர்ந்து வேதங்கள் ஆகமங்களை அருளினார். சிவபெருமானை நாம் அடைவதற்கு ஆகமங்கள் எமக்கு சொல்லித்தரும் உபாயம் ஆலய வழிபாடாகும். அதானால் தான் ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் என அழைக்கப்படுகின்றது. இவ் ஆலயத்தினை பொருத்தமான இடத்தில் நிர்மானிப்பதற்கு தெரிவு செய்து அவ் இடத்தை உழுது புனிதப்படுத்தி ஆகம நெறிமுறைகளுக் அமைவாக நிர்மானித்து கும்பாபிஷேகம் செய்து நித்திய, நைமித்திய கிரியைகளை செய்து இறைவன் அருள் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் எல்லையில்லா சிவானந்தப் பேற்றாம் முக்திக்கு வழி காட்டப்படுகிறது. இவற்றுள் மிகமுக்கியமாக நைமித்திய கிரியைகளுள் ஒன்று கும்பாபிஷேகம் ஆகும். மஹா கும்பாபிஷேகமானது பன்னி ரெண்டு வருடாங்களுக்கு ஒருமுறை நடாத்துவது சாஸ்திர சம்மதமாகும். அஷ்டபந்தனத்தினுடைய கால எல்லை பன்னிரெண்டு வருஷங்களாகும். இவ்வாறு நடைபெறும் கும்பாபிஷேகங்களில் எமது ஆலயத்தில் இன்று நடைபெறும் மஹா கும்பாபிஷேக மானது மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல விநாயகருடைய திருவருள் தான் காரணம்.

எமது ஆலயத்தில் இம்முறை நடைபெறும் மஹா கும்பாபிஷேகமானது நாங்கள் அறிந்து ஏழாவது தடவையாக நடைபெறு கின்றது. அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை எமது இணுவில் ஊர்மக்கள் அனைவரும் பெரும் நன்கொடைகள், தொண்டுகள் அர்ப்பணிப்புகள் போன்றவற்றின் மூலமாக எமது ஆலயத்தை வளர்த்துள்ளனர். சிறு கைத்தொழிலில் ஈடுபடுவோரும், விவசாயம் செய்தவர்களும் வர்த்தகம் செய்தவர்களும் பெரும் தொழில் அதிபர்களும் சேர்ந்து "எமது பிள்ளையார்" என்ற நோக்கத்தோடு தமது அர்ப்பணிப்புக்களையும் காணிக்கைகளையும் செலுத்தி பிள்ளையாரை "எனது பிள்ளையார்" என்ற எண்ணத் தோடு வளர்த்து வந்தார்கள். இவ்வாறு எல்லாரது பூரணமான சரீர திரவிய தன மானசீக பிரார்த்தனைகள் (சரீர உதவி, பொருள் உதவி, பண உதவி மற்றும் மானசீகமான) அதாவது கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவேண்டும் என்று மனதார பிரார்த்தனை செய்தவர்கள், இணுவில் விநாயக தொண்டர்கள் எல்லோரும் இரவு, பகல் பாராமல் தமது சரீரத்தினால் சரியைத் தொண்டு மூலம் செய்த உதவிகள் என அனைவரது பூரணமான ஒத்துழைப்பினால் எமது ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையாரின் நவகுண்டம் அமைத்து நடைபெறும் இக் கும்பாபிஷே கம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் பாதார விந்தங்களைத் தொழுது நல்லாசிகள் வழங்குவதோடு உலகெங்கும் வாழுகின்ற எம்பெருமான் அடியார்கள் அனைவருக்கும் மற்றும் எமது கிராமம், எமது நாடு, எமது தேசம் மற்றும் உலகெங்கும் வாழ்கின்ற அனைத்து மக்களும் சுபீட்சமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ பரராஜசேகரப் பிள்ளையாரை மனதார பிரார்த்திக்கின்றேன்.

* * * * *

## ஆசியுரை



**பிரதிஷ்டா பிரதமகுரு வேதாகம சிரோன்மணி**
**சிவஸ்ரீ சத்திய சிவகுமாரக்குருக்கள்**
இணுவில்

ஐம்பூதங்களில் ஐக்கியமாகி எங்கும் நிறைந்துள்ள ஐந்துகரத்தான் ஆனைமுகத்தான் இணுவையம்பதி அருள்மிகு பரராஜசேகரப் பிள்ளையார் பொற் பாதங்களை மனதில் நினைந்து வணங்கி "நிகமோத்த நவகுண்ட பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்" எனும் பெருஞ்சாந்தி வைபவத்தில் என்றுமே "எங்கள் பிள்ளையார்" என்கின்ற உணர்வு பூர்வமான பக்தியுடன் வழிபடுகின்ற அனைத்து பக்த அடியார் வாழ்விலும் சகல விதமான நன்மைகளும் பெற வேண்டும் என்று எம்பெருமானை மனதார வேண்டிக் கொண்டு வாழ்வில் நல்லெண்ணம், நற்சிந்தனை, நற்செயல், நல்வாழ்க்கை, நற்சாந்தி என்கின்ற உன்னதமான உயர்வான வாழ்க்கையாக இம் மனிதப் பிறப்பான இவ் ஜென்ம வாழ்க்கை சிறப்பாகவும் சகல சௌபாக்கியங்களும் பெற்று அனைவரும் வாழ வேண்டும் என்று எம்பெருமானை வேண்டிக் கொண்டு நல்லாசிகள் வழங்குவதில் மனநிறைவடைகின்றோம்.

இவ் ஆலயத்தின் தெய்வப் பணிகளை என்றும் தமது கடமையாக கொண்டு உலகமெங்கும் வாழ்கின்ற அடியார்களுக்கும், ஆலய திருப்பணி மற்றும் உபயங்கள் ஆலயத்தொண்டு என்பவற்றை பூரண மனதோடு செயலாற்றிக் கொண்டிருக்கும் பக்தர்கள் அனைவருக்கும் மற்றும் உந்துதல் சக்தியாக பணியாற்றும் ஆலயம் சார்ந்த விநாயக அடியார்களுக்கும் எல்லாம் வல்ல பரராஜசேகர விநாயகப் பெருமான் திருவருள் பரிபூரணமாக கிடைக்கப் பெற வேண்டி பிள்ளையாரை மனமுருக பிரார்த்தனை செய்து நல் வாழ்த்துக்களும் நல் ஆசிகளும் கூறுகின்றோம். கல்வி, கலைகள், தமிழ்கலாச்சாரம் என்ற உள் உணர்வோடு சிறப்பாக அனைவரும் வாழவேண்டி பிள்ளையாரப்பாவை பிரார்த்தனை செய்து ஆலய வளர்ச்சிக்கும் நித்திய பூஜை அனுஷ்டானங்களுக்காகவும் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை அர்ப்பணித்து பிள்ளையார் பாதத்தினை சரணாகதி அடைந்த தெய்வத்திரு சிவஸ்ரீ வை சோமஷ்கந்த குருவை மனதில் நினைந்து மன நிறைவாக விநாயகப் பெருமானின் திருவருள் வேண்டி அனைவருக்கும் நல்லாசிகள்! நல்லாசிகள்! நல்லாசிகள்!

* * * * *

## ஆசியுரை



**வாழ்நாள் சாதனையாளர் சிவாகமகலாநிதி**
**பிரம்மஸ்ரீ தானுநாத மகாதேவக் குருக்கள்**
காயத்திரி பீடம், இணுவில்

**இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் மஹா கும்பாபிஷேகம் உலகத்திற்கு நலமெலாம் தருவதாகுக.**

இணுவில் திருவருள்மிகு வல்லவாம்பிகா சமேத பரராஜசேகர விநாயகர் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற திருவருள் கைகூடியிருக்கிறது. இவ்வாலயத்தின் பக்தர்கள் விநாயகரிடம் தீராத பக்தி கொண்டவர்கள். 12 வருடத்திற்கு ஒரு முறை ஆலயத்தை புதுப்பிப்பதிலும் மஹாகும்பாபிஷேகம் நடத்துவதிலும் சிரத்தையோடு பணியாற்றி வருவது நாமெல்லோரும் அறிந்ததே. இந்த ஆலயத்தின் ஆசார்ய பரம்பரையும் சிறப்பு மிக்கது. பிதாமகராக இருந்த சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள், சிவஸ்ரீ சிவஞானக்குருக்கள், பிரம்மஸ்ரீ சோமஸ்க்கந்தகுருக்கள், பிரம்மஸ்ரீ அரவிந்தக்குருக்கள் எல்லோருமே விநாயகருடைய நித்திய நைமித்திய கிரியைகளை நடாத்துவதில் சிரத்தை மிக்கவர்களாக இருந்தவர்கள். இப்போது நடைபெறும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் நடாத்தி வைத்த போது நான் அவருக்கு பத்ததி வாசித்திருக்கிறேன். இவ்வாலயத்தின் நித்திய சிவாச்சார்யாராக பணியாற்றிய பிரம்மஸ்ரீ சோமஸ்க்கந்த குருக்கள் சமஸ்கிருத அறிவு நிரம்பியவர். இம்முறை நடைபெற இருக்கும் கும்பாபிஷே கத்திற்கு அவர் 6 மாதங்கள் சிரமப்பட்டு ஆலயத்திற்கு சொந்தமாக ஒரு பத்ததியை தன் கையால் எழுதி வைத்திருக்கிறார். நோயுற்றிருந்த நிலையிலும் அவர் அப்பணியை நிறைவு செய்து வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டியிருக்கிறார். அவர் இந்த ஆலயத்தை வழி நடத்தியதே ஒரு தனிச்சிறப்பு. மக்கள் அனைவரும் திருப்பணிகளுக்கு வாரி வாரி கொடுத்து அவருக்கு பக்க பலமாக நின்றார்கள். அவர் விண்ணிலிருந்து இம்முறை நடைபெற இருக்கும் இவ்வாலய கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற அருள் புரிவாராக!

## ஆசியுரை



**சிவஸ்ரீ உருத்திரமூர்த்தி குருக்கள் அபராஜிதக்குருக்கள்**
இணுவில் கந்தசுவாமி கோவில்

சைவமும் தமிழும் கலைகளும் சிறந்து விளங்கும் இணுவைப் பதியில் கோயில் கொண்டு விளங்கும் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் பரராஜ சேகரனால் கட்டப்பட்ட பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவர இருக்கின்ற கும்பாபிஷேக சிறப்பு மலர் சிறப்போடு மலர ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பரராஜசேகரப்பிள்ளையாரின் கும்பாபிஷேகம் சிறப்புற்று எல்லா அடியவர்களும் சிறப்பான ஆனந்தப் பெருவாழ்வும் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து இணுவில் திருநெறிய தமிழ்மறைக் கழகம் வெளியிடும் சிறப்பு மலர் சிறப்போடு வெளிவர இணுவை கந்தசுவாமியாரையும் பரராஜசேகர விநாயகரையும் வேண்டி ஆசிகூறி அமைகின்றேன்.

* * * * *

## ஆசியுரை



**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசார்ய ஸ்வாமிகள்**
நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்

புனிதப் பிரதேசமான இணுவில் பதியில் நீண்ட காலமாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாருக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். வரலாற்று பெருமைமிக்க பரராஜசேகர மன்னனால் பூசிக்கப்பட்ட ஆலயமாக இது விளங்குவதுஅனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. விநாயக வழிபாடு அனைத்து மக்களாலும் போற்றி வழிபடப்படுகின்ற வழிபாடாகும். இணுவில் பிரதேசத்தில் இசையும் கலையும், தமிழும் , சமயமும், பண்பாட்டு கலாசார விழுமியங்களும் வளர்ந்து வருகிறது. இப்பிரதேசம் நிறைவான பல ஆலயங்களைக் கொண்டும் கற்றவர்களும், கற்றபடி ஒழுகுபவர்களைக் கொண்டும் ஏனைய பிரதேச மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இங்கு நடைபெறும் கும்பாபிஷேகம் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வையும் மன அமைதியையும் நாட்டில் சந்தோஷமான செய்தியையும் இறைவன் தந்தருள வேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இக் கும்பாபிஷேக மலரை வெளியிடும் திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். இக் கும்பாபிஷேக தினத்தில் அனைவரும் விநாயகரை வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

* * * * *

## ஆசியுரை



**கலாநிதி ஆறு திருமுருகன்,**
தலைவர் - ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.
தலைவர்- சிவபூமி அறக்கட்டளை இலங்கை
உப தலைவர் அகில இலங்கை இந்து மாமன்றம்

எங்கள் குடும்பத்தின் குல தெய்வமாகிய இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். மிகத்தொன்மை வாய்ந்த இத் திருக்கோவில் அந்நியர் ஆட்சியில் சிதிலமுற்றது என்பது வரலாறு. மடத்தில் வைத்து மறைவாகப்பூசித்து எம் முன்னோர் பாதுகாத்து வழிபாட்ட பாரம்பரியம் இன்று பெரும் விருட்சமாக வளர்ச்சி பெற்றுவிட்டது. ஈழத்திலுள்ள விநாயகர் தலங்களில் மிகச்சிறந்த சிறப்புமிக்க தலமாக இத்தலம் இன்று விளங்குகிறது. அடியார்களின் அயராத பக்தியின் விளைவாக இத்தலம் பெருங் கோவிலாகக் காட்சியளிக்கிறது. ஒரு காலத்தில் எனது தாயார் போன்ற பெண் அடியவர்கள் சாணி கொண்டு மெழுகிய பெரிய கோயில் இன்று பளிங்குக் கருங்கற்களை தளமாகக் கொண்ட செல்வச்சிறப்போடு காட்சி தருவது நாம் செய்த புண்ணியமே. எனது தாயாரின் தந்தை பொன்னையா (பொன்னர் அப்பா) தினமும் விடிவிளக்கு ஏற்றி அழுது கும்பிட்ட வரலாற்றை மூத்தோர் சொல்லி மகிழ்வார்கள். பத்துச் சதம் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் அன்று அதன் பெறுமதிக்கே அல்லற்பட்ட காலம். அப்படியான சூழலில் ஈரநெஞ்சோடும், ஈர வேட்டியுடனும் அவர் ஏற்றிய விளக்கின் ஒளி எம் சந்ததியை வாழ வைத்தது. இன்று பிள்ளையாரின் பக்தர்கள் தம்மை வாழவைத்த குலதெய்வத்திற்கு எக்குறையும் விடாது பல கோடி செலவு செய்து இந்திரலோகமாக மாற்றியுள்ளார்கள். இணுவில் மண்ணின் சிறப்பைக் காக்கும் பரராஜசேகரப்பிள்ளையாரின் திருவருட் சிறப்பால் பன்னி ரெண்டு ஆண்டுக்கொருமுறை காலந்தவறாது புதிய திருப்பணிகள் நிறைவேறிக் கும்பாஷேகம் நடைபெறுவது வழக்கமாகிவிட்டது. அற்புதம் நிறைந்த எம்பெருமானின் கும்பாஷேகம் சிறக்க உழைத்த சிவாச்சாரிய பெருமக்களுக்கும், திருப்பணி வேலைகளில் அயராது உழைத்த அடியவர்களுக்கும் என்றும் நாம் நன்றியுடையோம். மஹா கும்பாபிஷேகம் சிறக்க ஆவணமாக மலரை வெளியிட முன் வந்த திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினருக்கும். இதய பூர்வமான வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகுக. கும்பாபிஷேகம் சிறப்போடு நடைபெற்று, அனைவரும் சீரோடும், சிறப்போடும் வாழ சிறியேனின் நல்லாசி களையும், பிரார்த்தனையையும் தெரிவித்து அமைகின்றேன்.

* * * * *

## வாழ்த்துச் செய்தி



**அ.உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர், இந்து சமய,
கலாசார அலுவல்கள் திணைக்களம, இலங்கை .

யாழ்ப்பாண மாவட்டத்திலே, இணுவில் பகுதியிலே, மடத்துவாசற் பதியிலே வீற்றிருந்து அருளாட்சி செய்யும் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் பெருங்கருணை அற்புதமானது. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலந்தொட்டு அருளொளி வீசும் பழமைமிகு ஆலயமிதுவாகும். 1928 ஆம் ஆண்டு முதல், காலந்தோறும் கும்பாபிஷேகப் பெருவிழாக் காணும் புனித பதியிது. முதன் முதலில் 33 கும்பங்கள் அமைத்துக் கும்பாபிஷேகம் கண்ட பதி என்னும் பெருமைக்குரிய தலமாகவும் விளங்குகிறது. எதிர்வரும் 06.02.2022 அன்று ஏழாவது கும்பாபிஷேகப் பெருவிழாக் காணவிருப்பது நம் தவப்பயனே! ஆலயங்கள் சமுதாய மையங்களாகச் செயற்படவேண்டும் என்பதற்கு ஏற்றாற்போல, அறநெறிப் பாடசாலை மூலமாகச் சமய, விழுமியக் கல்வி வழங்குதல், கல்விச் சேவை நல்குதல், வறியவர்களுக்கு உதவுதல் முதலான பல செயற்பாடுகளை ஆலய நிர்வாகத்தின் கீழும், அதன் ஓர் அங்கமாகச் செயற்பட்டு வருகின்ற திருநெறிய தமிழ் மன்றம் மூலமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. காலத்திற்குக் காலம் இப்புண்ணிய பதியின் மீது பாடப்பட்டு வருகின்ற பக்தி இலக்கியங்கள் பல இப்பதி உறையும் இறைவனின் பெருங் கருணைத் திறத்தையும் அருளாட்சியையும் விதந்து போற்றுகிறது. இத்தலத்தின் ஏழாவது

**மாலை 6.30 மணிக்கு வீதி உலா இடம்பெறும். அதனைத்தொடர்ந்து கும்பாபிஷேக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...நவருள்மிகு
# ...ப்பிள்ளையார் ஆலய
# ...பந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ
# ...ஷேக விஞ்ஞாபன சிறப்பிதழ் 2022

...ம்பாபிஷேக நன்னாளிலே திருநெறிய தமிழ் மன்றம் மூலமாக வெளியிடப்படவுள்ள பரராசம் – கும்பாபிஷேகச் ...ப்பு மலர் வெளியீடு இனிதே நிகழ்ந்தேற, எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

* * * * *



## வாழ்த்துச் செய்தி

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

...யகர் ஞானத்தின் வடிவமாகக் கொள்ளப்படுபவர். ஓம் எனும் பிரணவ மந்திரம் தான் உலக இயக்கத்தின் ...நாதம். விநாயகரின் தோற்றம் அண்டம் முழுவதும் பரந்துகிடக்கும் அத்தனை உயிர்களும் இந்த பிரபஞ்சத்தில் ...ண்டுள்ள முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் அமைந்தது. அறிவைத் தரும் கடவுளாக சரஸ்வதி கொள்ள-...ம் நிலையில் அறிவைப் படைக்கும் நாயகனாகக் கொள்ளப்படுபவர் விநாயகர். அதனைத் தாண்டி விக்கின-...ளைக் களையவல்ல பெருமானாகவும் விக்கினேஸ்வரன் எனும் பெயருடன் திகழ்பவர் விநாயகர்.

...யக வழிபாட்டுக்கும் ஈழத்துக்கும் மிக நெருக்கமான தொடர்புண்டு. சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி தன் ...ரை முகம் நீங்க கீரிமலையில் நீராடியதாகவும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைத் தாபிப்பதாகவும் அதன் ...னாலும் தன் உள்ளத்தளவில் குறைநீங்காத காரணத்தால் ஏழு விநாயகர் ஆலயங்களை ஒரே நேர் கோட்டில் ...சையாகத் தாபித்ததாகவும் வரலாறுண்டு. அதுபோன்று யாழ்ப்பாண மன்னர் ஆட்சிக் காலத்திலும் விநாயகர் ...பாடு அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதன் விளைவாக நூற்றுக்கணக்கான விநாயகர் ஆலயங்கள் ...க்கப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு தாபிக்கப்பட்ட ஆலயங்களுள் ...ன்மையானதே பரராஜசேகர மன்னன் காலத்தில் தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் இணுவில் பரராஜசேகரப் ...ளையார் ஆலயம். இன்று குடமுழுக்கு காணும் பரராஜசேகரனின் திருவருள் இணுவில் மக்களுக்கு மாத்திர ...றி உலக மக்கள் அத்தனைபேருக்கும் கிடைக்கப்பெற்று அத்தனை விக்கினங்களும் தீர்ந்து பேரின்பப் ...வாழ்வு சித்திக்க அவனருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

* * * * *



## வாழ்த்துச் செய்தி

**பண்டிதை வை.கணேசப்பிள்ளை**
கலாபூஷணம்
கழக அமைப்பாளர், திருநெறிய தமிழ்மறைக்கழகம்

...து குலதெய்வமாகிய ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் 06.02.2022இல் குட முழுக்கு ஆடுவதையிட்டும், ...ம்பாபிஷேக மலர் ஒன்று வெளியிடுவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சியடைவதோடு, திருநெறிய தமிழ் மறைக்கழக ...மைப்பாளர் என்ற வகையில் கும்பாபிஷேகம் சிறக்க, மலர் சிறக்க வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். ...ள்ளா விளையுளும், தாழ்விலாச் செல்வமும் தக்கோரும் வாழ்பதி" இணுவையம்பதி, ஈழ மணித்திரு நாட்டினின் ...பால் அமைந்த யாழ்ப்பாணத்து பன்னிரெண்டு பேரூர்களில் ஒன்றான சிறப்பினையுடையது. புண்ணிய ...மியாகிய இந்தியாவில் திருக்கோவலூரில் இருந்து சைவவேளாண்மைக் குடிகள், குடியமர்த்தப்பட்ட ஊர். புலவர் ...ால், அறிஞர்களால் பாடல் பெற்ற தலமாக விளங்குகின்றது. ஆரியச்சக்கரவர்த்திகளோடு தொடர்புடையது. ...வூரின் வளம் கண்ட பரராஜசேகர மன்னன் இணுவையம்பதி தெற்கில் விநாயகர் கோவிலை 1440 ஆண்டு ...ரையான காலப்பகுதியில் வழிபட்டிருக்கலாம் எனும் சிறப்பினுடையது. ஆலயம் கோபுரங்களுடன் கூடியதாக ...மைத்தான், இளநீர்க்குலைகளையும், பாற்குடங்களையும் யானைமேல் ஏற்றிவந்து அபிஷேகித்து வணங்கி-...ான் என்ற சிறப்பினையுடையது. அன்று தொடக்கம் இன்று வரை பெருமான் குடிகுலங்களைக் காத்து வருகி-...றார். மக்கள் பயபக்தியுடன் பெருமானுடைய வாழ்நாள் அடித்தொண்டர்களாக, வாழ்ந்து வருகின்றனர். ...தனையோ இன்னல்கள் வந்த போதும் பெருமான் யாரையும் நோகவிடாமல் காப்பாற்றினார். எத்தனையோ ...ற்புதங்களைச் செய்து உயிர்களைக் காப்பாற்றினார். திருநெறிய தமிழ்மறைக் கழகம் நிறைவான பணிகளைச் ...ய்கின்றது. அறநெறிப்பாடசாலை அதனூடு இசை, நடனக்கலைகள் வளர்த்தல், திருவாச முற்றோதல், ...வாரபாராயணம் செய்தல், 63 வர் சிலைகள் அமைத்தமை, குருபூசை தினங்களை நடாத்துதல், பஜனை என்ற ...ணிகளில் ஈடுபடுகின்றது. புராணபடனம், பிரதோஷம், சதுர்த்திகள், விநாயகர்சஷ்டி, நவராத்திரி, சுமங்கலிய ...சை, அபிராமி பட்டர் பூசை, திருவிழாக்கள், மஹோற்சவம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. எந்த ...லயங்களிலும் காணமுடியாத அளவில் அடியவர்களின் பணிகள் தொடர்கின்றன. ஆலயம் சிறக்கின்றது. ...தேபோல் எதிர் காலத்திலும் இளைஞர் சமூகம் ஒழுக்கசீலர்களாகத் தொண்டர்களாக உருவாகக் எம் பெருமான் ...ருள்பாலிக்க வேண்டும். இம்முறை பெருமான் ஏழாவது கும்பாபிஷேகத்தை நடாத்துகின்றார். இக் கும்பாபிஷேக ...ணத்தில் மானசீகமாக எமது மறைந்த குருக்களை ஆசீர்வதிக்க கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று நாட்டில் ...லாட்சி தர்மம் ஓங்கவும், நோய்பிணி நீங்கி மக்கள் வாழவும் வாழ்த்துகின்றேன். கும்பாபிஷேக மலர் சிறக்கவும் ...வளியீடுகள் சிறக்கவும், ஆலயத் தொண்டர்கள், அடியார்கள் நலம் பெறவும் எம் பெருமான் அருள் எல்லோ...க்கும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

எல்லோரும் வாழ்க, இன்பமே சூழ்க!



## வாழ்த்துச்செய்தி

**பேராசிரியர் க.தேவராஜா (ஜே.பி)**
முன்னாள் பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
போசகர், திருநெறிய தமிழ் மறைக்கழகம்

...ணுவில் திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி ...ழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன், இணுவிலில் மட்டுமல்லாது யாழ்ப்பாணக் குடா நாடு, ...ழத்திருநாடு, சர்வதேசம் எனப் பரந்துபட்ட பிரதேசத்தில் பல ஆயிரக்கணக்கான அடியவர்களைக் ...காண்டுள்ள எம்பெருமான் அடியவர்கள் குறைகளைத் தீர்த்து வைப்பது மட்டுமன்றி அவர்களின் வளமாக வாழ்வ-...ற்கு வழிசமைத்துக் கொடுக்கும் பெருமைக்குரியவராக இருப்பது எமக்கு மகிழ்ச்சியளிப்பதாகும். உலக நாடுகளில் ...யாபித்திருக்கும் எம்பெருமானின் பக்தர்கள் அவரின் கும்பாபிஷே கம் காண்பதற்கு ஆவலாக இருக்கும் ...தேவேளை குறிப்பிட்ட காலம் தவறாது பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை புனராவர்த்தன அஷ்டபந்தன ...ம்பாபிஷேகம் நடைபெற்று ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்க வகை செய்யப்படுவதற்கு எம்பெருமான் அருள் ...லிப்பதனைக் காணமுடிகின்றது. இவ்வருடம் இடம்பெறும் கும்பாபிஷேகம் தடையின்றி இடம்பெற எம்பெருமா-...ின் அருள் கைகூடியுள்ளது. இதில் பங்கு பற்ற உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெரும் எண்ணிக் ...கயான பக்தர்கள் வருகை தர உள்ளனர். இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம், பரராஜசேகர அறநெறிப் ...டசாலை, இணுவில் பொது நூலகம் என்ற ஆலயத்துடன் இணைந்த அமைப்புக்கள் ஆலயப் பணிகளுக்கு ஒத்-...ழைப்பு வழங்கி வருகின்றன. இந்த ஆலயத்தின் அடியவர்களது பூரண ஒத்துழைப்பும் பெருமக்களது வழி ...ாட்டலும் எமது ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழாவை நாடே வியக்கும் அளவுக்கு நடாத்தி வைக்க எல்லாம் ...ல்ல பரராஜசேகரப் பிள்ளையார் அருள் பாலிப்பார் எனக் கூறி பயனுள்ள கட்டுரைகளைத் தாங்கி நிற்கும் ...ம்பாபிஷேக மலருக்கான வாழ்த்தினை நிறைவு செய்கின்றேன்.



## வாழ்த்துச்செய்தி

**த.முகுந்தன்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம், உடுவில்

எமது உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் சைவமும் தமிழும் மேன்மையுற்று விளங்கும் புண்ணிய பூமியாம் இணுவில் பதியில் கோயில் கொண்டு அருள்பாலித்து வரும் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆன்மீகமும் அதனோடிணைந்த வாழ்வும் சமயப்பழக்கவழக்கங்களும், பண்பட்ட வாழ்க்கை முறையும் எமது இணுவில் கிராமத்திற்கு இயல்பாகவே அமைந்துவிட்ட பெருமைகள். அத்தகைய பண்புசார் மக்கள் வாழும் கிராமத்திலே நாற்றிசையும் ஆலயங்கள் அணிசெய்து மக்களின் ஆன்மீக நெறிக்கு வழிகாட்டி நிற்கின்றன. அவ்வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாருக்கு 06.02.2022 அன்று புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற விநாயகப் பெருமானின் பெருங்கருணை கைகூடி வந்திருக்கின்றது. தமிழ் மன்னன் பரராஜசேகரனால் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயம் ஆன்மீக வணக்கஸ்தலம் என்பதற்கு அப்பால் எமது மன்னர் பரம்பரையின் மாண்பினையும் இவ்வுலகிற்கு பறைசாற்றி நிற்கிறது. தமிழர் தம்வாழ்வில் இன்னல்கள் சூழ்ந்தபோதெல்லாம் தெய்வ பலமும் ஆன்மீகப் பெரியோர்களின் வழிகாட்டல்களுமே எம்மைக் காத்து நிலைபெறச் செய்திருக்கின்றது. இக்கும்பாபிஷேகப் பெருவிழா எம்மக்களின் பண்பாட்டு பெருமைகளைக் காப்பதோடு சைவத்தமிழ் மாண்பினை உலகறியச் செய்யும் பெருவிழாவாக மிளிர வேண்டும் என வாழ்த்தி எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் பாதம் பணிகின்றேன். !

* * * * *



## வாழ்த்துச்செய்தி

**சு.தர்ஷன்**
தவிசாளர்
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

அருளாளர் திருமூலரால் சிவபூமி என அழைக்கப்படும் இலங்கையின் ஈழவள நாட்டின் மணிமுடியாக திகழும் யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் இரு கண்ணெனப் போற்றும் இணுவையில் சிறப்புமிகு ஆலயமாக ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம் திகழுகின்றது. இந்த ஆலயம் வரலாற்று தொன்மை கொண்டது. பரராஜசேகர மன்னனால் உருவாக்கி பராமரிக்கப்பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. இவ் ஆலயம் எமது வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பரப்பிற்குள் அமைந்தது எம் சபைக்கு சிறப்பு நம்பினோர் வினைகளை களையும் கணபதி கோவில் கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் கொடையை எம் பிரதேச மக்கள் பெற்றது அவர்களுக்கு கிடைத்த வரமே எம் பிரதேசத்தின் வரலாற்றுச் சின்னமாக விளங்கும் இவ் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு உரிய காலத்துக்குள் கும்பாபிஷேகம் நடைபெறுவது விநாயகப் பெருமானின் கிருபையே!

மென்மேலும் இவ்வாலயம் சிறப்புற விழாக்கோலம் காணவேண்டும். மகோற்சவங்கள் வெகுகோலாகலமாக நடைபெற வேண்டும் என விநாயகப் பெருமானை வேண்டி பக்தர்களுக்கு நோய் நொடியின்றியும், நிறைசெல்வம், புகழ்கல்வி, செழிப்பான விவசாய விளைச்சல், உத்தியோக இலாபம் அனைத்தும் எம் பெருமான் விநாயகன் அருளால் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து அமைகின்றேன். கும்பாபிஷேகம் சிறப்புற அமைய ஆண்டவனை வேண்டுகின்றேன்.

* * * * *



## வாழ்த்துச்செய்தி

**Sasikala Suresh**
**Deputy Mayor of Harrow**
**London Borough of Harrow .**

**Suresh Krishna**
**(B.A., D.Hon.(H.C)**
**London Borough of Harrow .**

இணுவையூர் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாருக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.இணுவில் பதி வாழ் மக்களின் சமயப்பற்றும் விடாமுயற்சி தமிழ் பண்பாட்டை தொடர்ந்து கடைப்பிடிக்கும் பண்பான வாழ்வியலும் இன்றைய மஹா கும்பாபிஷேகம் நடப்பதற்கு முக்கிய காரணமாகப் பார்க்கின்றோம். எனது தந்தையார் ஆறுமுகம் இராசரத்தினம் இவ் ஆலயத்தின் மிகப் பெரிய பக்தர். தொண்டர் என்பதில் மிகவும் பெருமை அடைகின்றேன். எங்கள் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அருள் உலகில் பரந்து வாழும் எம் மக்களுக்கு கிடைக்க பிரார்த்தித்து இன்றைய மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற முழு முயற்சியை எடுத்த தொண்டர்களுக்கு நன்றியையும், ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் பக்தர்களுக்கு வாழ்த்துக்களையும் கூற விரும்புகின்றோம்.

* * * * *



## வாழ்த்துச்செய்தி

**தி,இரத்தினேஸ்வரன் ரமேஷ்**
கிராம அலுவலர்
யா/188, இணுவில் தென்மேற்கு.

சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பெற்ற இலங்கைத்திருநாட்டிலேயுள்ள பிள்ளையார் திருக்கோயில்களில் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்கது ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் என்பது மிகையாகாது. மா, பலா, வாழை, தென்னை, பனை, கமுகு எனப்பலன்தரு மரங்களையும் நிழல்தரு விருட்சங்களையும் தன்னகத்தே கொண்டு இயற்கை எழில் கொஞ்சும் இணுவைப்பதியில் இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்வேந்தன் பரராஜசேகரப் பெரியாரினால் உருவாக்கப்பெற்ற பெருமையுடையது இவ்வாலயம். கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கக்கிடைத்ததும் பிள்ளையாரின் பெருங்கருணை என்றே நினைக்கின்றேன். மஹாகும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெறவும் அதையொட்டி வெளியிடப்படும் மலர்சிறக்கவும், மேன்மைகொள் சைவநீதி உலகெல்லாம் விளங்கவும் இலங்கைத் திருநாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழுகின்ற மக்களை வாட்டி வதைக்கும் கொடிய கொரோனா நோய் அகலவும், எல்லோரும் இன்புற்றிருக்கவும் எம் பெருமான் பிள்ளையாரின் பொற்பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

* * * * *



## வாழ்த்துச்செய்தி

**இ. சற்குருநாதன்**
விநாயகர்கள் அடியார்கள் சார்பாக

சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்தோங்கி நிற்பதும் அனைத்து சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதும், எம்மை எல்லாம் ஓர் குடைக்கீழ் இருத்தி தன் இன்னருளை அள்ளி வழங்கி அருள் மழை பொழிந்து கொண்டு இருப்பவரும் எங்கள் இணுவை மண்ணின் முதல்வனாக வீற்றிருக்கும். பிரணவப் பெரியோன் பரராஜசேகரன் அவனுக்கு இன்று திருக்குட முழுக்குப் பெருவிழா.இன்றைய நன்நாளிலே எம் பெருமானுக்கு மட்டுமல்ல குடமுழுக்கு எம் ஊரே திருக்குடமுழுக்கு ஆடுகிறது என்றால் மிகையாகாது. அடுத்து இவ்வாலயத்தின் சகல சிறப்பம்சங்களையும் தாங்கி வருகின்ற இக் கும்பாபிஷேக [illegible] அனைத்து விநாயகர் அடியார்களதும் உள்ளக் கமலங்களில் வீற்றிருக்கும் வண்ணம் சிறப்புற வேண்டும் என விநாயகர் அடியார்கள் சார்பாக வேண்டி வாழ்த்துகின்றேன்.

"[illegible] அந்நிமுகத்தவனை நித்தமும் வணங்கித்துதியாய்ப் பரவி அடி தொழுவோம்."

[illegible] விநாயக அடியார்கள் திருநெறிய தமிழ் மறைக்கழகத்தினர்

...க சிறப்பு மலர் வெளியிடப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவில் திருவருள்மிகு
# ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய
## புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபன சிறப்பிதழ் 2022

**காலை 8.00 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிர-தட்சிணம் 8.47இக்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம்**

### ஆசியுரை

சர்வசாதகர் சிவஸ்ரீ ம. தானுநாதக்குருக்கள்
ஆசிரியர்
யா/ இணுவில் இந்துக்கல்லூரி.

செம்மலர் தோன்றான் சேலரொட்டா அம்மலங்கழீஇ அம்பகரொடு மரீஇ
மலாற நேயம் மலிந்தவர் வேடம் ஆலயம் தானும் அரனெனத் தொழுமே

இந்து சமுத்திரத்தின் முத்தாகவும் சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்டதுமான இலங்கைத் திருநாட்டின் கந்தபுராண கலாச்சாரங்கள் மேலோங்கிய யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும், வேதசிவாகமமும், சங்கீத ஞானமும் நிறைந்த புண்ணிய பூமியாக விளங்குகின்றது இணுவில் பதி. இப் பதியிலே யாழ்ப்பாணத்தின் பொருமை மிக்க கன்னரான பரராஜசேகரனால் கட்டி பூஜிக்கப்பட்டு வந்ததும் முதற்கடவுளாகவும் ஆகார, உகார, மகார பிரணவ வடிவமாக விளங்கும் பரராஜசேகர விநாயகர் ஆலயமானது மிகவும் பிரமாண்டமான வடிவிலே ஆகம விதிகளுக்கு அமைவாக புனரமைக்கப்பட்டு பிலவ வருடம் தை மாதம் சுக்லபட்ச ரேவதி நட்சத்திர தினத்தன்று (06.02.2022) நடைபெறுவது மிகவும் சிறப்பானது ஆகும். ஆலயங்கள் ஆனவை ஆன்மாக்கள் வயப்படும் இடமாகவும் அமைதி தரும் நிலையங்களாகவும் கலை, கலாச்சார இவைகளின் உறைவிடயமாகவும் விளங்குகின்றன.

திருக்கோயில் இல்லாத திருஇல் ஊரும் என்று ஆரம்ப
அவை எல்லாம் அடவிக்காடே என்று முடிக்கின்றார்

கோயில்கள் ஊருக்கு அழகு செய்வது மட்டுமன்றி நித்திய நைமித்திய விழாக்கள் நடைபெறுவதும் அவசியமானது "கண்ணினால் அவர் நல்லவிழா பொலிவு கண்டு ஆர்தல் " என்கிறார் சேக்கிழார். இதையே ஆகமங்கள் உபநிடதங்கள் வலியுறுத்துகின்றன. தே ஹோ தேவாலய பீரோத்தோ ஜீவலோதேவ ஸநாதன என்கிறது உபநிடதம் இவ்வாறு சிறப்புக்கள் வாய்த்த இவ்வாலய கும்பாபிஷேகம் சிவாகம திருமுறைகளுடன் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தலைமையில் திருமோக்த நவகுண்ட பக்ஷமாக சிறப்பாக நிகழ்வதுடன் கும்பாஷேக விழா மலராக மலர்வது மேலும் சிறப்பானது இம்மலரானது சிறப்பாக மலர எனது வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

விநாயகனே வெவ்வினை
வேற்றுக்க வல்லான்"

### ஆசியுரை

ப. சர்வேஸ்வரக்குருக்கள்
வசந்தன் ஐயா
இலண்டன்.

சோமனை உயர்வென சிரசினில் வைத்தவர்
சுந்தரத்தேவராய் பிரபன்ன மாகுவார்
நாமமும் ஆயிரம் பாதார விந்தமே
நலிலவும் எங்குமே நன்மைகளைத் தருபவர்
சந்ததம் விருப்புடன் இணுவையிலே இருப்பவர்
ஓமம்மாய் அக்னியில் நல்லருளும் ஓங்கவே
உயரருள் பொழிபவர் பெருந்சாந்திகாணவே
எண்ணிடும் இணுவையில் இன்னருளைப் பொழிந்திடும்
எங்களின் நாயகன் பரராஜசேகரப் பண்புயர்
மன்னனால் பாங்குடனே கட்டிய பலனதும்
உயர்வுறப் பக்தரெல்லாம் மகிழ்வுற
விண்ணவர் தலைவனாய் விளங்கிவரும் பிள்ளையார்
வேதமும் ஆகமும் விரிந்த நல்ல இசைகளும்
நண்ணிய நற்றுனைச் செயல்களுமாய்ப் பொலிவுற
நலம்பெறும் சைபவம் நல்குவதும் நன்மையே.

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்**

Kajasankavi Centre & Printers
Offset & Screen Quality Printers
Dealers in all Invitation Cards
No. 237, K.K.S. Road,
Jaffna.

ஐங்கரன் பான்சி
இல. 38, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்

சக்திவேல் ஹாட்வெயார்
Sakthivel Hardware
K.K.S Road,
Kondavil West, Kondavil (Inuvil)
T.P : 021 492 1213

சிறி ஐங்கரன் வெதுப்பகம்
இணுவில் தெற்கு,
இணுவில்

நாதன் அன்பிரதர்
Nathan & Brother
கே.கே.எஸ் வீதி, இணுவில்

பெஷன் ஹவுஸ்
FaShion House
No,203 (65) K.K.S. Road, Jaffna.

ஆனந்தன்
கட்டப்பொருள் விற்பனை நிலையம்
கே.கே.எஸ் வீதி,
இணுவில்

அம்பிகாபதி அழகு மாடம்
Ambihapathy Fancy Goods
66 பெரிய கடை, யாழ்ப்பாணம்.
அம்பிகை அழகு மாடம்
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

Sri Kumaran Hardwares
83, Stanly Road, Jaffna.
T.P 021 222 2798

Uniquє
Inuvil South
Call : 077 652 3229

K.R.S
உற்பத்திப்பொருட்கள்
K.K.S Road, Kondavil

யோகா புடவையகம்
உப்புமடம் சந்தி, கே.கே.எஸ் றோட்,
கோண்டாவில்.
T.P : 077 607 9925

துரை தச்சுத்தொழிலகம்
தாவடி வடக்கு, கொக்குவில்

KSSK Construction
Inuvil West Chunnakam.
ekomalan@live.com.my
076 200 5244

லிங்கம் கொமினிகேசன்
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,
மானிப்பாய் வீதி, இணுவில்
T.P : 077 870 9444

N.A.R.& Com
இணுவில் தெற்கு,
இணுவில், யாழ்ப்பாணம்
N.A.Rajaratnam & CO

அன்னா கோப்பி

AYNAGRAN INTERNATIONAL FILMS PVT.LTD
No. 147/1 Third Floor, Raparis Thrimeni Towers G.N
Chetty Road, T.Nagar Chennai - 17
www.ayngaran.com Email : india@ayngaran.com
AYNAGRAN INTERNATIONAL (UK).LTD
Unit 19, Riverside Business Park, Lyon Road, Wimbledon,
London SW 192RL, United Kingdon.
web: http//www.ayngaran.com Email: sales@ayangaran.com
Shop :e-sales.ac/ayngaran

ANDRA PRINTERS
356A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 8929 / 077 662 2981

ஜொலி கல்யாண மண்டபம்
இணுவில் மேற்கு,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

JOLEE TOURS & TRAVELS
Inuvil, Jaffna.
T.P 94 765 900 000

சாந்தி புடவையகம்
Santhi Textiles
No. 157, 158, Moderm Market
(Power House Rd), Jaffna
T.P : 021 222 2045
K.K.S Road, Kondavil


Profitable Construction
Inuvil West, Inuvil

கணேசன் சென்ரர்
கே.கே. எஸ் வீதி,
கோண்டாவில்

**விநாயகர் அடியவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
16.12.1948

மறைவு
04.02.2022

## சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் (காந்தி)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் (காந்தி - ஓய்வுபெற்ற பிரதேச செயலக ஊழியர் - உடுவில் மற்றும் காந்தி பேக்கரி உரிமையாளர்) நேற்று முன் தினம் (04.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை அன்னம்மா அவர்களின் மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி செல்லம்மா அவர்களின் மருமகனும், மல்லிகாதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணராஜா, தவமணிதேவி, மற்றும் தன லக்ஷமிதேவி, காலஞ்சென்ற டில்லிமலர் மற்றும் ஸ்ரீகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, ஆனந்தன், கந்தையா, பரமேஸ்வரன், தம்பிப்பிள்ளை, மற்றும் நகுலேஸ்வரி, சரோஜினிதேவி, சர்வானந்தம், காலஞ்சென்றவர்களான புஸ்பதேவி, சத்தியதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சஞ்சயன் (கணிய அளவையாளர், பக்ரைன்) ஆர்த்திகா (ஆசிரியர் யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை) நிவேகா ஆசிரியர் - ஊர்காவல்துறை தம்பாட்டி அ.த.க வித்தியாலயம்) சந்துரு (DO நீதி அமைச்சு) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேசலா (ஆசிரியர், யா/ மானிப்பாய் மகளீர் கல்லூரி), ஸ்ரீதுர்க்கானந்தன் (அரச நிலஅளவையாளர்) ஜெயந்தன் (ஆசிரியர் யா/ புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்ஷித்ராம், சதுஷ்ரிகா, அத்விகா வைஷகி, ஜஷ்விந் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2022) திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இவ்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனக்கிரியை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு
15.03.1952

மறைவு
05.02.2022

## திரு. கதிரேசபிள்ளை தங்கராசா

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் கொடிகாமம்)

சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரேசபிள்ளை தங்கராசா அவர்கள் நேற்று (05.02.2022) சனிக்கிழமை அதிகாலை கல்வயல் வேதவனத்தவனின் திருவடிகளைச் சரணடைந்தார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி கதிரேச பிள்ளை அரசம்மா தம்பதிகளின் சிரேஸ்ட அன்புப்புதல்வனும், எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் துரைசிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அருமை மருமகனும், கெங்காதேவியின் ஆருயிர் கணவனும், கீர்த்தனா (ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி கல்வி வலயம்), யஸ்மினா (ஆசிரியர் மகளீர் கல்லூரி, சாவகச்சேரி), தனுசன் (ஆசிரியர், பளை மத்திய கல்லூரி), நிரூசன் (ஒப்பந்தகாரர்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகரன் (ஆசிரியர், பளை மத்திய கல்லூரி), கலாகரன் (ஒப்பந்தகாரர், வர்த்தகர்), நிஷாந்தி (முன்பள்ளி ஆசிரியர், தென்மராட்சி), சரணியா (அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்மராட்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கராணி, சுந்தரலிங்கம் (இத்தாலி), சுவீந்திரராஜா (கனடா), சிவகோசலா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நடராசலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), சுபத்திராதேவி மற்றும் சிவயோகலிங்கம் (ஓய்வுநிலை தபாலதிபர்) சித்திவிநாயகலிங்கம் (பொறியியாளர், அவுஸ்ரேலியா), திருக்குமாரலிங்கம் (ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்), கிருஸ்ணானந்த லிங்கம் (ஓய்வு நிலை இ.நி.சேவை அலுவலகர்), அருட்சோதிலிங்கம் (தொழிலதிபர் கனடா), நவமணிதேவி (ஓய்வு நிலை உபதபாலதிபர்), நடராசா (மட்டுவில்), செல்வரஞ்சினி (இத்தாலி), திலகவதி (கனடா), வாமதேவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பவின்ஜா, அனன்ஜா, அஸ்விகன், ஆருக்ஷா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணிக்கு மீசாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் சாவகச்சேரியில் அமைந்துள்ள கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு
021 227 0477, 077 932 8074

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### குணரத்தினம் தனநாயகி



இராஜகாரியர் வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும்,உடுவில் றோட் வடலித் தோட்டம் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் தனநாயகி கடந்த (04.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத் துரை - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து - லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் குணரத்தினத்தின் பாசமிகு மனைவியும் பத்மகுணராஜா, ரட்ண குமார், கஜந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மநாயகி (கொழும்பு), கருணாநிதி, சிவகுமார், உதயகுமார் (லண்டன்), உதயநாயகி (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புச் சகோதரியும் ஞானமுத்து காலஞ்சென்ற அரசலிங்கம், மாரிமுத்து, அன்னபூரணம், அண்ணம்மா, நல்லமுத்து, செவ்வந்தி ஆகியோரின் மைத்துனியும் திலகேஸ்வரி, சோபியா மோகனதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் யசிகரன் ஜெசிந்தினி, மதீசன்,ஷாருஜன், லிதுஷா , சகித்தன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் றோட்,
வடலி தோட்டம், மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 08 . 1954



இறப்பு
03 . 02 . 2022

### திரு. சிவசம்பு ஞானசுப்பிரமணியம்

(உரிமையாளர், ஞானம் ஸ்ரோர்ஸ் – உடுவில்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு ஞானசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (03.02.2022) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ் சென்ற ஸ்ரீரஞ்சினி மற்றும் கௌதமி ஆகியோரின் அன்புக் கணவரும், கிரிதரன் (டென்மார்க்), கிரியா, கிரிசாந்தன், (UK) கிரிசாளன், கிரிசயன், கிரிபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், எல்சி (டென்மார்க்), ஜனகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷய், இஷயா, அபர்நாத், ஆதீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, நடராசா, நவரட்ணம் மற்றும் நாகலக்சுமி (கனடா), விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சாவித்திரிதேவி, மற்றும் இரத்தினபூபதி (கனடா), நடராசா (கனடா), பரமலிங்கம், ஞானாம்பிகை, இராமச்சந்திரன், காலஞ்சென்ற தெய்வேந்திரன், சிறிதரன் மற்றும் இராஜேந்திரன் (வசந்தன் UK) காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் தேவராணி, யோகரஞ்சினி (UK), காலஞ்சென்ற ரஜனி மற்றும் சத்தீஸ்வரி, ஞானகலா (UK) ஜெயவதனி (சுவிஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரி யைகளுக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்புலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

இணுவில்

திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

## மஹா கும்பாபிஷேக சிறப்புமலர் - 2022
## வெளியீட்டு விழா

காலம் : தை மாதம் 24ஆம் நாள் (06-02-2022) ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணி

இடம் : இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் முன்றல்.

**நிகழ்ச்சி நிரல்**

**மங்கல விளக்கேற்றல்**

தேவாரம் : திருநெறிய தமிழ்மறைக்கழக மாணவர்கள்.
வரவேற்புரை : திரு கு.விக்ன ரூபன், ஆசிரியர்.
ஆசியுரை : சிவஸ்ரீ சோமஸ்க்கந்த அரவிந்த குருக்கள், ஆலய பிரதமகுரு.
வாழ்த்துரை : கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர் சிவபூமி அறக்கட்டளை
தலைமையுரை : திரு.ச. முகுந்தன், ஆசிரியர் தலைவர், திருநெறிய தமிழ்மறைக் கழகம்.

**கும்பாபிஷேக சிறப்பு மலர்**

வெளியீட்டுரை : திரு.க.தேவராஜா, போசகர், திருநெறிய தமிழ்மறைக் கழகம்.
நூல் வெளியீடு : வெளியீட்டு வைப்பவர் இ. சற்குருநாதன், விநாயக அடியார்
முதற்பிரதி பெறுபவர் : திரு இராமலிங்கம் மகாராசா, முதலி
ஆய்வுரை : திரு.ஈ.குமரன், விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

**பிள்ளையார் பிள்ளைத்தமிழ்**

வெளியீட்டு வைப்பவர் : பண்டிதை. வை. கணேசபிள்ளை, அமைப்பாளர்
முதற்பிரதி பெறுபவர் : திரு இ.குகவரதன், இலண்டன்
ஆய்வுரையும் நயப்புரையும் : திரு.ஈ.குமரன், விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்

**மஹோற்சவ கால தோத்திரத் தொகுப்பு வெளியீடு**

அறிமுக உரை : திருமதி. சிவசக்தி சோமநாதன், ஓய்வு பெற்ற ஆசிரியை
வெளியீட்டு வைப்பவர் : சு.மீனாட்சி, ஓதுவார்
முதற்பிரதி பெறுபவர் : திரு வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன், ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்

**“பரராஜசேகர விநாயகனே போற்றி” இறுவட்டு வெளியீடு**

இறுவட்டு வெளியீட்டுரை : கவிஞர் கு. வீரா, இணுவில்
வெளியீட்டு வைப்பவர் : திரு க. கதிர்காமசோதி, பிரான்ஸ்
முதற்பிரதி பெறுபவர் : திரு செ.ஜெயக்குமார், குகன் கனடா

**கலைஞர் கௌரவிப்பு**

நன்றியுரை : திரு சொ.ஹரிசங்கர், ஆசிரியர், பொருளாளர், தி.நெ.த.ம.க

**சிறப்புப்பிரதி வழங்கல்**

விநாயக அடியார்கள் அனைவரும் இவ்விழாவில்தவறாறுகலந்து கொண்டு இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில் பற்றிய சிறப்பு அம்சங்களுடன், வெளிவரும் வெளியீடுகளைப் பெற்று இவ்விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**04.02.2022.**

**விநாயகஅடியார்கள்.**
**திருநெறிய தமிழ்மறைக் கழகம்.**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை விமலசிங்கம் - JP

(ஓய்வுபெற்ற கொமர்ஷல் வங்கி லிகிதர், மொழிபெயர்ப்பாளர்)



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மாவடி ஆலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விமலசிங்கம் நேற்று (05.02.2022) சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா - நேசரத்தினம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சந்திரோதயத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அமரசிங்கம், ஜெயபாஸ்கரசிங்கம், மகேஸ்வரி மற்றும் மயில்வாகனம், ஜெயசூரியசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மதியூகன் (முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), தனயூகன் (பணிப்பாளர், J Guest விருந்தினர் விடுதி), பிரணவயூகன் (உரிமையாளர் ஒரு சோறு உணவகம்), இராகவன் (விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மதியூகன் அனித்தா (முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி, கொடிகாமம்), பிரணவயூகன் சிவப்பிரியா (ஆசிரியை, பண்டத்தரிப்புஇந்துக் கல்லூரி), இராகவன் ஜெயபாமினி (ஆசிரியை- யா/ வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் கவிநயா, நிக்ஷிகா, சிவானிகா, ஜினேஷ், சப்தவஹன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரணவயூகன் - 077 9919 502
இராகவன் - 077 5141 127

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

சன்றைஸ் மெடி கிளினிக் இற்கு
Ambulance Driver/OPD Manager/Supervisor, Accounting Clerk தேவை.
நேர்முகத்தேர்வு:- இடம் - சன்றைஸ் மெடி கிளினிக் (யாழ் பஸ் நிலையம் முன்பாக)
திகதி : 06.02.2022 - ஞாயிறு
நேரம் : முற்பகல் 10.30 மணி
தொடர்புகளுக்கு: **070 6820 124 / 021 222 6069**

## HOTEL VACANCY

**Rooms** மற்றும் திருமண மண்டபங்களுடன் கூடிய யாழ். நகரில் பிரபல்யமிக்க ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Cook - Rs. 45,000/=
2. Room boy - Rs. 30,000/=
3. Waiter - Rs. 30,000/=
4. Night Receptionist - Rs. 25,000/=

உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.
**076 419 2934**
**Email: Brightinnjaffna@yahoo.com**

## 31ம் நாள் நினைவு தின நிகழ்வு அழைப்பு (அந்தியேட்டி அழைப்பு)

அன்னை மடியில் — ஆண்டவன் மடியில்

26 * 09 * 1937 — 11 * 01 * 2022



**திரு.செல்லப்பா தர்மலிங்கம் B.Sc (Cey)**
(University of Colombo) (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்.
பிரபல பௌதீகவியல் ஆசிரியர் Brithton Institute - Colombo,
பௌதிகவியல் ஆசிரியர் - Nigeria, UK)

11.01.2022 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த அமரர் செல்லப்பா தர்மலிங்கம் அவர்களின் 31ம் நாள் நினைவுதின நிகழ்வு நடைபெறவுள்ளது. அன்னார் Dr.சதாபானு ஜனகனின் ஆருயிர் தந்தையும், காலஞ் சென்றவர்களான செல்ல...ா மங்கையற்கரசி தம்பதியினரின் அருமை புத்திரனும், பண்டிதர் பொன்னுத்துரை நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவி யின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பாலசுந்தரம் பிள்ளை ஜனகனின் மாமனும், சிறிஸ்கந்தனின் ஆசைப் பேரனும், சிவலோகநாதன் இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை) மற்றும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) சண்முகலிங்கம், (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

### அந்தியேட்டிக் கிரிகைகள்

காலம் : வியாழக்கிழமை 10.02.2022
நேரம் : காலை 06.00 – 8.00 மணி
இடம் : வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரை புனித தீர்க்கரை

### நினைவுதின நிகழ்வு

காலம் : சனிக்கிழமை 12.02.2022
நேரம் : காலை 11.00 – 02.00 மணி
இடம் : திருபதி, பிரதான வீதி
(மணியகாரன் வீட்டிற்கு அருகாமையில்)
வேலணை கிழக்கு, வேலணை – 01

இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நல்வரவை நாடும்
Dr.Bhanu Janagan – மகள்
Mrs.Megala Manoharan – பெறாமகள்
(076 668 8423) மற்றும் குடும்பத்தினர்

## Haribol Square - Hotel Vacancy

- Chef - Full time & Part time
- Receptionist (வரவேற்பாளர் ) ஆண்/பெண்
- Cashier (காசாளர் ) ஆண்/பெண்
- Room boy
- Security ஆண்
- Workers பணியாளர்கள்

06.02.2022 மற்றும் 07.02.2022 ம் திகதிகள் முற்பகல் 10.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை நேர்முகத்தேர்விற்காக கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு வருகை தரவும்.

**Haribol Square**
**No-342, Maruthanarmadam.**
**T.P: 077 3039 754**

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள பான்சி கடைக்கு பெண்கள் தேவை.
பலசரக்கு கடைக்கு ஆண்கள் தேவை.
வயது எல்லை : 18-30
வேலை நேரம்: 7 A.M - 7 P.M
பெண்கள் சம்பளம் - 15000 - 30000
ஆண்கள் சம்பளம் - 45000 - 60000
**077 067 4452**

## காணி விற்பனைக்கு

கோப்பாய் ஸ்ரீ சர்வானந்த பாடசாலைக்கு அருகில் 8 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் வழங்கப்படும். கோப்பாய் பிரதான வீதியில் இருந்து 200m இல்
(cs.42744) (2.7)
**077 082 1010, 077 441 0919**

## யா/ நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க. வித்தியாலயம்
## பழைய மாணவர் பொதுக் கூட்டம்

- இடம் : யா/ நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க. வித்தியாலயம்
- காலம் : 21.02.2022 • நேரம் : 10.00 a.m

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.
அதிபர்:
தொடர்புகளுக்கு: **076 707 9424**
(cs.18374) (2.6)

## கடைகள் வாடகைக்கு

அகலம் 11 அடி நீளம் 44 அடி 5 கடைகள் உண்டு. தனித்தனியாக அல்லது முழுவதும் கொடுக்கப்படும். வாடகை முற்பணம் பேசித் தீர்க்கலாம்.
இடம்: சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள ஐயங்கரன் மணி மண்டபத்தில் இருந்து 200 மீற்றர் வட பக்கம் அமைந்துள்ளது.
தொடர்பு: **077 675 7249**

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

### தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?


தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய
cr.37452

### உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணைச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் காணிக்கை



எமது சங்க உறுப்பினர்
**திருமதி ஜஸ்மினா கலாகரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**க.தங்கராசா**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**சேவையாளர் சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**
CR.3751414

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ் நகரப்பகுதி, K.K.S. வீதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: **077 644 6514**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பகுதியில் வாடகைக்கு தேவை.
தொடர்பு:
**077 844 5063**

## வேலையாள் தேவை

மருதனார் மடம் பகுதியில் இயங்கும் Phone Shop இற்கு வேலையாள் தேவை.
குறிப்பு: மோட்டார் சைக்கிள் அனுமதி பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புக்கு: **077 115 3412**

## பழைய வீடு, கட்டட இடிபாடு தேவை

பழைய வீடு, கட்டட இடிபாடு என்பன உடன் விலைக்கு (யாழ். மாவட்டத்திலுள்ள) தேவை.
தொடர்பு: **076 8936 169**

## பணிப்பெண் தேவை

நெல்லியடியில் உள்ள வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: **077 2521 507**

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கிவரும் Hotel ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள House Keeping Staff, Waiter தேவை.
சம்பளம் - 20,000-30,000 வரை.
தொடர்பு: **021 222 0630**
**076 222 0632**

## குருக்கள் தேவை

அவுஸ்திரேலியாவில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு குருக்கள் பட்டம் பெற்ற அந்தணர் தேவை. மற்றும் இறுதிக்கிரியைகள் செய்வதற்கு சைவ குருக்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
**WhatsApp:0061435111099**
**074 250 4432**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

# பிரிவு-35

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Sinhala

★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: 1) நேரடி வகுப்புகள் (Direct Class)
சனி, ஞாயிறு 9 am - 2 pm
4 pm - 6 pm
2) On-line classes (Zoom)
செவ்வாய், வியாழன் 4.30 pm -5.30pm
3) அலுவலக உத்தியோகத்தர்கட்கு
வார, வார இறுதி நாட்களில் 5.30 pm -6.30pm

- 2018, 2019, 2020 உயர்தர மாணவர்கட்கு உயர்கல்வியில் வட்டியில்லாத கடன் திட்டம்
- IE TS புதிய பிரிவுகள் ஆ ம்பமாகின்றன (Academic, General, Training)
- தொலைக்கல்வி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பேராதனை யாழ். (கலை) விரிவுரைகள் நடைபெறுகின்றன.

ஆரம்பம்
**06,12/02/2022**
**10.00 AM**

**IPS** to your future
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 4340229 / 076 685 2529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 915 2223

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: 077 6681 670

## வாடகைக்கு உண்டு

யாழ்.நொதேன் ஆஸ்பத்திக்கு அருகாமையில் 2 அறைகளுடன் சமையல் இடமுள்ள அனெக்ஸ் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 570 1963

## பிரத்தியேக வகுப்புக்கள்

க.பொ.த உயர்தரம் பொறியியல் மற்றும் வணிகக் கல்வி.

க.பொ.த. சாதாரண தரம் குடியியற்கல்வி

தனியாகவும் குழுவாகவும் வீடு வந்து கற்பிக்கப்படும்.

077 900 7597, 077 906 4595

## A/L இணைந்த கணிதம்

A/L2022, 2023 மாணவர்களுக்கு வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்

(CS 18371)(3/6) 077 832 4002

## விற்பனைக்கு

DAIATZO Japan வான் விற்பனைக்கு உண்டு.

076 8851820

## மணமகள் தேவை

வேலணையைப் பிறப்பிடமாக் கொண்ட கல்வியங்காட்டில் வசிக்கும் 30 .12.1972 இல் பிறந்த மாதம். 60000/- நிரந்தர வருமானம் பெறும் 7 இல் செவ்வாய் உள்ள வாய்பேச முடியாதவருக்கு பொருத்தமான மணமகள் தேவை.

சாதாரணமானவர்/ வாய்பேசமுடியாதவரும் விரும்பத்தக்கது. (cs 42737) (2.6)

077 712 0229

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப 1976 இல் பிறந்த திருமணமாகாத B.Sc பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு திருமணமாகாத படித்த நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.

076 667 8996

## CLASSES

தரம்: 10 & 11 மாணவர்களுக்கான ஆங்கில குழு வகுப்புக்கள் பட்டதாரி ஆசிரியரால் நடத்தப்படுகின்றன O/L பரீட்சையை நோக்கிய தயார்ப்படுத்தல் வகுப்புக்களாக இடம்பெறும்.

இடம்: கல்வியங்காடு 077 806 5864

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த கொழும்பை சேர்ந்த BA படித்த சுயதொழில் செய்யும் மணமகனுக்கு 7 இல் செவ்வாய் தோஷம் அற்றது. பொருந்தக்கூடிய அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். உள்நாட்டு. வெளிநாட்டு. (cs 41390) (2.6)

075 669 6801, 011 259 8824

## அனைக்ஸ் வீடு வாடகைக்கு

இராஜவீதி. கோப்பாய் தலையான் ஹோட்டலுக்கு அருகாமையில் ஒரு அறையும், ஒரு சமையல் அறையும் வாடகைக்குண்டு. (cs 42748) (2.6)

077 809 4901

## காணி விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் பன்குளம் நொச்சி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் சுற்று மதிலுடன் கூடிய 11/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (cs42740) (2.6)

076 546 5144, 077 185 5268

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன். கூலியாட்கள் (ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வோர் விரும்பத்தக்கது) மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) தேவை.

தொடர்புக்கு: 077 944 8109, 076 7600 403

e-mail: jenoshanark@gmail.com

## வேலையாட்கள் தேவை

பான்சி கடைக்கு வேலையாட்கள் (பெண்கள்) தேவை.

சம்பளம் - 15000 - 20000

தொடர்புகளுக்கு: 077 551 3375

No-01, Hospital Road, Jaffna.

## சிறுநீரகம் தேவை

0 + குறூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

074 095 1954

## குத்தகைக்கு

அறுகுவெளி (உலங்கேணி) தனங்கிளப்பு தென்னை மரங்களுடன் கூடிய நிலப்பரப்பு 76- குத்தகைக்கு விடப்படவுள்ளது. கோழிப்பண்ணை அல்லது கால் நடை வளர்க்க விரும்புபவர்களுக்கு ஏற்ற இடம். வீடும் உள்ளது.

தொடர்பு இலக்கம்: 077 9927 435, 077 4232 638

## வீடு வாடகைக்கு

4 அறைகள். இணைந்த குளியலறையுடன் கூடிய கீழ் வீடு வாடகைக்கு உண்டு.

**239/1, Brown Road, Jaffna.**
**075 214 4404, 076 1177 847**
**Monthly payment - 75,000/=**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் Hotel Rolex உணவகத்திற்கு பின்வரும் வேலை யாட்கள் தேவை.

1. சமையல் உதவியாளர்
2. உணவு பரிமாறுபவர்
3. பார்சல் கட்டுபவர்
4. துப்புரவு பணியாளர்
5. காசாளர் (இருபாலாரும் தேவை)

077 8461 024
077 8096 859

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம் கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## தேவை

கொழும்பு பம்பலப்பிட்டியில் இயங்கும் புகழ்பெற்ற கட்டுமான நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங் களுக்கு ஆற்றல் மிக்க ஊழியர்கள் தேவை.

1) உதவி பொறியியலாளர் (Ass.Engineer)
Civil Engineering diploma உடன். உயர் மாடி கட்டட பணியில் முன் அனுபவம்.
Pilling design / BOG/AUTO CARD பற்றிய அறிவு.

2) தொழில்நுட்ப அதிகாரிகள் (Technical Officer)
NCT (Civil) அல்லது அதற்கு இணையான கல்வி தகைமையுடன் உயர்மாடி கட்டட பணியில் முன் அனுபவம்.

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

e-mail: hr@coral.lk 076 8240 781



*Sri Mahakaliamman Devasthanam, Valaithoddam, Iyakkachchi Temple Trust*

## ஆலய நிர்வாக உத்தியோகத்தர்

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயத்துக்கு இந்து மதத்தை சேர்ந்த , ஆலய வழிபாடுகளில்ஈடுபாடுள்ள, சமூகசேவை மனப்பான்மையுள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை .

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆலயத்தை அறங்காவலர் சபையின் வழி காடடலுக்கேற்ப நிர்வகித்து நித்திய பூசைகளை குறிப்பிடட நேரத்திற்குநடாத்தி ஆலய உற்சவங்களையும், சிறப்பு பூசைகள் ஆகியவற்றையும் ஆகம முறைப்படி நடை பெறுவதை உறுதி செய்வதும் பிரதான கடமைகளாகும்.

ஆலய செயற்பாட்டுக்கு தேவையான முழு நிர்வாகத்தையும் பொறுப்புடன் ஏற்று செயற்படுவது இப் பதவிக்குதேர்ந்தெடுக்கபடும் நபரின் கடமையாகும்.

ஆலயத்தின் அண்மித்த பகுதியில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம் பாட்டுக்கு உதவுவதும் இந்தநிலைக்குரிய பணியாகும்.

ஆலயம் அமைய்ந்துள்ள அண்மித்த பகுதியிலிருந்து கிடைக்கும் விண்ணப்ப ங்களுக்கு முன்னுரிமைவழங்கப்படினும் , மற்றைய பிரதேசங்களிலிருந்து கிடைப்பவையும் சமமாக பரிசீலிக்கப்படும்.

ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடுள்ள ,தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு தகுந்த ஊதியமும் வழங்கப்படும் .

தொடர்பு கொள்ளவும் :
மின்னஞ்சல் : sr@isfindustries.com
தொலைபேசி : 0772078455
தபாலில் : 3/4 , Rockwood Place ,Colombo 07

QUICK ADS

## அறிவித்தல்



எமது நிறுவனத்தில் கடந்த மூன்று மாதங்களாக உதவி மருந்தாளராக கடமையாற்றிய **ஜெநகன் கேசவமூர்த்தி** NIC 198323000985 என்பவர் 03.01.2022 ஆம் திகதியில் எமது நிறுவனத்திலிருந்து பதவி விலகியுள்ளார்.

இவர் இனி வரும் காலங்களில் எமது நிறுவனத்தின் பெயரில் செய்யப்படும் பணக்கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் விளம்பரப் படுத்தல் விற்பனை தொடர்பான எந்த விதமான செயற்பாடு களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தகவல் முகாமைத்துவம்**
**STS Hospital (PVT) Ltd,**
**Jaffna**

## தேவை

திருநெல்வேலி பிரதேசத்தில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு

### கணக்காளர் (உதவியாளர்)

தேவை.

**(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**

**தகைமைகள் :**

**கணக்காளர் (உதவியாளர்)**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும். .
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்
- MS office கற்கைநெறி (MS Excel இல் திறமை)பூர்த்தி செய்தவரிற்கு முன் உரிமை வழங்கப்படும்.
- வயதெல்லை 21 - 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 15.02.2022 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல.1035**
**C/O உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் பழநிவேற்பிள்ளை

(ஓய்வுபெற்ற கணக்காளர்)



தோற்றம் 22.07.1936 | மறைவு 30.01.2022

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கு மற்றும் பிரான்சினை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பழநிவேற்பிள்ளை கடந்த (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (மண்டைதீவு) - முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - காமாட்சியம்மா தம்பதியரின் மருமகனும், சாந்தினி (ஓய்வுநிலை ஆசிரியை - யா/ நாவலர் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், தனுஜா (முன்னாள் ஆசிரியை - கனடா), சுதர்மன் (கனடா), சுகன்ஜா (லண்டன்), தாரணி (கனடா), சுதர்சன் (சண்), அச்சுதன் (இரசாயன பொறியியலாளர் - பிரான்ஸ்), சிவந்தினி (வைத்தியர் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜீந்திரன் (பொறியியலாளர் - கனடா), சுதர்ஜினி (கனடா), இராசநாயகம் (லண்டன்), சிவசரவணன் (சிவா - பொறியியலாளர் - கனடா), சர்மிளா (யசோ - பிரான்ஸ்), ஜெயராம் (வைத்தியர் - கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நவீன், அபினன், அக்சயா, மிதுசா, சோபியா, ஆசகன், அனுஜா, ஆசகி, அனுசன், நிவேதா, மிதுனன், ஆருசன், அகல்யா, இனியாள் மற்றும் வெயினியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அன்னலெட்சுமி (ஓய்வுபெற்ற - ஆசிரியர்), காலஞ்சென்ற இரத்தினராசா (முன்னாள் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர்) மற்றும் செல்வராசா (முன்னாள் ஓய்வுபெற்ற செயலாளர் - வவுனியா நகரசபை) கனகநாயகம் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), திசநாயகம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான தயாநிதி, யோகரத்தினம், வல்லிபுரம் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர்) மற்றும் யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற மனோரஞ்சிதம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் பானுமதி (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), மீரா (ஓய்வுபெற்ற திட்டமிடல் பணிப்பாளர்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சச்சிதானந்தசிவம் (சட்டத்தரணி) அவர்களின் சகலனும், வரதலட்சுமி (ஆசிரியை - யா/ மத்திய கல்லூரி) அவர்களின் சிறிய தந்தையும், தயாபரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் Crematorium Centre Funeraire, 86 Squre Louis seve,73000, Chambery 07.02.2022 அன்று பிரான்ஸ் நேரம் 9.00 மணிக்கு நடைபெறும். (இலங்கை நேரம் மதியம் 1.00 மணி). இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:

சாந்தினி
+ 336 513 99607
சுதன்
001 (416) 662 - 4271
அச்சுதன்
+ 336 650 14461
வண்ணன்
+ 447 491 110293
ஜெயராம்
+ 158 771 90316
தனுஜா
+ 140 369 00761

சிவா - மருமகன்
+ 1613 513 7650
செல்வராசா
077 514 3866
கனகநாயகம்
077 050 7840
திசநாயகம்பிள்ளை
077 821 1752
வரதலட்சுமி - பெறாமகள்
077 466 6031


தகவல்:
**சகோதரர்கள்**

சு.திசநாயகம் பிள்ளை
இல.67, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்
077 821 1752

(cs 42471) (2.6)

# மரண அறிவித்தல்

## திரு. நல்லையா திருவருட்செல்வன் (அப்பன்)



புளியங்கூடலை பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தினை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா திருவருட்செல்வன் (அப்பன்) அவர்கள் கடந்த (04.02.2022) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா, வரதேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயந்தி அவர்களின் அன்புக் கணவரும், பிராம் அவர்களின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பரம்சோதி, இராஜேஸ்வரி, சிவசோதி, ஆனந்தசோதி காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் ஞான பண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாம ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நல்லசேகரம் மற்றும் இந்திராதேவி, தெய்வேந்திரம், மனோராணி, காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் மங்களநாயகி, ரஜனி, சுயேந்தி, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தில்லைநாதன், சிவகுமார், கேதீஸ்வரன் (சேந்தன்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.02. 2022) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] தம் வீதி,
[illegible] க்குவில்.
076 9760 160

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 178396)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### செல்வி குணரத்தினம் கணபதிப்பிள்ளை



தோற்றம் 03.04.1942 மறைவு 03.02.2022

மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி குணரத்தினம் கணபதிப்பிள்ளை கடந்த 03.02.2022 (வியாழக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (முன்னாள் கிராமசபை உறுப்பினர், உரிமையாளர் - குட்லக் சைக்கிள் வேர்க்ஸ்), கனகம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும் காலஞ்சென்றவர்களான ஜீவமலர், ஜீவகுமார், விஜயமலர் மற்றும் சிறிதரன் (உரிமையாளர் - சிறி அம்பாள் எலக்றிக்கல்ஸ் அன்ட் வெல்டேர்ஸ்), உமாராணி, ரவிக்குமார் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் சத்தியானந்ததேவி (ஓய்வு நிலை ஆசிரியை), ரேவதி, சாந்தா, சுதேந்திரன், குணேந்திரன் ஆகியோரின் அருமை மாமியாரும் சிறிஸ்கந்தவேள், ரவீந்திரநாதன், தயாசக்தி (விதினி), காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் சுகிர்தரஞ்சன், றஜித்தா, ஜெனற் றஜனி ஆகியோரின் அருமை அன்ரியும் வேதிகா, கார்த்திகா, கீர்த்திகா, கௌதமன், ராகுலன், ஆரூரன், யாதவன், துளசி, ஆரபி, ராகவி, ஆகாஷ், துவாரகன், சாகித்தியன், திலோத்தமன், பூர்விகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் வைஷ்ணவி, ஸ்வாகா, ருத்திரன், ஆதிரா, றெமோ, நிஸ்வின் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் : சி.சிறிதரன்
உரிமையாளர் - சிறி அம்பாள்
எலக்றிக்கல்ஸ் அன்ட் வெல்டேர்ஸ்

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
021 221 3203
077 659 5256

(10034)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 07 . 1953



மறைவு 05 . 02 . 2022

### சின்னத்தம்பி அரியரத்தினம் [அரியம்]

சங்கம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், கனடாவினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி - அரியரத்தினம் நேற்று (05.02.2022) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற கனகசபை - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும் சேயோன், வியாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, செல்லம்மா , பாலசுந்தரம், மார்க்கண்டு, மகாலிங்கம், அன்னலட்சுமி மற்றும் விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், சிவகுரு மற்றும் இராமலிங்கம், சந்திரவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்பழகன், மதியழகன், பாலவதனி, விஜியழகன், நிசாந்தினி ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்றவர்களான குமாரதாஸ், சண்முகதாஸ் மற்றும் சிவமங்கை, சிவகுமாரி, தவமணிதேவி காலஞ்சென்ற சிவராசா மற்றும் ஜெகசோதி, செல்வராசா, வாசுகி, நடனதாஸ், சுதாஜினி,நிமாலினி, சுதாகரன், மயூரி, குகரதி, மயில்வேந்தன், விஜயகுமார், சுவேதா, விஜிதன், செல்வகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சங்கத்தானை, சாவகச்சேரி
ச.இராமலிங்கம் (மைத்துனர்)

தொடர்புகளுக்கு:- 905 738 7526 - (மனைவி),
647 924 1360 (சேயோன் - மகன்), 647 673 4636 - (வியாரன் - மகன்),
416 888 4970 (அன்பு-பெறாமகன்), 077 5296244 - (விசாலாட்சி- சகோதரி)

## மரண அறிவித்தல்



தோற்றம் 16.04.1945

மறைவு 04.02.2022

### திருமதி
### கமலாவதி சீராளன்

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் தற்போது வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி சீராளன் அவர்கள் நேற்று முன்தினம் (04.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை நாகரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், இராசையா பூமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், சீராளனின் பாசமிகு மனைவியும், சியாமினி (இலண்டன்), சிவசங்கர் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரமணன் (இலண்டன்), குழுதினி (இலண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனிற்றா, கனிஷா றமிற்றா, தறிற்றா, கரினா, யனுசியா, ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், நகுலாதேவி, தில்லை மகாராசன், சாந்தி தவராசா (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், உதய லட்சுமி, சற்குரு (கனடா), காலஞ்சென்றவர்களான மகேந்திரன், யோகலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் A.F. Raymord (பொரளை) மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2022) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

21/4 ஹொர்மஸ் அவெனியூ,
வெள்ளவத்தை

தகவல்:
சீராளன் (கணவர்)
011 236 1221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசியல்...

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் அரசியல் கைதிகள் 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகிறார்கள். இவர்களை விடுவிப்பதற்கு அரசு எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. சர்வதேச ரீதியில் வருகின்ற நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக, சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக சர்வதேச சமூகத்துக்கு வாக்களித்தது. அதனை தற்போது மறுசீரமைக்கின்றோம் என்ற பெயரில் சுத்துமாத்துச் செய்கின்றது. மிக மோசமான பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. அது நீக்கப்படுவதுடன் அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

கடந்த ஒரு வருடத்தில் 16 அரசியல் கைதிகளை விடுவித்துள்ளார்கள். ஆறு மற்றும் எட்டு மாத காலப்பகுதிக்குள் விடுவிக்கப்பட வேண்டியவர்களைத் தான் விடுவித்துள்ளார்கள். மாறாக நீண்டகாலமாக விசாரணைக்ள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்கள் மற்றும் நீண்டகாலக் கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை.

புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார்கள், சமூக வலைத்தளங்களில் பிரபாகரனின் படத்தை காண்பித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சுமார் 100 பேர் வரை கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிட்டு அரசியல் கைதிகளை விடுவித்தது போன்று போலியான முகத்தை காண்பிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சர்வதேச சமூகம் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் முழுமையான கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டும்.

சிறைச்சாலைகளில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், அங்கவீனர்கள், நோய் வாய்ப்பட்டவர்கள் என பலதரப்பட்டவர்கள் உள்ள நிலையில் இவர்கள் உள ரீதியாக தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள்.

அவர்களை விடுவிப்பதற்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (அ-ஒ,125)

### குளிக்கச்...

குளிக்கச் சென்ற 3 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்ற நால்வர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் காப்பாற்றப்பட்டுள்ளாரெனவும், எஞ்சிய மூவரும் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளனரெனவும் பொலிஸார் கூறுகின்றனர். இதேவேளை, பதுளை - எட்டம்பிட்டிய பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நீரில் மூழ்கி ஐவர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### பணிப்புறக்கணிப்பு...

நாளை திங்கட்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக ஒன்றிணைந்த துணை மருத்துவ சேவை ஒன்றியம் தெரிவித்துள்ளது. தமது கோரிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சு முன்னதாகவே அறிந்திருந்தும், அதனைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இன்னும் எடுக்காதிருப்பதாக அந்த ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

### பாகிஸ்தான்...

னைக்கு விடப்படும் என்று கட்டுமானப் பொருள்கள் கைத்தொழில் மற்றும் ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சிமெந்து மூட்டை ஆயிரத்து 500 ரூபாவுக்கும் குறைவான விலையில் நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சின் செயலர் கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்தன தெரிவித்தார். (அ-ஒ,இ)

### 2ஆம் நிலைச்...

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மூத்த உதவிச் செயலராக பணியாற்றிய திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலராகவும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலராக பணியாற்றிய பிரணவநாதன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய திருமதி தேவநந்தினி பாபு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மூத்த உதவிச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-5)

### மோடிக்கு...

வைக்கப்பட்ட கூட்டு ஆவணத்தில் இருந்து தமது தரப்பு விலகியமைக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே காரணம் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குற்றம் சுமத்தி யுள்ளார். 'இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஆவணமாகக் கருதியே, அது தொடர்பான கலந்துரையாடல்களில் நாம் பங்கேற்றோம். எனினும், அதன் நோக்கத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாற்றியிருந்தது' என்று மனோ குற்றம் சுமத்தினார்.

கொழும்பு தனியார் வானொலியின் அரசியல் நிகழ்ச்சியிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (அ-ஒ,இ)

### மின்வெட்டு...

டிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் மின்சார சபையின் மின் பொறியியலாளர் சங்க பேச்சாளர் தெரிவித்தார்.

எரிபொருளின்றி மின் உற்பத்தி நிலையங்கள் நிறுத்தப்படும் போது மின் உற்பத்தி இயந்திரங்களை கையால் சுழற்ற முடியாது. இதேவேளை, மின்வெட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்த கருத்து கேலிக்கூத்தானது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ,இ)

### கரையொதுங்கிய...

துங்கிய 6 சடலங்களும் 40 தொடக்கம் 50 வயதுக்கு இடைப்பட்டவர்களுடையது என்பதும் அவர்கள் அனைவரும் ஆண்கள் என்பதும் உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் சடலம் ஒன்றில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதும் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்பரப்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதிக்கும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 6 சடலங்கள் கரையொதுங்கியிருந்தன. இந்தச் சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இந்தச் சடலங்களின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. பரிசோதனையின் முடிவுகளை பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சடலம் ஒன்றில் சுமார் 5 அல்லது 6 வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. கொலை செய்யப்பட்டு கடலில் வீசப்பட்டனரா அல்லது கடல் நீரில் மூழ்கி உயிரிழந்தனரா என்பதை சடலங்களின் தற்போதைய நிலையில் கண்டறிய முடியாது என்று மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். இது தொடர்பான மேலதிக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-ஒ,5)

### பயங்கரவாத...

நொச்சியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி சேவைச் சந்தை வளாகத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் இந்தப் போராட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான ஊடகப் பணியாளர் டிவனியாவின் மகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கையொப்பமிட்டார். (ஒ-113)

### க.பொ.த....

பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள க.பொ.த. உயர்தர மாணவர்களுக்காக 29 மருத்துவமனைகளில் சகல வசதிகளுடன் கூடிய பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எஸ். பிரணவதாசன் குறிப்பிட்டார்.

பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள மருத்துவமனைகள் தொடர்பான தகவல்களை, https://www.doenets.lk/ எனும் இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பரீட்சார்த்திகள், தமக்கான அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையங்களுக்கு சென்று, தாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்துவதும் கட்டாயமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னரே, பரீட்சை மத்திய நிலையங்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள விசேட அறையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் குறித்த பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பரீட்சார்த்திகள், இது தொடர்பிலான மேலதிக தகவல்களை தமது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகளிடமோ அல்லது 1911 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தியோ பெற்றுக்கொள்ள முடியுமெனவும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ,இ)

## இந்திய மீனவருக்கு எதிராக மன்னாரில் நேற்றுப் போராட்டம்

மன்னாரில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக் காலை மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்று உயிரிழந்த இரண்டு மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் கடைப்பிடிக்கப்பட்டது.

'மீனவர்கள் பிரச்சினை என்று ஏனையோர் ஒதுங்கிச் செல்லக் கூடாது. இந்த அரசு நாட்டின் வளங்களை கூறு போட்டு விற்கின்றது. அதைப் போலத்தான் கடல் வளத்தை ஏனையோர் சுரண்டிச் செல்வதை வேடிக்கை பார்க்கின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் இரண்டு மீனவர்களின் உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. இதனை தடுக்காவிட்டால் நாளை முல்லைத்தீவு, மன்னார் என்று உயிரிழப்புக்கள் நீளும்' என்று ஆர்ப்பாட்டத்தின்போது மீனவ சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். (ஒ-213)

## திருமணத்துக்கு சென்றோர் வீட்டில் கைவரிசை காட்டிய திருடர்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடி மூளாய் வீதியில் அமைந்துள்ள வீட்டிலிருந்து பணம் மற்றும் நகை என்பன திருடப்பட்டுள்ளன.

யாழ். மாநகர முதல்வரின் திருமண நிகழ்வுக்காக வீட்டார் குடும்பத்துடன் சென்றுள்ளனர். இந்த நிலையில் வீட்டில் யாருமில்லாததைப் பயன்படுத்தி ஒரு பவுண் தங்கச் சங்கிலி, ஒரு சோடி காப்பு மற்றும் 10 ஆயிரம் ரூபா பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

திருமண நிகழ்வு முடிந்து வீடு திரும்பியவர்கள், வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்தனர். உள்ளே சென்று பார்த்தபோது நகை மற்றும் பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-125)

## விவசாயக் கூட்டத்தில் மனிதமலத் தாக்குதல்

### வெலிஓயாவில் சம்பவம்

கொழும்பு, பெப். 6

விவசாய அமைப்புக்களின் கூட்டத்தில் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே மலம் கழித்து, அதிகாரிகளை மலத்தால் தாக்கியுள்ளார். இந்தச்சம்பவம் வெலிஓயா (மணலாறு) ஹலபட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த பருவத்தில் பயிர் அழிவுக்கு இழப்பீடு வழங்குவதில் விவசாய சங்க அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் முறைகேடுகளில் ஈடுபட்டதாக விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்த வாக்குவாதம் உச்ச நிலையடைந்துள்ளது. இதனையேடுத்து ஆத்திரமடைந்த விவசாயி ஒருவர், கூட்டம் நடைபெற்ற இடத்திலேயே மலத்தை கழித்து, அதனைக் கையில் எடுத்து வந்து விவசாய அமைப்பின் தலைவரைத் தாக்கியுள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் புன்னாலை கட்டுவன் சந்தியிலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதியில் இரண்டா வது காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 17 பரப்பு விற்பனைக்கு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 KM தூரம். நல்ல சூழல்.

1 பரப்பின் விலை 10 இலட்சம், ஒன்பது இலட்சம், எட்டு இலட்சம்.

தொடர்பு: **077 6234 204**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தைமேனி 20 பரப்புக் காணி பத்து பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

1 பரப்பின் விலை - **320,000/=**

15 அடி பாதையுடன் அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கொம்பனிக்கு முன் வீதி. (அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 km தூரம்

**076 890 9259, 077 015 0353**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 14 பரப்புக்காணி (நிலப்பரப்பு) இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**A9** வீதியிலிருந்து **150m** தூரம்

**077 2880 152, 077 911 6983, 0766583621**

## காவலாளர் தேவை

- மாலை 5.00 மணிமுதல் மறுநாள் காலை 8.00 மணிவரை கடமை புரிய வேண்டும்
- 10.02.2022 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை சுயவிவரத்துடன் நேரில் வருகைதரவும்

**தலைவர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ்.கிளை.**
**இல.67, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.இல. 021 222 2561**

(cs.37508) (2.6)

## கொள்வனவு செய்யப்படும்

மதபோட், ரம், புரொசசர், ஹாட்டிஸ்க் போன் மத போட், பிரிண்டர் போட், LCD போட், லப்டப் போட், கொம்பியூட்டர் கேசிங், UPS பற்றறி, உருப்படி கொம்பியூட்டர் Box போன்ற பழைய பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்கப்படும்.

முகவரி: **145, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

தொடர்பு: **077 072 3518, 076 686 0041**

(cs.18314) (2.6)

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் இயங்குகின்ற தொழிற் பேட்டை நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- இயந்திர இயக்குனர் (Exquder Machion Operator
- உதவியாளர் Assisstant

வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர் களுக்கு தங்குமிட வசதி உண்டு.

(CR 37486) (3/6) **077 310 7823**

## The Science corner

Clock Tower lane, Jaffna.

## A/L 2023
## English medium

**starts on 09/02/2022**

- Physics - R.Rakulan
- Chemistry - VK.Nantha
- Bio - S.Shivaranjan
- Com. MAT - Ra .Sinthujan

**076 545 6118**

(cs.42717) (2.6)

## இலங்கை உணவுகள் ஜப்பானில் போட்டிக்கு

கொழும்பு, பெப்.6

இலங்கை உணவுகளை சமைக்கும் போட்டி, ஜப்பானில் வைக்கப்பட்டது. ஜப் பானில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை சமையல் கலைஞர்களின் உதவியுடன் ஜப்பானில் உள்ள மக்களுக் காக இந்தப் போட்டியை ஏற்பாடு செய்தது. இதில் 45 போட்டியாளர்கள் பங்கேற்றனர். போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான இலங்கை உணவுகளைத் தயார் செய்வ தற்கு ஒரு மணித்தியாலம் வழங்கப்பட்டது. இதன் இறுதிப்போட்டியை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் அனுசரணையுடன், சர்வதேச அளவில் நடத்துவதற்கு தூதரகம் எதிர் பார்த்துள்ளது. (ம-4-இ)

## மணமகள் தேவை

ஜேர்மனை வதிவிடமாகக் கொண்ட கீரன் வயது - 30 (Engineering Diploma) யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு படித்த நற்குணமுள்ள அழகான பெண்ணை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: **0049 160 9239 7341**

(cs.42735) (2.6)

## காணி தேவை

கிளிநொச்சியில் இரணைமடுவுக்கும், வைத்தியசாலைக்கும் இடையில் 4 பரப்புக் காணி தேவை.

தொடர்பு: **075 760 4337**

## ENGLISH CLASSES

**யாழ்நகரில் தனி வகுப்புகள்**

**Grade 7 - (G.C.E.) O/L - A/L Graduates**

தொழில்புரிவோர் சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்

G.C.E. O/L - English Literature - K.Ganesh B.A

**077 766 8725**

## Frontend developer (ReactJS/AngularJS)

Nuvay Consultants Pvt Ltd is a start up company in Sri lanka (www.nuvay.digital) and develop web application and mobile apps. Currently, we are looking for an enthusiastic software engineer (Fulltime - 12PM-9PM IST / part time) to join with our team to be at the forefront of front end developments.

### Responsibilities

- Building frontend of applications using ReactJS/Nextjs/AngularJS
- Efficiently building applications with clean code and best practices
- Build reusable code and libraries for future use
- Work with development teams and product managers to ideate software solutions
- Design client-side side architecture
- Build the front-end of applications through appealing visual design
- Test software to ensur e responsiveness and efficiency
- Troubleshoot, debug and upgrade software
- Create security and data protection settings
- Build features and applications with a mobile responsive design
- Write technical documentation

### Requirements

- A relevant Degree/Diploma in Computer Science/IT with minimum 4 years of relevant industry experience.
- Expertise in Frontend development using ReactJS with Redux.
- Expertise in building simple UIs using CSS, HTML, LESS/SASS.
- Sound knowledge in ES6 concepts.
- Experience in Javascript, Typescript, JQuery & Bootstrap
- Excellent communication and teamwork skills.
- Desire to own code quality, stability, reliability and create great user experiences.
- Experience building and debugging complex systems in a team environment.
- Work experience in GIT, JIRA project management and bug tracking tool.
- Experience working in an Agile (SCRUM/Kanban) environment
- Code consistency and readability
- DevOps experience with AWS is plus
- Remote working experience & Environment

**Note:** Experience (5+ years) developers only will be considered as part time (20 hours per week).

### What We Offer

1. Work from home option (100% Remote)
2. Full time Employment
3. Career Growth opportunities
4. Attractive Salary based on experience (include EPF & ETF)
5. Candidates from any location

**PLEASE WRITE YOUR EXPECTED SALARY ON THE EMAIL.**
**If you are interested to be a part of Nuvay Consultants Pvt Ltd, Send us your resume to info@nuvay.digital**
**Contact: Mrs P. Sivarubini** **Contact no: +94766096933**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

## af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



**021 222 8093** 17, Kandy Road, Jaffna

## தேவை

ஏழு வயது சிறுவனை வார நாள்களில் 8.00 மணிமுதல் 5. மணிவரை வீட்டில் தங்கி படிப்பிக்கவும் கூட விளையாடவும் ஆள்கள் தேவை.

**077 301 3700**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வயோதிபபெண்ணை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை

**021 222 0604**

## ஆண் பணியாளர் தேவை

**பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இயங்கிவரும் பிறிண்டிங் நிறுவனத்திற்கு**

ஆண் பணியாளர் தேவை.

**கணினி** அறிவும் 5 km தூரத்திற்குள் வசிப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது)

(cr.37518) (2.6)

**077 724 4550**

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் இயங்கிவரும் பல்பொருள் வாணிபம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (cr137509) (2.6)

**077 806 6063**

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியில் கச்சேரி நடைதூர பகுதியில் A-9 வீதிக்கு அருகில் நவீன விசாலமான அறையுடன் கூடிய தனித்தனியே கழிப்பறை/ குளியலறை வசதிகளைக்கொண்ட தும். அகன்ற வரவேற்பறையும், தோட்டமும் உண்டு. அரச, தனியார் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. அறை வாடகை 5000/- வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

(cs.42713) (2.6)

**076 902 3732**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின் வரும் வேலையாட்கள் தேவை.

- தோசை தயாரிப்பவர்
- கொத்து ரொட்டி, பிரைட் றைஸ் தயாரிப்பவர்
- யூஸ் தயாரிப்பவர்
- சமையலறை உதவியாளர் (பெண்)
- சுத்திகரிப்பாளர் (பெண்)
- பில் போடுபவர் (ஆண் / பெண்)

**076 166 1986**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 12

சஞ்சீவி

Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 தை 24 ஞாயிற்றுக்கிழமை (06.02.2022) சிகரம் : 85

என்னுடைய கிணறு
என்னுடைய வாளி...
அள்ளிய தண்ணீரில்
யாருடைய வானம்
- வாசுதேவன்



# மாணவர்களின் கண்களை இலக்கு வைத்த மாபியாக்கள்!!

## எப்படி முறியடிக்கப்பட்டது சதி?

○ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில் கண்டாவளை, தர்மபுரம் பாடசாலையொன்றில் அண்மையில் மாணவர்களையும், பெற்றோரையும் ஏமாற்ற சில 'மருத்துவ மாபியாக்கள்' எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாபியாக்களுடனான கண்ணுக்குத் தெரியாத சமரில் நடந்தவைகள் பற்றி , வெவ்வேறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. உண்மையில் இந்தச் சம்பவத்தில் என்ன நடந்தது? யாரெல்லாம் இந்த மாபியாக்களை முறியடிக்க பின்னின்றார்கள்? எப்படி மாணவர்களும், பெற்றோரும் ஏமாற்றப்பட்டார்கள்? அதிலிருந்து மீண்டது எப்படி? என்பன பற்றிய உண்மைகள், உதயன்-சஞ்சீவி வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றன.

### கண் பரிசோதனையின் பின்னணி

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஒரு உயரதிகாரி மற்றும் கலாசார உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் தர்மபுரம் பிரதேசத்தில் கலைஞர்கள், மதகுருமார்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்று இடம்பெற்றது. அதன்போது குறித்த கண் பரிசோதனை முகாமில், தர்மபுரம் பாடசாலையின் ஆசிரியர்கள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது தங்களுடைய பாடசாலையிலும் சில மாணவர்களுக்கு பார்வைப் பிரச்சினை இருப்பதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

"அப்படியென்றால் உங்களது பாடசாலையிலும் இலவச கண் பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடு செய்யலாம்" எனத் தெரிவித்து மாவட்டச் செயலக அதிகாரிகள் தங்களுடைய தொலைபேசி இலக்கத்தை ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளனர்.

அந்த ஆசிரியர்கள் அதற்கு மறுநாள் பாடசாலையில் நடந்த காலைப் பிரார்த்தனையின் போது அதிபரிடம் விடயத்தை கூறியுள்ளனர்.

அதிபரும் "கடந்த இரண்டு வருடங்களாக பாடசாலையில் சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படும் வழக்கமான பாடசாலை மருத்துவப் பரிசோதனைகள் நடைபெறாமையாலும், சில மாணவர்களது கண்பார்வை குறித்த சந்தேகம் ஆசிரியர்களால் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தமையாலும், மாணவர்களின் நலன் கருதி இலவச கண் பரிசோதனையை மேற்கொள்ள அனுமதிக்கலாம்" என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதன் பின்னரே ஆசிரியரிடம் இருந்து கலாசார உத்தியோகத்தரின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்று அவருடன் இலவச கண்பரிசோதனை தொடர்பாக பாடசாலை அதிபர் உரையாடியுள்ளார்.

இதன் போது "பாடசாலையில் இலவசமாக கண் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். அதற்குப்பாடசாலை எவ்வித செலவும் செய்யத் தேவையில்லை. பரிசோதனை முடிவில் கண்ணாடி பயன்படுத்த வேண்டும் என்று சிபார்சு செய்யப்படுகின்ற மாணவர்களுக்கும் இலவசமாக கண்ணாடியை வழங்க புலம்பெயர் நாட்டில் உள்ள, தன் பெயரை வெளியிட விரும்பாத நலன்விரும்பி ஒருவர், உதவத் தயாராக இருக்கின்றார்." என்று தெரிவித்த கலாசார உத்தியோகத்தர், பாடசாலையில் கண் பரிசோதனை செய்வதற்காக ஒரு திகதியை ஒதுக்கித் தருமாறு அதிபரைக் கேட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் நடந்தது என்ன?

### அதிர்ச்சியை ஏற்படுத்திய பரிசோதனை

இவ் விடயத்தை அதிபர் தமது திணைக்களத் தலைவருக்கு தொலைபேசியில் அறிவித்தபோது "மாணவர்கள் நன்மையடைவதால் இதனைச் செய்வதில் ஆட்சேபனை இல்லை. எழுத்து மூலம் தெரியப்படுத்திவிட்டு செய்யுங்கள்" என்ற பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி எழுத்துமூல அறிவித்தலை மேலதிகாரிகளுக்கு வழங்கிய பின்னர், கலாசார உத்தியோத்தரைத் தொடர்பு கொண்ட அதிபர் மாணவர்களுக்கு கண் பரிசோதனை செய்வதற்குரிய திகதியை வழங்கியுள்ளார். அப்போது "குறித்த திகதியில் கண் பரிசோதனை செய்ய வருபவர்களுக்குரிய உணவை வழங்கினால் போதுமானது. வேறு எந்தக் கட்டணமும் செலுத்தத்தேவையில்லை" என்று அதிபருக்கு கலாசார உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து 23.12. 2021 வியாழக்கிழமை தர்மபுரம் இல.1 பாடசாலையில் கண் பரிசோதனை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரில் தனது கிளைகளை வைத்துள்ள தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த மூவர் இதற்காக குறித்த பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர். (இவர்கள் கண் மருத்துவர்கள் அல்லர்) பரிசோதனையும் இடம்பெற்றது.

முடிவில் 71 மாணவர்களுக்கு கண்களில் பாதிப்பு உள்ளது என்றும் இவர்கள் அனைவரையும் யாழ்ப்பாணத்தில் உள்ள தங்களுடைய நிறுவனத்துக்கு மேற்பரிசோதனைக்காக வருமாறும் அவர்கள் பரிந்துரைத்தனர்.

அப்போது "பிள்ளைகள் அவ்வாறு இங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவது சாத்தியம் அல்ல. அவர்களால் வரமுடியாது" என அதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பரிசோதனைக்காக பயணம்

பின்னாளில் பாடசாலையில் நடந்த பெற்றோர் சந்திப்பு ஒன்றின்போது சில பெற்றோரால் "பேருந்து ஒன்றை ஒழுங்குபடுத்தித் தந்தால் தாம் தமது பிள்ளைகளை மேற்பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் கொண்டு சென்று வரமுடியும்" என்ற கோரிக்கை அதிபரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் பி"ள்ளைகளிடம் இருந்து எதுவிதக் கட்டணமும் அறவிடக்கூடாது. கட்டணம் தேவை எனில் சுரக்சா காப்புறுதி ஊடாக பாடசாலை மூலம் விண்ணப்பித்து அதனைச் செலுத்த முடியும்" எனச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்திய பின்னரே அதிபர் பேருந்தில் மாணவர்களை ,யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இதற்கமைவாக 25.12.2021 சனிக்கிழமை பெற்றோர் ஒவ்வொருவரும் தலா 300 ரூபா வீதம் செலுத்தி பேருந்து ஒன்றை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள குறித்த தனியார் கண் சிகிச்சை கண்ணாடி விற்பனை நிறுவனத்துக்குச் சென்றனர். அங்கு மாணவர்களுக்கு மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதில் 10 மாணவர்களுக்கு கண்ணில் பிரச்சினை இல்லை என்றும், அவர்கள் கண்ணுக்கான பயிற்சிகள் செய்தால் போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் ஏனைய 61 மாணவர்களும் கண்ணாடி பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்த

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிட்டுபூங்கா பிரகடனமும் அதன்பின்னும்...!

○ நிலாந்தன்

இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை அனுப்பும் நோக்கத்தோடு ஆறு கட்சிகள் ஒன்றாக உழைத்துக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கியைப் போட வேண்டியதன் அவசியம் குறித்து இந்தக் கட்டுரையாளர் எழுதியும் பேசியும் வந்தார். ஆனால் அந்தக்கொழுக்கி 13 ஆக இருக்க வேண்டுமா என்ற கேள்வியையும் அவர் கேட்டிருந்தார். அந்த நாள்களில் நண்பர் ஒருவர் அவர் ஒரு சிவில் சமூக செயற்பாட்டாளர், அதோடு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர் கட்டுரையாளரிடம் கேட்டார், "இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கியைப் போடும் பலம் இந்த ஆறு கட்சிகளிடமும் இருக்கிறதா?" என்று. அவருக்கு கட்டுரையாளர் சொன்னார், "இல்லை. இப்போதுள்ள நிலைமைகளின் படி அவர்களுக்கு அந்தப் பலம் இல்லை. ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் அந்தப் பலம் இல்லை" என்று.

ஏனெனில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப்பரப்பில் செயலுக்கு போகாத பிரகடனங்களும், தீர்மானங்களும், வாக்குறுதிகளும் , மக்களாணைகளும்தான் உண்டு. எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியும் தனது இறுதி இலட்சியத்தை முன்வைத்து தொடர்ச்சியாகப் போராடவில்லை, ரிஸ்க் எடுக்கவில்லை.தெட்டந் தெட்டமான மக்கள் எழுச்சிகள், சிறிய கவனவீர்ப்புப் போராட்டங்கள் போன்றவற்றுக்கும் அப்பால் தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைக்கும் சக்தி தங்களுக்கு இருப்பதாக இதுவரையிலும் எந்த ஒரு தமிழ்க் கட்சியும் நிரூபித்திருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியல் பரப்பானது இந்தியாவுக்கு கடிதம் அனுப்பும் விவகாரத்தில் இரண்டுபட்டு நிற்கிறது. பெரும்பான்மையான கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டுக்கோரிக்கையை இந்தியாவை நோக்கி வைத்திருக்கின்றன. அதேசமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அந்த ஒருங்கிணைப்புக்குள் இணைய மறுத்ததோடு மேற்படி ஆறு கட்சிகளுக்கும் எதிராக ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் கிட்டு பூங்காவில் நிகழ்த்தியிருக்கிறது.

கிட்டு பூங்காவில் நடந்த ஆர்ப்பாட்டமானது. இந்தியாவுக்கும் ஆறு கட்சிகளுக்கும் உள்ள பொறுப்பை அதிகப்படுத்தியிருக்கிறது எனலாம். அவ்வாறான ஆர்ப்பாட்டமொன்றை ஒழுங்குபடுத்தும் சக்தி தனக்கு உண்டு என்பதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிரூபித்திருக்கிறது. அதை அவர்கள் இப்பொழுதுதான் நிரூபிக்க வேண்டும் என்று இல்லை. ஏற்கனவே கடந்த 10 ஆண்டுகளில் நடந்த எழுக தமிழ் போன்ற போராட்டங்களில் மக்களை பொதுவெளிக்கு கொண்டு வந்ததில் அந்தக்கட்சிக்கும் முக்கிய பங்கு உண்டு.ஆனால் ஒரு நாள் எழுச்சி மட்டும் போதாது. டில்லியில் வேளாண் மசோதாவுக்கு எதிராக மாதக்கணக்கில் விவசாயிகள் போராடியதைப்போல தொடர்ச்சியாகப் போராடினால்தான் இந்தியாவும் திரும்பிப் பார்க்கும்;இலங்கையும் திரும்பிப் பார்க்கும்;ஏன் மக்கள் மத்தியிலும்கூட ஒரு விழிப்பு ஏற்படும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்பொழுது பதின்மூன்றாவது திருத்தம் வேண்டுமா? வேண்டாமா ? என்பதல்ல பிரச்சினை. எரிவாயு கிடைக்குமா? யோக்கெட் இல்லாமல் பால்மா கிடைக்குமா? பொருள்களின் விலை குறையுமா? என்பதே அவர்களுடைய பிரச்சினை.இந்தப் பிரச்சினை களுக்குள் அவர்களுடைய கவனத்தை ஓர் அரசியல் இலக்கின் மீது குவிப்பது என்பது கட்சிகளின் உழைப்பில்தான் தங்கியிருக்கிறது. கடந்த 12 ஆண்டுகளாக எந்த ஒரு கட்சியும் அவ்வாறு தொடர்ச்சியாக உழைக்கவில்லை.

கட்டுரையாளரின், கடந்த வாரக் கட்டுரையில் குறிப்பிட்டி ருந்தது போல, பொங்கலுக்கு முதல் நாள் முற்றவெளியில் நடந்த ஒரு கவனவீர்ப்புப் பொங்கலில் எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் காணமுடியவில்லை.திரளான மக்களையும் காணவில்லை. நேற்றுமுன்தினம் சுதந்திர தினத்தன்று நடந்த எழுச்சிகளும் ஒரு நாள் போராட்டங்களே. ஒருநாள் மக்கள் எழுச்சிகளை தொடர்ச்சியான போராட்டங்களாக மாற்றும் போதுதான் ஓர் அரசியல் இயக்கம் அல்லது கட்சி அதன் இறுதி வெற்றியை பெறமுடியும்.இது எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் பொருந்தும்.

கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்த்தேசியப் பரப்பில் அதிகம் புவிசார் அரசியல் குறித்தும் பூகோள அரசியல் குறித்தும் பேசி வந்த கட்சி முன்னணிதான். ஆண்டு சரியாக ஞாபகம் இல்லை.2013 ஆக இருக்கவேண்டும்.யாழ்.மறைக் கல்வி நிலையத்தில் நடந்த ஒரு சந்திப்புக்குப் பின் கஜேந்திரகுமாரிடம் இந்தக் கட்டுரையாளர் கேட்டார் " புவிசார் அரசியலை எப்படி கையாளப் போகிறீர்கள் அதற்கான வழி வரைபடம் என்ன?" என்று. அவர் சொன்னார் "அதற்குரிய மக்கள் ஆணையைப் பெற்று வெளிநாடுகளை அணுக வேண்டும்" என்று. கூட்டமைப்பிலிருந்து விலகி வந்தபின் கடந்த பத்தாண்டுகளில் அந்தக்கட்சி இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் வரையிலும் முன்னேறி இருக்கிறது. எனினும் அந்த வெற்றியைக் கூட கொண்டாட முடியாதபடி மணிவண்ணனின் பிரிவு அந்தக்கட்சிக்கு சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்த இரண்டு ஆசனங்கள் அந்தக்கட்சி முன்வைக்கும் வெளியுறவு இலக்குகளை நோக்கி பேரம் பேசுவதற்கு போதுமானவை அல்ல. அண்மையில் நடந்த ஒரு 'கிளப் ஹவுஸ்' சந்திப்பில் கஜேந்திரகுமாரிடம் அதுபற்றி கேட்கப்பட்டிருக்கிறது."கடந்த பல ஆண்டுகளாக புவிசார் அரசியல் குறித்து அதிகம் பேசி வந்த நீங்கள் இதுவிடயத்தில் எதை சாதித்திருக்கிறீர்கள்?" என்ற தொனிப்பட கேட்கப்பட்ட

> **தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்பொழுது பதின்மூன்றாவது திருத்தம் வேண்டுமா? வேண்டாமா ? என்பதல்ல பிரச்சினை. எரிவாயு கிடைக்குமா? யோக்கெட் இல்லாமல் பால்மா கிடைக்குமா? பொருட்களின் விலை குறையுமா? என்பதே அவர்களுடைய பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளுக்குள் அவர்களுடைய கவனத்தை ஓர் அரசியல் இலக்கின் மீது குவிப்பது என்பது கட்சிகளின் உழைப்பில்தான் தங்கியிருக்கிறது.**

பொழுது , "அவ்வாறு புவிசார் மற்றும் பூகோள அரசியலை கையாள்வதற்கு இப்போதுள்ள இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் போதாது" என்ற தொனிப்பட அவர் பதில் கூறியிருக்கிறார். அதில் உண்மை உண்டு. அதைத்தான் கட்டுரையாளர் தொடர்ச்சியாக கூறி வருகிறார். வெளிவிவகாரத்தை கையாள்வது என்பது முதலில் ஒரு குறிப்பிட்ட அமைப்பு அல்லது கட்சி தன் மக்கள் மத்தியில் ஒரு "பவர் சோர்ஸ்" ஆக பல மையமாக தன்னை ஸ்தாபிப்பதில் இருந்தே தொடங்குகிறது.வெளிவிவகாரம் எனப்படுவது ஒரு பல மையம் ஏனைய பல மையங்களோடு வைத்துக்கொள்ளும் இடையூடாட்டம்தான்.இந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தனது வெளியுறவு இலக்குகளை நோக்கி உழைப்பதற்கு முதலில் தனது பலத்தை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஒருநாள் எழுச்சிப் போராட்டங்கள் அந்தப் பாதையில் அவர்களுக்கு பலம் சேர்க்கலாம். ஆனால் அவை மட்டும் போதாது.அதற்கும் அப்பால் தாங்கள் கடந்த 10 ஆண்டுகளாக செய்யத் தவறியவற்றை இனிமேலாவது நிரூபித்துக் காட்ட வேண்டியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் அரசியலானது வழமையான ஒரு மிதவாத அரசியல் அல்ல.

ஆயுத மோதல்களுக்கு பின்னரான அரசியல் அது. இனப்படுகொலை ஒன்றின் மூலம் சிதைக்கப்பட்ட ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் அரசியல். ஒரு தேசத்தை நிர்மாணிப்பதற்கான வெளியுறவுக்கொள்கை எனப்படுவது முதலாவதாகவும் அடிப்படையாகவும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதில் இருந்துதான் தொடங்குகிறது. ஆனால் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டுவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த 10 ஆண்டுகளில் போதிய வெற்றிகளைப் பெறத்தவறியிருக்கிறது. இப்பொழுதும் கூட பெரும்பான்மைக் கட்சிகள் இந்தியாவை நோக்கி திரும்பியிருக்கும் ஒரு பின்னணியில், முன்னணி மட்டும் தனித்து நிற்கின்றது. தனது வெளியுறவு இலக்குகளை முன்வைத்து, விடாது உழைப்பதன் மூலம் தனது இலட்சியம் சரியானது என்பதை நிரூபிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அந்தக்கட்சிக்கு இப்பொழுது உண்டு.13 க்கு எதிராக போராடியதைப் போன்று சமஷ்டியைக் கேட்டும் 'ரிஸ்க்' எடுத்துப் போராட வேண்டும்.

இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைப்பதில் தமக்கு ஆட்சேபனைகள் கிடையாது என்று அந்தக்கட்சியின் செயலாளர் கிட்டு பூங்கா எழுச்சிக்கு முதல் நாள் கட்டுரையாளருக்கு தனிப்பட்ட முறையில் சொன்னார். ஆனால் கிட்டு பூங்கா பிரகடனமும் உட்பட அந்தக்கட்சியின் நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால் அது நடைமுறையில் இந்தியாவை அணுகத் தேவையான சாத்தியவெளிகளைத் திறக்கும் ஓர் அரசியல் அல்ல. அப்படியென்றால், முன்னணியின் பூகோள அரசியல் வழிவரைபடத்தின்படி வேறு எந்த நாடுகளை அணுக வேண்டும் என்று அந்தக்கட்சி நம்புகின்றது ? தனது வெளியுறவு அணுகுமுறைக்கு வேண்டிய அமைப்புக்களை அந்தக்கட்சி கொண்டிருக்கிறதா? ஆகிய கேள்விகளுக்கு அவர்கள் பதில் கூறவேண்டும்.

இதே கேள்விகளை இந்தியாவுக்கு கூட்டுக் கோரிக்கைகளை வைத்த கட்சிகளிடமும் கேட்கலாம். வெளிவிவகார அணுகுமுறை என்பது ஒரு கடிதத்தோடு முடிகிற விவகாரம் அல்ல.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள அரசுக்கும் - அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவை நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டு இந்தியா தமிழ் மக்களை நோக்கி வரக் கூடிய நிலைமைகள் இன்னமும் ஏற்படவில்லை. கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தை பகைக்காத ஒரு தீர்வைத்தான் இந்தியா தமிழ் மக்களுக்கு தரலாம் என்றால் அது நிச்சயமாக 13 ஐத் தாண்டாது.

(மறுபக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் அப்படி, இலங்கையிலோ இப்படி!!

ந.பரமேஸ்வரன்





ஆப்கானிஸ்தானில் பெண்கள் உடல் முழுவதையும் மூடும் புர்கா அல்லது ஹிஜாப் அணிய வேண்டுமென்ற தலிபான்களின் அறிவித்தலுக்கு எதிராக தலைநகர் காபூலில் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் அல்ஜெசீரா தொலைக் காட்சி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் பெண்கள் உடல் முழுவதையும் மூடும் புர்கா அல்லது ஹிஜாப் அணிய வேண்டுமென உத்தியோகபூர்வமாக தலிபான்களால் அறிவிக்கப்படவில்லை. ஆனால் நல்லொழுக்கத்தை பாதுகாக்கும் அமைச்சினால் ஆப்கானிஸ்தானிலுள்ள விற்பனை நிலையங்கள் தேநீர்ச் சாலைகள் என்பவற்றிலும் பெண்கள் புர்கா அல்லது ஹிஜாப் அணிய வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன . 'ஷரீ ஆ' சட்டத்தை மேற்கோள் காட்டியே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 'ஷரீ ஆ' சட்டத்துக்கு ஏற்ப பெண்கள் கட்டாயமாக புர்காவை அணிய வேண்டும் என அந்தச் சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. புர்கா, ஹிஜாப் என்பன எப்படி இருக்க வேண்டும் என்ற விளக்கமும் அந்த சுவரொட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

புர்கா கறுப்பு வர்ணத்திலும், ஹிஜாப் நீல நிறத்திலும் இருக்கவேண்டுமெனவும் கட்டளை பிறப்பிப்பது போல அந்தச் சுவரொட்டி வாசகங்கள் காணப்படுகின்றன.

ஆப்கான் பெண்கள் நீலம், கருநீலம், வெள்ளை நிறங்களில் விற்பனை செய்யப்படும் புர்காவையே கூடுதலாக அணிந்து வருகின்றனர். கறுப்பு நிற புர்காவை அணிவது அரிதாகவே காணப்படுகிறது. 2021 ஓகஸ்டில் தலிபான்கள், ஆப்கானிஸ்தானின் ஆட்சியை கைப்பற்றிய போது 'பெண்கள் புர்கா அணிய வேண்டுமென்ற அவசியமில்லை ஆனால் இஸ்லாமிய கலாசாரப்படி உடை அணிய வேண்டும்' எனக் கூறியிருந்தனர். 1996 முதல் 2001 வரையான தலிபான்களின் ஆட்சியில் பெண்கள் புர்கா அணிய வேண்டும் என்ற உத்தரவு இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

உலகெங்கும் வாழும் முஸ்லிம் பெண்கள் தமது மத, கலாசார அடையாளங்களை அடியொற்றி தலையை மூடி , விதம் விதமான முக்காடுகளை அணிந்து வருகின்றனர். இப்போது ஆப்கானிஸ்தானில் பெண்கள் வித விதமான வர்ணங்களில் வித்தியாசமான டிசைன்களில் தலையை மூடி முக்காடு அணிந்து கொண்டு திரிகின்றனர்; ஒரு சில பெண்கள் மட்டும் புர்கா அணிந்து கொண்டு திரிகின்றனர். முக்காடு போடுவது பெண்களின் சுதந்திரத்தைப் பறிக்கிறது என்று சொன்னாலும், ஆப்கானிஸ்தானில் பெரும்பாலான பெண்கள் வெட்கப்படாமல் தலையை மூடி முக்காடு அணிவது, ஆப்கானிஸ்தானின் மரபாக காணப்படுகிறது.

ஆப்கானின் முன்னாள் சமூக நலத்துறை மற்றும் தொழில் பிரதியமைச்சரும் பெண்ணியச்செயற்பாட்டாளருமான ஜமீலா ஆப்கானி பெண்களின் சுதந்திரம் மற்றும் சமாதானம் என்ற சர்வதேச அமைப்பின் (Women's International League for Peace and Freedom) தலைவியாகவும் இருக்கிறார். தலிபான்கள் பெண்களின் ஆடை விடயத்தில் விதிக்கும் கட்டுப்பாடுகள் குறித்து அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். "எமது சமய நம்பிக்கைகளைப்பற்றி எமக்குத்தெரியும். பெண்கள் என்ன மாதிரி உடை அணிய வேண்டும் என்பதை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும் . தலிபான்கள் தேவையில்லாத விடயங்களில் தலையிடுவதை விட்டுவிட்டு, பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண்பதிலும், குழந்தைளுக்கு உணவளிக்க முடியாமல் தவிக்கும் தாய்மார்கள் மீதும் கவனம் செலுத்த வேண்டும்.

ஆப்கான் பெண்கள் உடையை பற்றி இப்போது சிந்தித்துக்கொண்டி ருக்கவில்லை அவர்கள் வேறு அவசியமான தங்களது வேலைகளில் மும்முர மாக ஈடுபட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானில் ஏற்கனவே பெரும்பாலான பெண்கள் தலையை மூடி முக்காடு அணிந்துள்ளனர்; இப்போது எதற்காக தலிபான்கள் தேவையில்லாமல் இந்த பிரச்சினையை எழுப்புகின்றனர்?" என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார். இதே வேளை , ஆப்கானிஸ்தானின் அற நிலையத்துறை அமைச்சர் முகமட் அகிப் முகாஜிர் "பெண்கள் புர்கா அல்லது ஹிஜாப் அணியவேண்டுமெனக் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. பெண்கள் புர்கா அணிய வேண்டுமென்ற கட்டாயமில்லை, ஆனால் புர்காவோ ஹிஜாப்போ பெண்கள் தமது உடலை மூடி ஆடை அணிய வேண்டும். இது பெண்களுக்கான ஆலோசனை மட்டுமே. எனவே புர்கா அணியாத பெண்கள் தண்டிக்கப்படமாட்டார்கள்" என அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார். "ஆனால் இது பற்றிய பூரண விளக்கம் தலிபான் போராளிகளுக்கு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு ஒழுக்கம் பற்றி போதிக்கப்படுகிறது . அவர்கள் கிராமப்புறங்களில் பெண்களை புர்கா அணியுமாறு பலவந்தப்படுத்துகிறார்கள் " என ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஒபைதுல்லா பஹீர் என்பவர் கூறுகிறார்.

> அரபு இராச்சியத்தில், அதுவும் மிக இறுக்கமாக இஸ்லாமியச் சட்டங்களை விதிக்கும் தலிபான்களின் ஆட்சியில் வாழும் பெண்கள் புர்காவை தூக்கி எறியத் தயாராகிக்கொண்டிருக்கையில் , இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட இஸ்லாமிய ஆசிரியைகள், புர்காவுடன்தான் கடமைக்குச் சமூகமளிப்போம் என அடம்பிடித்து அதைச் சர்ச்சையாக்குவது வேடிக்கையாக உள்ளது.




"நான் உடுத்தும் உடை எனது மதத்துக்கு எதிரானது அல்ல" என பெண்ணியச் செயற்பாட்டாளரான அரிபா பாத்திமி கூறுகிறார்.

36 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான சோனியா அஹ்மதியா என்ற பெண் , "இதை நான் முற்று முழுதாக எதிர்க்கிறேன்; ஆடை விடயத்தில் பெண்களைவற்புறுத்த முடியாது" எனக் கூறுகிறார். ஆப்கான் பெண் ஒருவர் புர்காவை தூக்கி பின்புற மாக வீசி விட்டு, "இது பாகிஸ்தானிலிருந்து வந்த பிற்போக்குத்தன மான அரேபிய கலாசாரம்" என்று கூறும் காட்சி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

அரபு இராச்சியத்தில், அதுவும் மிக இறுக்கமாக இஸ்லாமியச் சட்டங்களை விதிக்கும் தலிபான்களின் ஆட்சியில் வாழும் பெண்கள் புர்காவை தூக்கி எறியத் தயா ராகிக் கொண்டிருக்கையில் , இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட இஸ்லாமிய ஆசிரியைகள், திருகோணமலை சண்முகா இந்துக்கல்லூரிக்கு புர்காவுடன் தான் கடமைக்கு சமூகமளிப்போம் என அடம்பிடித்து அதைச் சர்ச்சையாக்குவதும், யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பரீட்சைகளின் போது கூட, 'முக்காட்டை அகற்ற மாட்டேன்' என அடம்பிடிப்பதும் வேடிக்கையாக உள்ளது. ■

# கிட்டுபூங்கா...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி...)



தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய எந்த ஒரு தீர்வின் பருமனும் புது டில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான நட்பின் பருமனுக்கு நேர் விகித சமனானது.

எனவே புது டில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவில் முரண்பாடுகள் அதிகரிக்கும் போதுதான் ஈழத் தமிழர்களுக்கு கிடைக்கக் கூடிய தீர்வின் பருமனும் அதிகரிக்கும். இது விடயத்தில் இந்தியாவை தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கும் சக்தி மேற்படி ஆறு கட்சிகளுக்கும் உண்டா? அதற்காக உழைக்கத் தேவையான வழிவரைபடத்தையும் அமைப்புக்களையும் அந்தக்கட்சிகள் கொண்டிருக்கின்றனவா? அதற்காக ரிஸ்க் எடுக்க, அர்ப்பணிக்க அந்தக்கட்சிகள் தயாரா?

கடந்த 12 ஆண்டுகளாக ஜெனிவாவை கையாள்வதற்கும் அமெரிக்காவை கையாள்வதற்கும் இந்தியாவைக் கையாள்வதற்கும் தாயகத்தில் தமிழ் மக்களிடம் கட்டமைப்பு சார்ந்த சிந்தனைகள் எவையும் இருக்கவில்லை. ஒரு பொருத்தமான வெளியுறவுக் கொள்கையோ வெளியுறவு கட்டமைப்போ இருப்பதாக தெரியவில்லை. வெளியுறவுக் கொள்கைகள் இராணுவ இரகசியங்கள் அல்ல. கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் உத்திகள்தான் இரகசியமாக இருக்க முடியும். தமிழ்க் கட்சிகள் எவரிடமும் அவ்வாறு வெளியுறவு கட்டமைப்புக்கள் இருப்பதாக தெரியவில்லை. இவ்வாறான ஒரு வெற்றிடத்தில்தான் ரெலோ இயக்கத்தின் முன் முயற்சியால் இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. இங்கு மறுபடியும் அழுத்திக் கூற வேண்டும் ஒரு வெளியுறவு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில்தான் அவ்வாறு 6 கட்சிகள் இணைந்து ஒரு முயற்சியை முன்னெடுத்தி ருக்கின்றன. இதுதான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலையும். இப்படிப்பட்டதோர் வெற்றிடத்தில், கிட்டு பூங்கா பிரகடனத்துக்கு பின் தமிழ் அரசியலில் இரு வேறு வெளியுறவு அணுகுமுறைகள் துலக்கமாக மேலெழத் தொடங்கிவிட்டன. ஆனால் இந்த இரு வேறு வெளியுறவுப் போக்குகளும் பிரகடனங்களாகவும், கூட்டுக் கோரிக்கைகளாகவும் மட்டுமே இப்பொழுது காணப்படுகின்றன. வெளியுறவு அணுகுமுறை எனப்படுவது ஒரு கூட்டுக் கோரிக்கையோ அல்லது பிரகடனமோ அல்ல. அது ஒரு நடைமுறை; அது ஒரு செயல் வழி. ஓர் அரசற்ற மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை வெளியுறவு அணுகுமுறை எனப்படுவது தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு பகுதி. இனப்பிரச்சினை எனப்படுவது சாராம்சத்தில் ஓர் அனைத்துலகப் பிரச்சினைதான். அதற்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு.

எனவே அனைத்துலகத் தரப்புகளை கையாள்வதற்கு வெளியுறவுக் கொள்கை மிக முக்கியம். அந்தக் கொள்கையை செயல்படுத்த உரிய கட்டமைப்புகள் அவசியம். கட்டமைப்புக்களுக்கூடாக உழைக்க வேண்டும், ரிஸ்க் எடுக்கவேண்டும். எனவே ஆறு கட்சிகளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தனித்தனியே தமது இறுத் இலக்குகளை நோக்கி உழைக்கட்டும்.

யாருடைய வெளிவிவகார அணுகுமுறை தீர்க்கதரிச னம் மிக்கது என்பதனை வரலாறு நிரூ பிக்கும். அந்தனியோ குரொம்சி கூறுவதுபோல "புரட்சிகரமான அரசியல் என்பது, வரலாற்றில் செயலூக்கமிக்க வகையில் தலையீடு செய்வது தானேயன்றி, 'சரியான' நிலைப்பாடுளை மேற்கொள்வதும் அவை சரியானவைதான் என நிரூபிக்கப்படப் போகும் நாளுக்காக காத்திருப்பதுமல்ல."

தவிர்க்க முடியாத காரணத்தால் வழமையாக இடம்பெறும் **'அழகம்மா கடத்தல் வழக்கு'**, **அற்றைத்திங்கள், சிறுவர் கூடர்** ஆகிய பகுதிகள் இவ்வாரம் இடம்பெறவில்லை. அடுத்த வாரம் வழமைபோல் அவை பிரசுரமாகும். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 69

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | | ■ | 14 |
| 15 | | 16 | | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | |
| 20 | | ■ | 21 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

..............................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.தேடிக்கொள் 4.தலைவன் மனம் கவர்ந்தவள் 6. சுந்தரம் 7. தாமரை 9. காலம் தாழ்த்து 11. திறமையைக் குறிப்பிடும் சொல். 12. காரணமாக அமைவது. 13. அறிவு 15. காதல் தேவன் 17. உள் 18. அரையின் அரை 19. முழுதுமான 20. ஓட்டை 21. வாணிகம்.

## மேலிருந்து கீழ்

1. விடயம் 2. புலவன் 3. நாள் 4. மனைவியை இழந்தவன் 5. நோய் 8. வீரன் 10. ஒலிப்பது இது 12. கூற்றுவன் 13. மகள் 14. ஒன்று நீளம் மற்றது இது 15. மோர் கடையப் பயன்படும் கருவி 16. பெரிய 17. இதுவே எழுத்தின் முதல் என்கிறார் வள்ளுவர் 19. சபை

**சொற்சிலம்பம் போட்டி 68 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. விவாதம் 4. அசதி 7. வேட்டு 8. பேணுதல் 9. கடுக்கன் 11. கலை 12. குழி 13. தாம் 15. சலம் 17. திரிசடை 19. பாதம் 21. கவரி 22. விளம்பு 23. திரி 24. கலாம்

**மேலிருந்து கீழ்**

1.விவேகம் 2. வாட்டு 3. தடுக்கு 4. அணு 5. சதகம் 6. தில்லை 8. பேன் 10. கழிசடை 13. தாம்பாளம் 14. அரிவரி 16. அம்புலி 17. திகதி 18. சரி 20. தம் 22. விலா

**சொற்சிலம்பம் போட்டி இல.69**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**11.02.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 68இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**அ.மயூரி**
48 கனகசபை வீதி,
மானிப்பாய்.

**2 ஆம் பரிசு**
**மலர்விழி சுதாகர்**
பிரதேச செயலகம்,
நல்லூர்.

**3 ஆம் பரிசு**
**வி.வித்தியாயினி**
வேம்படி மகளிர் உயர்தரப்
பாடசாலை.

**4 ஆம் பரிசு**
**ஸ்ரீ.துஷாரா**
1ஆம் வருடம், மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

**5 ஆம் பரிசு**
**[illegible]**
புலோலி தென்மேற்கு
புலோலி

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை


○ ந.பரமேஸ்வரன்

கோட்டையின் உட்புறத்தில் சிலுவை வடிவிலான சதுரத் தேவாலயம் ஒன்று காணப்படுகிறது. இந்தத் தேவாலயம் டச்சுக்கட்டடக்கலை மரபில் அமைந்துள்ளது. இந்தத்தேவாலயம் ஆட்டுப்பட்டித்தெருவில் அமைந்துள்ள தேவாலயத்தை ஒத்ததாகக் காணப்படுகிறது. வலது புறத்தில் இராணுவத் தளபதியின் அறை உள்ளது.

அரச நிர்வாக அலுவலகங்களும் கோட்டையினுள் உள்ளன. உள்ளே ஆங்கிலேய அதிகாரிகள் டச்சுக்காரரிடமிருந்து வாடகைக்குப்பெற்ற வீடுகள் உள்ளன.

கோட்டையின் மேற்குப்புறத்தில் தொழில்நுட்பவியலாளர்களினதும் கீழ் நிலை அதிகாரிகளினதும் வீடுகள் காணப்படுகின்றன. தேவாலயத்துக்கு அருகே ஆங்கிலேய முறைப்படி அமைக்கப்பட்ட கால்நடைத்தொழுவம் ஒன்று உள்ளது இது கேர்ணல் பார்பட்டினால் அமைக்கப்பட்டது. இந்த தொழுவத்தில் குதிரைகள், எருதுகள்,பசுக்கள், கடாக்கள்,கோழிகள்,ஆடுகள்,பன்றிகள் என்பன நிற்கின்றன. அங்கு அருமையாக நின்ற பிரிடிஷ் மாடு ஒன்று எம்மைக்கவர்ந்தது. இராணுவத்தளபதியின் வீட்டுக்கூரை மீது பறவைகள் அமர்ந்து ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தன. கோட்டையின் உள்ளே வீதிகளில் மான், மரை என்பன காணப்படுகின்றன.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து செல்லும் பிரதான பாதை திருகோணமலைக்குச் செல்கிறது. வீதியின் இருமருங்கிலும் பெரும் விருட்சங்கள் வரிசையாக காணப்படுகின்றன. மரங்களின் கீழ் ஓடுகளால் கூரை போடப்பட்ட வீடுகள் காணப்படுகினறன. பெரும்பாலான வீடுகள் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. மாடி வீடுகள் ஒன்றுமில்லை. விறாந்தைகள்.போர்டிகோ என்பன மரத்தூண்களால் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்கு பச்சை வர்ணம் பூசப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்குமிடையே கிரமமான வர்த்தக்கதொடர்பு காணப்படுகிறது. உள்ளூர் கிறிஸ்தவர்களுக்காக சென். ஜேம்ஸ் தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. உருளைக்கிழங்குச் செய்கை இதுவரை யாழ்ப்பாணத்தில் வெற்றியளிக்கவில்லை.



யாழ்ப்பாணம் பார்ப்பதற்கு அழகாகக் காட்சியளிக்கிறது. பச்சை வயல்களிடையே தூய காற்று வீசுகிறது. இந்தச் செழுமைமிக்க வயல்கள் வேலை வெட்டியின்றி இருப்போரை காலை முதல் மாலைவரை வந்து வேலை செய்யுமாறு அழைக்கின்றன. யாழ்ப்பாண மண் விவசாயத்துக்கு உகந்ததாகக் காணப்படுகிறது. இந்த மண் வெக்கையைத்தணித்து ஆண்டு முழுவதும் விவசாயம் செய்வதற்கு உகந்ததாக ஆக்குகிறது.

கோப்பாயிலுள்ள ஒரு வீட்டில் சுவிட்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த டாக்டர் ஆர்னோல்ட் (Dr. Arnold)சின்னமுத்து நோயாளிகளுக்கு சிகிச்சையளித்துக்கொண்டிருந்தார். இவர் ஆரம்பத்தில் ஒல்லாந்த நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றியவர் .தற்போது பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றுகிறார். கண்டி இளவரசன் முத்துச்சாமி பாதுகாப்பு கருதி யாழ்ப்பாணத்துக்கு தப்பி வந்திருந்தார். இவர் பிரிட்டிஷ் அரசினால் உரிய மரியாதை யுடன் உபசரிக்கப்பட்டார் ஆனால் இவர் ஒரு கைதி போலவே காணப்பட்டார். ஒரு [illegible]கைதிக்குரிய பாதுகாப்பு இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆளுநர் ஒரு நாள் முத்துச்சாமியை பார்வையிட்டார்.

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் தான் செலவினத்திலும் பார்க்க இறைவரி வருமானம் கூடுதலாகக் காணப்படுகிறது.இங்கு தரமான புகையிலை பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தப்புகையிலை (சோழமண்டலத்துக்கு) தென்னிந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

புகையிலையை விட வேறு இரு பொருட்களும் யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஒன்று பனை, மற்றையது சங்கு. சங்கு வங்காளதேசத்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பனை வீடு கட்டுவதற்கும். சங்கு ஆபரணங்கள் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் 32 கத்தோலிக்கத் தேவாலயங்கள் காணப்படுகின்றன. நகரப்பகுதியில் இந்து வழிபாடு நடைபெறுகிறது.மதசகிப்புத்தன்மை இங்கு காணப்படுகிறது.மதங்களுக்கிடையிலான பிளவுகள் எதுவும் இங்கு காணப்படவில்லை.

இந்து ஆலயமொன்றில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வையும் நாங்கள் பார்வையிட்டோம். ஆலயத்துக்கு வெளியே பந்தல் போடப்பட்டு தீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஐயர் விபூதியை எடுத்துக்கொடுக்க தீட்சை பெற வந்தவர்கள் விபூதியை வாங்கி. நெற்றி. மார்பு. கைகள் என்பவற்றில் பூசிக்கொண்டு ஐயரை வீழ்ந்து வணங்கி விட்டுச்சென்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிய போது நாங்கள் பூநகரி ஊடாகவே புறப்பட்டோம். பூநகரியில் ஒரு இரவு தங்கி விட்டு பின்னர் அங்கிருந்து புறப்பட்டோம்."

-இவையெல்லாம் ஜேம்ஸ் கோர்டினரின் யாழ்ப்பாண விஜயம் பற்றிய குறிப்புகள் இனி யாழ்ப்பாண வரலாற்றைத் தொடர்ந்து பார்ப்போம்.

**1803 செப்ரெம்பர்**

பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக சதி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவைச் சேர்ந்த குமரசேகர முதலியார் உட்பட சிலருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

**1803 ஒக்ரோபர் 25**

பண்டாரவன்னியன் முல்லைத்தீவு கோட்டை மீது தாக்குதல் நடத்தினான். முல்லைத்தீவு கோட்டையிலிருந்து கப்டன் டிறிபேர்க் படகில் ஏறி யாழ்ப்பாணத்துக்கு தப்பிச் சென்றான்.

1803 ஒக்ரோபர் 31 பண்டாரவன்னியனும் அவனது சகாக்களும் கப்டன் டிறிபேர்க்கின் தாக்குதலில் தோற்கடிக்கப்பட்டனர்.

**1804**

இலங்கையில் தபால் சேவை அறிமுகம் செய்யப்பட்டது.பெட்ரலசி (Betralasi) என்பவர் இலங்கையின் முதலாவது தபால் மா அதிபராக ( Post Master General)நியமனம் செய்யப்பட்டார். கொழும்பு. யாழ்ப்பாணம்,திருகோணமலை.காலி.மாத்தறை. மன்னார் ஆகிய நகரங்களில் தபால் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு இந்த நகரங்களுக்கிடையே தினசரி தபால் சேவை நடைபெற்றது.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்



○ சுழியன்

# 'டம்மி அநுர'!

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை இலக்கு வைத்து முட்டை வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமானது தெற்கு அரசியலில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. அதுமட்டுமல்ல கண்டனக்கணைகளும் குவிந்துவருகின்றன.

கம்பஹாவில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டின்போதே இந்தத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

'அவன்கார்ட்' நிறுவனத்தின் பிரதானி நிசங்க சேனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரமே இந்தத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இதில் தொடர்பு இருப்பதாகவும் ஜே.வி.பி. தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட் டுள்ளது. தாக்குதல் நடத்துவதற்கு வந்திருந்த சிலரை ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மடக்கிப்பிடித்திருந்தனர். அவர்கள் 'அவன்கார்ட்' நிறுவனத்தின் பணியாற்றியவர்களென பின்னர் தெரியவந்தது.

'அவன்கார்ட்' நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகளை ஜே.வி.பியினர் அம்பலப்படுத்தி வருகின்றனர். இதன்காரணமாக இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும், அநுரவை கொலை செய்வதற்கான சூழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமே இதுவெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜே.வி.பியினரால் முறைப்பாடு செய்யப்பட்டும் உள்ளது.

இதற்கிடையில் இந்தத்தாக்குதலை நடத்தியவர்களை கைதுசெய்ய வேண்டாமென பொலிஸ் மேல் மட்டத்திலிருந்து கட்டளையொன்று வந்ததாகவும் தற்போது தகவல் கசிந்துள்ளது.

அதேவேளை, மாநாடு நடைபெற்ற மண்டபத்துக்கு மற்றுமொரு வழியிலேயே அநுர குமார திஸாநாயக்க வந்துள்ளார். அவரைப் போன்ற தோற்றமுடைய இன்னொருவரே (டம்மி) பிரதான வழியில் வந்துள்ளார். இருவரும் ஒரே வகையான வாகனத்தையே பயன்படுத்தியுள்ளனர். 'டம்மி அநுர' வந்த வாகனமே தாக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஜே.வி.பியால் அதன் தலைவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் பலரும் தற்போது வியப்படைந்துள்ளனர்.



# அருந்திக்கவுக்கு ஆப்பு!

மருத்துவபீட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதேபோல அருந்திக்கவின் அமைச்சின்கீழ் உள்ள தெங்கு அபிவிருத்தி சபையின் வாகனமொன்றும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சின் ஊழியர் ஒருவரும் வந்துள்ளார். இதனால் இந்தத்தாக்குதல் சம்பவத்துடன் அருந்திக்க பெர்னாண்டோவுக்கு தொடர்பிருக்கின்றது எனத் தகவல் வெளியானது.

இந்தச்சம்பவம் பற்றி அறிந்த பின்னர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அமைச்சர் அருந்திக்கவுக்கு செம டோஸ் கொடுத்துள்ளார். இராஜாங்க அமைச்சு பதவியை துறக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து இந்தவிவகாரம் தொடர்பில் அருந்திக்க பெர்னாண்டோ அமைச்சர்களான பஸில் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார்.

"சுயாதீன விசாரணைக்கு இடமளித்து நான் பதவி விலகுகின்றேன். ஆனால் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். பகிடிவதைக்கு எதிராக செயற்பட்ட மாணவர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். அதனையடுத்தே இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன." என்று அருந்திக்க பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

பதவி விலகிய அருந்திக்கவுக்கு அழைப்பை யேற்படுத்திய ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர்கள், ஆறுதல் கூறிவருகின்றனர்.

விசாரணை முடிந்ததும் அவருக்கு மீண்டும் பதவி கிடைக்கும் என்றும் சொல்லப்படுகின்றது.



# பதுங்கினார் சுசில்!

அரசைக் கடுமையாக விமர்சித்ததால் இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தற்போது அரசியல் ரீதியில் அநாதையாக்கப்பட்டுள்ளார்.

அவரை பதவி விலக்கும் முடிவை ஜனாதிபதி எடுத்தபோது, சுசில் பிரேமஜயந்தவுக்கு ஆதரவாக பலரும் குரல் கொடுத்தனர். எதிர்க்கட்சிகள் மற்றும் ஆளுங்கட்சியிலுள்ள சில பங்காளிக்கட்சிகள் சுசில் பக்கம் நின்றன. இதனால் தெற்கு அரசியலில் சுசில் புதிய புரட்சி செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தற்போது சுசிலுக்கு ஆதரவாக எவரும் கதைப்பதில்லை. நிகழ்வுகளுக்குகூட அவரை அழைப்பதில்லையாம். இதனால் அவர் மனம் நொந்துபோய் உள்ளார். தினமும் உயர்நீதிமன்றம் செல்லும் அவர், சில முக்கியமான வழக்குகளை தற்போது கையாண்டுவருகின்றார்.

ஆனால் இது சுசிலின் தந்திரோபாயப் பின்வாங்கல் என்றும், தருணம்வரும்போது, அவர் அதிரடி காட்டுவார் எனவும் அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர்.

# நாமல் – பஸில் மோதலா?



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும், அமைச்சர் நாமல் ராஜபக்சவுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

பிரதமர் பதவிக்காகவே இந்த மோதல் ஏற்பட்டதாகவும், இதனால் ஆளுங்கட்சி இரு அணிகளாக பிளவுபட்டுள்ளன எனவும் கூறப்பட்டது. இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் சில சம்பவங்களும் அரசுக்குள் இடம்பெற்றுவந்தன. இரு வேறு இடங்களில் ஊடக சந்திப்புகள்கூட நடத் தப்பட்டன.

ஆனால் பஸிலும், நாமலும் சிறந்த புரிந்துணர்வுடனேயே இருப்பதாகவும், இருவரும் தினமும் சந்தித்து திட்டங்களை வகுத்துவருவதாகவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சிலவேளை அரசுக்குள் இருக்கும் கறுப்பாடுகளைக் கண்டறிவதற்காக ராஜபக்ச குடும்பம் தரப்பில் இவ்வாறானதொரு அரசியல் வியூகம் கடைபிடிக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

# ரணிலின் இரும்புத்திட்டம்



நாளுக்கு நாள் நாட்டின் பொருளாதாரம் மோசமடைந்து வரும் நிலையில், நிலையான இரும்புக் கொள்கைத்திட்டமொன்றை வகுக்கும் முயற்சியில் ரணில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

'புத்தளம் பெத்தானி 101'பங்களாவில் சமூக மாற்றத்தை உருவாக்கும் குழுவுடனான கலந்துரையாடலின்போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். புத்தளம் 'பெத்தானி பங்களா' இதற்கு முன்னர், பண்டாரநாயக்கா ஆட்சியை பிடிக்கும் போது, உள்ளகக் கலந்துரையாடலை நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும்.

அசைக்க முடியாத இரும்புக் கொள்கைத் திட்டத்தை தான் தயாரித்துள்ளதாகவும் இதுவே இலங்கையை மீட்டெடுக்க ஒரே வழி என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதனை நடைமுறைப்படுத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும், மக்கள் கைகளிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கி உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி


சஞ்சீவி
இல. 361, ... வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகத
# மரபு உ

## சிறுநீரக மருத்

நேர்கண்டவர்: ஆர்.பிரகாஷ்



மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்கள் சிறுநீரகப் பாதிப்புக்கு உட்படுகின்றமை அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்குக்குச் செல்பவர்கள் உணவுக்குப் பின்னர் தண்ணீருக்கு பதிலாக குளிர்பானங்களை அருந்தும் நிலைமை அங்குள்ளது. இந்த மிகையான குளிர்பானப் பழக்கங்கள் காரணமாக சிறுநீரகங்கள் செயலிழக்கும் நிலை ஏற்படலாம் என்று சந்தேகிக்கின்றோம். எனவே மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்கள் தமது சிறுநீரகத்தின் ஆரோக்கியம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிறுநீரக மருத்துவ நிபுணர் **வேதநாதன் பவந்தன்.** அவருடனான நேர்காணலின் முழுவடிவம் இது.

### சிறுநீரக நோய்க்கு அறிகுறி இல்லை

**கே: சிறுநீரக நோய்களுக்கு அறிகுறிகள் இல்லை. பரிசோதனையால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும் 'என்ற கருத்து மக்களிடம் உள்ளது. இந்த நிலைமை மருத்துவத்துறையை சவாலுக்குள் தள்ளுகின்றதா?**

ப: நிச்சயமாக உண்மை. சிறுநீரக நோய்களுக்கு ஆரம்ப அறிகுறிகள் இல்லை. சிறுநீரகப் பாதிப்பை 5 நிலைகளாகப் பிரிக்கலாம். இதில் 5ஆவது நிலையென்பது சிறுநீரகத்தின் வெறும் 15 வீதமான ஆரோக்கியத்தைத்தான் குறிக்கின்றது. இந்த நிலையில்தான் அறிகுறிகள் எமக்குத் தென்படுகின்றன. அதாவது அனைத்தும் கைமீறிப் போனபின்னர்தான் சிறுநீரகம் பாதிப்படைந்துள்ளது என்பது எமக்குத் தெரியவரும்.

ஆகவே, நோய்நிலை ஆரம்பத்தில் உள்ளபோது பரிசோதனைகள் மூலம் இனங்கண்டால் அது பெரும் நன்மை பயக்கும் விடயமாக அமையும். அனைவரும் இந்தப் பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளவர்கள் என்று கருதப்படும் நீரிழிவு நோய் உள்ளவர்கள் மற்றும் உயர் குருதி அழுத்தம் உள்ளவர்கள் சிறுநீரகத்தின் ஆரோக்கியம் தொடர்பான பரிசோதனைகளுக்கு தம்மை உட்படுத்திக் கொள்ளுதல் கட்டாயமாகும்.

**கே: சிறுநீரகப் பாதிப்பை ஆரம்பத்தில் அடையாளம் காணவேண்டிய தேவை மிகவும் அவசியமானது. அவ்வாறாயின், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் எமுமாற்றான சோதனைகளை முன்னெடுக்க வசதிகள் உள்ளனவா?**

ப: உண்மையில் அவ்வாறான வசதிகள் இல்லை. ஆனால், பொதுமக்கள் வெளிநோயாளர் பிரிவில் தம்மை அடையாளப்படுத்தி அந்தப் பொறிமுறைகள் ஊடாக தம்மைப் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள முடியும்.

### சிறுநீரகப் பாதிப்புக்கான முதன்மைக் காரணங்கள்

**கே: சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதற்கான முதன்மைக் காரணங்கள் எவை?**

ப: சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதற்கு சில காரணங்கள் உள்ளன. அதில் வடமாகாண மக்களைப் பொறுத்தவரை நீரிழிவும், உயர்குருதி அமுக்கமும்தான் முக்கிய காரணங்களாக உள்ளன. ஆனால், அனுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களில் தரமற்ற தண்ணீரால் சிறுநீரகப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், மருந்தகங்களுக்குச் சென்று பொருத்தமற்ற மருந்துகளை நீண்டகாலத்துக்கு உட்கொள்ளுவதன் மூலமும் சிறுநீரகம் செயலிழக்கும் அபாயமுண்டு.

**கே: அனுராதபுரம், பொலநறுவை போன்ற பகுதிகளில் தண்ணீரால் சிறுநீரக செயலிழப்பு பதிவாகின்றது என்றால், யாழ்ப்பாணத்தில் தீவகம் போன்ற பகுதிகளில் தண்ணீரின் தரம்பற்றி ஒரு பிரச்சினை உள்ளது. எனில், தீவகத்தில் உள்ள மக்களுக்கும் இவ்வாறான ஆபத்து உள்ளதா?**

ப: இல்லை. இரண்டும் வேறுவேறு விடயங்கள். தீவகப் பகுதிகளில் உள்ள தண்ணீரில் உப்பு மட்டுமே அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், அனுராதபுரம், பொலநறுவை போன்ற பகுதிகளில் உள்ள தண்ணீரில் உலோகத்தாதுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவைதான் சிறுநீரகச் செயலிழப்புக்குக் காரணமாக அமைகின்றன. இதேபோன்று உலோகத்தாதுக்கள் கலந்த தண்ணீர் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக மல்லாவியிலும் நெடுங்கேணியிலும் உள்ளது. எனவே அந்தப்பகுதி மக்களுக்கும் சிறுநீரகப் பாதிப்புக்கான வாய்ப்புகள் அதிகம்.

### சிறுநீரகக் கொடைக்கு ஊக்கப்படுத்த வேண்டும்

**கே: யாழ்ப்பாணத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை பெருவெற்றி பெற்றது. இது மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்பட்ட பெரும் பாய்ச்சல். இவ்வாறான அறுவைச் சிகிச்சைகளை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து மேற்கொள்வதற்கு என்ன தடையாக உள்ளது?**

ப: மருத்துவ வசதியின்மை என்பதுதான் இங்கு பெரும் சவாலாக உள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தற்காலிகமாக அதற்கு ஓர் இடம் அமைக்கப்பட்டு வருகின்றது. அந்த இடம் செம்மைப்படுத்தப்பட்ட பின்னர் இந்தக் குறை நிவர்த்தி செய்யப்படும் என்று நம்பலாம்.

**கே: சிறுநீரகத்தை கொடையாக வழங்க வேண்டிய தேவை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது? அதை முன்னிலைப்படுத்த செய்யவேண்டிய நடவடிக்கைகள் எவை?**

> சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதற்கு சில க
> உள்ளன. அதில் வடமாகாண மக்களைப்
> நீரிழிவும், உயர்குருதி அமுக்கமும்தான் மு
> ளாக உள்ளன. ஆனால், அனுராதபுரம், பொல
> இடங்களில் தரமற்ற தண்ணீரால் சிறுநீரக
> பாதிப்புக்கள் ஏற்படுகின்றமை அவதானிக்
> கப்பட்டுள்ளது

ப: இரண்டு விதமான கொடைகள் மூலம் ஒருவர் சிறுநீரகத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஒன்று, ஆரோக்கியமான நபரொருவரிடம் இருந்து அவருடைய விருப்பத்தின் அடிப்படையில் சிறுநீரகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இரண்டு, மூளைச் சாவடைந்த ஒருவரிடம் இருந்து அவரின் குடும்பத்தினருடைய விருப்பத்தின் அடிப்படையில் இந்தத் தானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அண்மையில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகூட விபத்தால் மூளைச்சாவடைந்த தங்கராஜா பிரிஞ்சன் என்பவரின் சிறுநீரகங்கள் தான்.

சிறுநீரகத்தைத் தானமாக வழங்கும் தன்மை உண்மை

## அந்த மரம்



நீல வானத்தை தொடுமளவு
நீண்ட கிளை பரப்பி
காலம் காலமாக ஊரின்
கதை சொல்லியிருக்கும்

பூக்களின் சிரிப்பினில்
அதன்
புன்னகை வனப்பினில்
புரித்துப் போயிருக்கும்

காற்று இலைகளுடன்
காதல் பேசுகையில்
வரும் ஓசை கேட்டு
ஒரு கம்பீரம் பெற்றிருக்கும்

களைத்துப் போன பறவைகள்
கொஞ்சம் காலாற
கிளைகள் கொடுத்திருக்கும்

கொட்டும் மழையில்
கூடு நனையாமல் தன்
இலைக் கைகளால்
மறைத்திருக்கும்

எச்சமிடும் பறவைக்கு
என்ன தெரியுமென்று
எதுவும் பேசாமல்
மௌனம் காத்திருக்கும்

நீண்ட தூரப்
பயணத்திடை
வருபவர்கள் கொஞ்சம்
நின்று போக நிழல்
அமைத்திருக்கும்

காதலர் தன்பெய
காலத்தால் அழி
முதுகையே
காயமாக்கியிருக்

குழந்தைகள் வி
அடிக்கடி சிறு
குடிசையாக இரு

பள்ளிச் சிறுவர்க
புத்தகப் பையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த் தானம் செய்யும்
# ருவாகவேண்டும்!

## த்துவ நிபுணர் பவந்தன்



யில் எமது பகுதியில் மிகக்குறைவாகவே உள்ளது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். சிறுநீரகத்தைக் கொடையாக்குவதன் முக்கியத்துவம் எமது சமூக மட்டத்தில் உணரப்பட வேண்டும். அதை நோக்கி எமது சமூகத்தை வழிநடத்த வேண்டும்.

### சிறுவர் சிகிச்சைக்கு நிபுணர் இல்லை!

**கே: சிறுநீரக செயலிழப்பினால் சிறுவர்கள் பாதிக்கப்படும்போது, மருத்துவத்துறை விசேட விதமாக ஏதேனும் பின்னடைவை எதிர்கொள்கின்றதா?**

ப: ஆம். தற்போதுகூட 10 வயதைவிட குறைந்த வயதுடைய 5 பிள்ளைகளுக்கு குருதிச் சுத்திகரிப்பை மேற்கொண்டு வருகின்றோம். இவ்வாறான சிகிச்சைகளுக்கு குழந்தைகள் உட்படும்போது அவர்கள் மனதளவில் பின்னடைவை எதிர்கொள்கின்றனர். அத்துடன், கல்வியும் சமூகம் சார் செயற்பாட்டிலும் கூட இந்த நிலைமை அவர்களைப் பின்னடைவுக்குள் தள்ளுகின்றது.

அத்துடன் சிறுவர்களுக்கு என்று சிறுநீரக நிபுணர்கள் இங்கில்லை. இதுவும் ஒரு பின்னடைவான நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அத்துடன் சிறுவர்களின் சிகிச்சைக்கு என்று தனியான இடம் அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் சிறுவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் ஒரே இடத்தில் சிகிச்சை வழங்குவதால் வளர்ந்தவர்களுக்கு வழங்கும் சிகிச்சைகளை கண்முன் காணும் நிலைக்குச் சிறுவர்கள் தள்ளப்படுகின்றர். இந்த நிலைமையும் அவர்களை உளப்பாதிப்புக்குள் தள்ளுகின்றது.

**ல காரணங்கள்**
**ளப் பொறுத்தவரை**
**முக்கிய காரணங்க**
**ாலநறுவை போன்ற**
**நீரகப்**
**னிக்**

**கே: குளிர்பானங்கள் மற்றும் உணவுகள் கூட சிறுநீரகப் பாதிப்பை உண்டாக்குகின்றன தானே. அதுபற்றி..?**

ப: குளிர்பானங்களை சரியான அளவோடு, எடுத்துக் கொள்வதன் மூலம் பெரியளவான பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. ஆனால், அளவுக்கதிகமாக, வரன்முறையின்றி உள்ளெடுத்தால் அதன்மூலம் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் மிகமிக அதிகம். குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில்நிமித்தம் சென்ற பலர் இன்று சிறுநீரக நோயாளர்களாக உள்ளனர். உண்மையில் ஆச்சரியப்படும் வகையிலும் அச்சப்படும் வகையிலும் இந்தத் தரவுகள் உள்ளன. மத்திய கிழக்கில் எம்மவர்கள் குளிர்பானங்களை அடிக்கடி உள்ளெடுக்கும் பழக்கம் கொண்டவர்களாக இருப்பதால்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். இவ்வாறான பலர் இன்று எம்மிடம் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

> **வவுனியாத் தண்ணீரில் உலோகத்தாதுக்களால் சிறுநீரக நோய்கள் ஏற்படும் அபாயம்**

> **மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று பணிபுரிவோருக்கு அதிகளவில் நீரிழிவு நோய்**

**கே: சிறுநீரகத்துக்கும் குருதி அழுத்தத்துக்கும் என்ன தொடர்புண்டு?**

ப: குருதி அழுத்தம் தொடர்ந்து அதிகரித்திருந்தால் அது சிறுநீரகத்தைப் பாதிக்கும். அதேபோல் சிறுநீரகப் பாதிப்பு உள்ளவர்களுக்கும் சிறுநீரகப் பாதிப்பு அதிகரிக்கும். இதுதான் இவ்விரண்டுக்கும் இடையிலான தொடர்பு.

### சிறுநீரகங்களுடைய ஆரோக்கியம் பேண...!

**கே: சிறுநீரகப் பாதிப்பை குறைப்பதற்கு என்ன செய்யலாம்?**

ப: சிறுநீரகப் பாதிப்பை குறைப்பதற்கான முதல் படியாக சிறுநீரகப் பாதிப்பு ஏன் ஏற்பட்டது என்று பார்க்க வேண்டும். இதன்படி தொடர்ந்து பல காலமாக நீரிழிவு நோய் இருந்தால் எமது உடலில் குருதி அழுத்தத்தின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அதேபோன்று ஆகக் குறைந்தது 3 முதல் 6 மாதங்களுக்கு ஒரு தடவை சிறுநீரகச் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். கிளினிக் செல்லும் பலர்கூட பல மாதங்களாக இந்தச் சோதனைகளை மேற்கொள்ளாதவர்களாக இருக்கின்றமையை காணக்கூடியதாக உள்ளது. அப்படியல்லாமல் சிறுநீரகப் பரிசோதனையின் அவசியத்தை அனைவரும் உணரவேண்டும். அத்துடன் ஒருசில பாரம்பரிய 'பரியாரிமாரிடம்' இருந்து பெறும் மருந்துகளை அருந்துவதன் மூலமும் சிறுநீரகம் பாதிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. ஏனெனில் சிலர் பயன்படுத்தும் பாரம்பரிய மருந்துகளில் உலோகங்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அன்றாடம் போதிய அளவு தண்ணீர் அருந்துவதன் (குறைந்தது 3 லீற்றர்) மூலமும் சிறுநீரகங்களின் ஆரோக்கியத்தைப் பேணலாம்.

---

பெரியமடு நிஃப்ரி

பெயர்
அழியக்கூடாதென

இருக்கும்

விளையாட

இருந்திருக்கும்

வர்களின்
யை

பாதிநாள் தானே சுமந்திருக்கும்

ஆடு மாடு மேய்ப்பவனும்
அசதி கொள்ளும் போது
அன்பாகத் தாங்கியிருக்கும்

வயது பார்த்து
யார் வாய் பிளந்தது
வானளவு பரந்த மரம்
வறுமையிலும் வளர்ந்த மரம்
தனித்துவம் பெற்ற மரம்

தரித்துவிட்ட பாவமென்ன

காணி நிலம் ஆசையிலா
மரத்தையே
கால்வாசி இடம்பிடிக்குதென்று
காலைத் தரித்தார்கள்

ஊரையே காத்த மரம்
கட்டிடக் காடு வளர்க்க
களைக் [illegible]
போன[illegible]

ஊரின் கதை சொன்ன
அந்த ஒத்த மரம்
ஊமையாய்க் கிடப்பதென்ன

பொங்கி வந்த புயலுக்குத் தப்பியது
போன வருட வெள்ளத்திற்குத் தப்பியது

கோடை வறட்சிக்குத் தப்பிய
மரத்துக்கு இந்த
[illegible] போட்டவர்களிடம்
[illegible]தெரியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மௌன மொழி 69

கஷ்டங்கள் மட்டும் இல்லை என்றால்
போராடும் எண்ணமே நமக்கு
இல்லாமல் போய்விடும்
சிக்கல்களை எதிர்கொள்ளும் போது
கூடவே பல திறமைகளும்
வெளிப்படுகின்றன.

**ம.குகேந்தினி**
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

இடர்களைக் களைய அறிவை எடு
சவால்களை அடைய முயற்சியை எடு
ஆணவத்தை எடுத்தால் பேரழிவு
அகம்பாவத்தை எடுத்தால் வீண் செலவு
உண்மைக்கு உழைப்பு அறிவுக்கு படிப்பு
இதனால் அழியக்கூடாது சாதித்தடிப்பு
அதுவே உன் மரணத்துக்கு வரம்பு
இதை மதியில் சேர்த்து நற்துணிவோடு வாழ்வோம்

**ச.ஜிவன்சன்**
யாழ். மத்திய கல்லூரி

இடர் நிறைந்து இவர் வாழ்வில்
இருள் சூழ்ந்து கொண்டதுவே
இருப்பிடத்தை இழந்து வந்து
பாதையோர பரிதவிப்பு வாழ்க்கையிது
நலிவடைந்த நாற்காலி மீதமர்ந்து
நாளைய விடியலுக்காய்
இன்றைதையோ தேடிடும் தாத்தாவும்
உற்று நோக்கிக் கற்றால் தான்
உயர்ந்திட முடியும் எனும் கனவிலே பேத்தியும்

***வி.பி.சிவேஸ், தண்ணீரூற்று***

வளம் நிறைந்த எழில் வாழ்வு
வலம் குறைந்து தெருவில் நின்றும்
பலம் கொடுக்க கல்வி ஞானம்
இளம் மலரை வாழ வைக்கும்
துயர் துடைக்கும் கடமை மறந்து
இடம் கிடைத்தால் கதிரை பிடிக்கும்
அடம் பிடிக்கும் தலைமைக் கூட்டம்
படம் காட்டும் மௌனமொழி

**ச.ரண்குமார்**
வற்றாப்பளை

ஒண்டிக்கொள்ள
சீரான மனைஇன்றி
பிதாவோ பணியில்
மூழ்கி இருக்கையில்
பாலகனோ கரத்தில்
பனுவலுடன் கற்றலில்
மிக்க வாஞ்சையுடன்

**எஸ்.உமாசிவம்**
ஏழாலை

வாழ வழியற்று
வயதாகிப் போனாலும்
வாசிப்பு ஒன்றே தங்கள்
வாழ்வை உயர்த்தும் என
வாசிப்பை நேசிக்கும் _ தங்கள்
வாழ்வில் ஒளி வீசிட
வாழ்த்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு.

**த.தன்ஜா**, மிருசுவில்

வளங்கள் செழிக்கும் வசந்தம் ஒன்றில்
கரங்கள் வீசி நடந்தோம் இன்று
ஒமிக்ரோனின் அலையினாலே
குடிசை வாழ்வின் முழுமை இழந்தோம்
விலைகள் அதிகம் விளைவும் துயரம்
கற்றல், கருமம் தொடரும் காலை
கதிரொளியாக விலகும் பனியாக
எம் கஸ்ரம் என்று அகலும்

**வி.சாத்வீகன்**, முல்லை

குப்பைக்குள்ளே இருக்கும் முத்தாக
சேரிபுறத்தெருக்கோடியிலே தந்தையும் மகனும்
பசியோ வயிற்றைக் கிள்ள
வெயிலோ மழையோ
ஆடைகளின்றிய உடலை வாட்ட
பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற
தந்தையின் அரவணைப்பிலே
கல்வி கற்கும் புதிய ஆபிரகாம்லிங்கன்

**ச.துஸ்யன்,** அத்தியடி, யாழ்ப்பாணம்

பாசநேசக் கடல் உன்னை விட்டு விட்டுப் போக
பாதையில் பாத நடையில் கண்ணீருடன் நடக்கிறாய்
ஏழ்மை என்பது வாழ்க்கையில்லை
என்று எண்ணி நீயும் முயன்று செல்
கல்விக்கலையைக் கற்றும் பார் புகழ வாழ்ந்து பார்

**றெ.மலரிசை**, நமணங்குளம்.

யார் யாரோ யார் அறிவார்
என் கடமையை நான்
செய்யவில்லை ஆனாலும்
உன் கடமையை நீ செய்கிறாய்
எங்கிருக்கிறோம்
எங்கிருந்தாலும் உன்னை
கல்விதான் உயர்த்தும்
இப்பூமியில்

**ஆர்.சாரங்கன்**
கிளிநொச்சி

நூலகத்தை எரியூட்டினும் அரிய பல
பனுவல்களை அழிப்பினும்
மின்வெட்டை அமுல்படுத்தினும்
கொடிய போரின் போதும் கைவிடா எம் கல்வியை
வெட்டவெளியிலும்
குப்பி விளக்கிலும் தொடர்ந்திடுவோம்
சோர்ந்திடுவோம் என நினைத்தாயோ
தமிழனின் சொத்தும் பலமும் கல்வி ஒன்றே தான்

**எஸ்.அம்சன், ஏழாலையூர்**

எத்தனை வறுமை சூழ்ந்திட்ட போதும்
உழைப்பவன் கண்ணுக்கு உறக்கமேது
பசியிலே பரிதவித்திட்ட போதும்
படிப்பிற்குண்டோ அணைக்கல்
கடின உழைப்பதனால் கைகள் காய்த்திட்டபோதும்
தான் கண்ட கஷ்டமதனை பிள்ளை காணாதிருக்க
கல்வியெனும் சொத்தை அவர்க்கழித்திடும்
தியாக தீபம் உழைப்பாளி

**செ.பவுஸ்ரினா**
நாவாந்துறை, யாழ்ப்பாணம்

# 70



சிறுவனே வாட்டும் வறுமையை
போக்கிட உலகில் நீ படித்திடு
பின்பு வாழ்வில் உயர்ந்திட
உன்னருகில் தொழில் செய்யும்
என் தந்தை போல் துடித்திடு

**சு.ஜெயரூபன்**, பருத்தித்துறை

தொழிலுக்கான கல்வியும் உன்
பெருமைக்கான செயலையும் என்
ஏக்கங்கள் மறுதலைத் தாக்கங்கள் என
கோடு போட்ட சட்டைக்காரர்
நேர்க்கோடு போட்டு வளர்க்கின்றார் - சீர்
உனக்கானது அதை உதைக்காதே ஒரு போதும்

**என்.தீபன்**,அரசடிச்சந்தி

இன்றைய நவீன காலத்தில்
நாம் மட்டும் வசதியாக வாழ நினைக்காமல்
வாழ்வாதாரம் இழந்து
வறுமையோடு போராடும் இக்குடும்பத்தை
வெளிச்சத்துக்கு கொண்டு வருவது
கடவுளுக்கு நாம் செய்யும் தொண்டு போன்று
மிகப்பெரிய புண்ணியப் பேறாகும்

**அ.புவனமதி**, கறுக்காய்

கல்வியொரு அழியாத செல்வம்
அதைக் கற்றிடில் வாழ்வு வளம்பெறும்
இதையறிந்தோர் தடைகளையும் தாண்டிடுவர்
மின்சாரம் தடைப்பட்ட வேளையிலும்
மங்கலமான விளக்கொளியில்
குனிந்த தலை நிமிராமல்
பட்டங்கள் பல பெறுவதற்காக
ஊக்கமாகப் படிப்பார்கள்

**சி.காசிப்பிள்ளை**
அல்லாரை வடக்கு, கொடிகாமம்

கவிதைக்கு பரிசு 1000/=

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**11.02.2022**

காலத்தின் கோலங்கள்
விரைந்து மாறிட
அப்பனோ அயராத
பணியில் மும்முரமாக
பச்சிளம் பாலகனோ
வாஞ்சை மிக்க
கற்றலில் நூலுடன்

**கவிக்கோ**
**வவுனியூரான்**

பரிசு பெறும் கவிதை

இடம் பொருள் சூழல்
பாராமல் அறிவை உயர்த்த
புத்தகம் ஏந்தும் பச்சிளம் கைகள்.
அவன் – தந்தையின் பல்லாயிரம்
கனவுகள் சுமந்து!

[illegible]
மல்லாகம்

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/- பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனைய கவிதைகள் மௌன மொழி பகுதியில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

சஞ்சீவி

தொடர் கதை



# மாணத்தி

○ கருணை ரவி

இயக்கப்பொடியள் சைக்கிளை நடுறோட்டில் போட்டு, ஓடினார்கள். வேகமாக வந்த ட்றக், சைக்கிள் முன்னால் நின்றது. ட்றக்கிலிருந்து குதித்த சிப்பாய்கள். சைக்கிளைத் தூக்கி ட்றக் வண்டியில் ஏற்றினார்கள். ஒரு சிப்பாய் சைக்கிளில் இருந்த பேப்பர் கட்டைத் தூக்கினான். ட்றக் வண்டி அவர்கள் ஓடிய பக்கம் போனது. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த அவளுக்குப் பயமாக இருந்தது.

ட்றக் வண்டி போனதும் பூங்கொடி பதறிக்கொண்டு போனாள். நித்தி வெளியில் நிற்க, ஓடியவர்களில் ஒருவன் நித்தி என நினைத்து பிடித்துக்கொண்டு போயிருப்பார்களா? ஓட்டமும் நடையுமாகப் போக கேற் வாசலில் சனங்கள் நின்றனர். சனங்களைக் கண்டதும் பதறினாள். நித்தியைப் பிடித்துக்கொண்டுபோக பார்த்துக்கொண்டு நிக்கிறார்களா?

நிற்பவர்களில் எந்தச் சிரிப்புகளையும் காணவில்லை. முகத்தில் சாந்தமில்லை. அவர்களில் இருந்து எந்தச் சொற்களும் வரவில்லை. மௌனம் காய்த்திருந்த முகங்களில் பயம் கனிந்திருந்தது. அவள் எவர் மீதும் சொற்களை எறியவில்லை. கேற்றடிக்குப் போனதும் நித்தி வாசலில் நின்றான்.

பயம், பதற்றம், ஏக்கம் அவளைவிட்டு இறங்கியது. உடனே மாட்டுக்கொட்டிலுக்குப் போனாள். நித்தி ஒளித்து வைத்திருக்கும் பேப்பர்களைப் பார்த்தாள்.

காணவில்லை. வைக்கோல்களைக் கிண்டினாள். வேலிக் கிடுகுகளில் தேடினாள். மாட்டுக்கொட்டில் வளையில் பேப்பர் இருந்தது. எடுத்து கசக்கி நிலத்தில் போட்டுவிட்டு தீப்பெட்டி எடுக்க வீட்டுக்குள் போனாள். வைத்த இடத்தில் தீப்பெட்டி இல்லை.

அடுப்புப் புகடு, வெங்காயக்கூடை, சட்டி பானைகள் கவிழ்க்கிற ஒத்தாப்பு எங்குமில்லை. அலுத்துப்போனாள். சீப்பு சீப்பு என்று ஒருநாள் அரைமணித்தியாலமாக தேடியும் சீப்பு கிடைக்கவில்லை. கடைசியாக குடும்பியில் கிடந்து எடுத்தாள். அதேமாதிரி நெஞ்சுச் சட்டையையும் பார்த்தாள். சிலவேளை நிருபன் தீப்பெட்டியை எடுத்து குச்சுகளைகொட்டிவிட்டுவாகனம்செய்துவிளையாடுவான். அவன் விளையாடும் வீட்டு மூலையைப் பார்த்தாள், கடைசியாக படத்தட்டுக்கு மேல் கிடந்து எடுத்தாள். எடுத்த கையோடு போய் கசக்கிய பேப்பரைக் கொளுத்திவிட்டு வந்தாள். நித்தி பூங்கொடியைப் பார்த்துக்கொண்டு நின்றான். வாகனச் சத்தம் கேட்டது. இராணுவ வாகனமாய் இருக்குமெனப் பயந்து தெருவை எட்டிப்பார்த்தாள். சனங்களைக் காணவில்லை.

"அம்மா..."

"என்னடா"

"இன்னுமொண்டு கிடக்கு"

"எங்கையடா?"

"கொப்பீக்கை கிடக்கு"

சொல்லிக்கொண்டு கொப்பி ஒற்றைகளைப் புரட்டினான். கணிதக் கொப்பி நடுப்பக்கத்தில் இருந்தது. மிகவும் அழகான பத்திரிகை. விடுதலைப்புலிகளின் மாதாந்தப் பத்திரிகை. இந்தியாவில் இருந்து அச்சடித்து வரும் பத்திரிகை. அதை மாதம் மாதம் எல்லாக் கடைக்காரரும் விரும்பி வாங்குவார்கள். உட்பக்கங்களில் இருக்கும் படங்கள் கலராக இருந்தது. சீலன், செல்லக்கிளி, ஆனந் ஆகியோரின் வீரச்சாவுப் படங்களும் முதல் மாவீரர் சங்கரின் வரலாறும் இருந்தது. அவன் கையில் வைத்திருக்க பூங்கொடி பறித்தாள். பயந்தபடி உட்பக்கங்களைப் பார்த்தாள். பதினாறாவது பக்கத்தைப் பார்த்தவுடன் மலைத்துப் போனாள். பூறாட்டியின் படம் கலரில் இருந்தது. பொலிஸ்காரர் அடித்துநடக்கமாட்டாது கிடந்த அதே படம். ஒருநாள் யாரோ வந்து பூறாட்டியைப் படம் எடுத்துக்கொண்டு போனார்கள். அப்ப, ஏன் எடுத்தார்கள்? எதற்கு எடுத்தார்கள்? என்று பூங்கொடிக்கும் தெரியாது. இப்ப அதே படம். மிகவும் அழகான படம். பூங்கொடி படத்தை ரசித்துக்கொண்டு நின்றாள். அதை எரிக்க மனம் வரவில்லை.

வீட்டுக்குள் போனவள் கத்தரிக்கோலை எடுத்துவந்து பூறாட்டியின் படத்தை மட்டும் வெட்டினாள். மிச்சப்பேப்பரை எரிக்க அவளுக்கு மனம் வரவில்லை. மற்றப்படங்களையும் வெட்டிக்கொண்டு மிகுதிப் பேப்பரை எரித்தாள்.

"பூங்கொடி..."

பூறாட்டி அவசரமாக கூப்பிட்டான். அவனின் குரலைக்கேட்டதும் சந்தோசம் பெருகியது அவளில். வெட்டி வைத்திருந்த அவனின் படத்தைக் கொண்டு ஓடினாள்.

"அங்கை பாரடி வைக்கல் கும்பி எரியுது. ஆரடி நெருப்பு வைச்சது?"

20

வைக்கோல் முழுமையாக எரிந்து விட்டது. பூங்கொடி கொளுத்திய பேப்பர் காற்றுக்குப் பறந்து வைக்கோல் எரிந்தது என்பதை அவள் சொல்லவில்லை. வைக்கோல் எரிய நித்தியும் பூங்கொடியும் தண்ணீர் ஊற்றி அணைக்கவும் வைக்கோல் எரிந்தது. பூறாட்டிக்கு கவலை.

மாடு கன்று போட்டதும் மாட்டுக்கு சாப்பாடு இல்லை. பூறாட்டி ஆயிரம் ரூபாவுக்கு கப்பூது வயலில் ஏற்றி வந்த வைக்கோல். வெயில் சுணைக்கு கொஞ்சம் கொஞ்சமாக பூறாட்டிதான் வைக்கோலை போறாக்கினான்.

ஆமிக்காரர் கலைத்த இரண்டு இயக்கப்பொடியளும் மதில் பாய்ந்து வைக்கோலுக்குள் ஒளித்திருந்தார்கள். அவர்கள் படுத்ததை எவரும் காணவில்லை. அவள் நோட்டீஸ் தேடி வைக்கோலைக் கிண்ட அவர்களைக் கண்டாள். அவர்கள் சொன்னபடி அவள் எவருக்கும் சொல்லவில்லை.

பூங்கொடி இன்னும் நித்திரை கொள்ளவில்லை, பூறாட்டி நீட்டி நிமிர்ந்து கொறக்கா விட்டபடி கிடந்தான். பேப்பரில் வந்த அவனின் படத்தை வாங்கிப்படுத்திருந்தவாறே பார்த்தான்.

படத்தை நெஞ்சில் வைத்து அப்படியே நித்திரையாய்ப் போனான். அவள் எழும்பி படத்தை எடுத்து வைத்துவிட்டு அவனுக்குப் பக்கத்தில் படுத்தாள். நான்கு மணிக்கு பூறாட்டியை எழுப்பிவிட வேண்டும். புத்தூருக்கு கருவாடு கொண்டுபோகவேண்டும். மரியதாஸ் நான்கு மணிக்கு பண்டத்தரிப்புக்குப் போவதாகச் சொன்னான். அவனின் மோட்டார் சைக்கிளில் பூறாட்டி போக வேணும்.

மரியதாஸ் ஆவரங்கால் சாப்பாட்டுக்கடையில் இறங்கி ரீ குடிப்பான். பூறாட்டியும் அங்குதான் சாப்பிடுவான். சாப்பிட்டதும் பூறாட்டி நடக்கத் தொடங்கினால் ஒன்பது மணிக்கு நவக்கிரிக்குப் போய் மூன்று கடைகளுக்கு கருவாட்டைக் கொடுத்து விடுவான். சுன்னாகத்தில் இருந்துவரும் பஸ்ஸில் ஏறி அச்சுவேலியில் இறங்கி எழுநூற்று ஐம்பத்தொரு இலக்க பஸ்ஸில் ஏறி வீட்டுக்கு வந்துவிடுவான். முன்பு மாதிரி பூறாட்டிக்கு இப்ப தொழில் ஓடுவதில்லை. "பகலிரவா ஓயாத உழைப்பெண்டு சனங்கள் உவியுதடி. கண்ணூறு கழிக்கோணும்"

என்று கனகம் அடிக்கடி சொல்லுவாள். பொலிகண்டி பேய்க்காரத் தருமு வீட்டை ஒரு நாளைக்குக் கூட்டிக் கொண்டு போகவேணும் என நினைத்துக்கொண்டு பூங்கொடி படுத்தாள்.

வல்லை முத்துமாரியம்மன் கோயில்மணி அவளை எழுப்பியது. மரியதாஸ் வரப்போகிறான் என்ற அவசரத்தில் பூறாட்டியை எழுப்பினாள். பூறாட்டி கக்கூசுக்குப் போய் முகம் கழுவிவர அவள் தேநீரைக் கொடுத்தாள். மரியதாஸ் படலையில் வந்து சைக்கிளை நிறுத்தினான். முருகன் படத்துக்கு முன்னால் போய் விபூதியை அள்ளி நெற்றியில் மூன்று குறி வைத்தான். முற்றத்தில் நின்ற செவ்வரத்தையில் இரண்டு பூக்கள் ஆய்ந்து இரண்டு காதுகளிலும் வைத்தான். பூங்கொடி கருவாட்டுப் பையைத் தூக்கிக்கொண்டுபோய் கொடுக்க, பூறாட்டி சைக்கிளில் இருந்தபடியே வாங்கினான். பூங்கொடி மோட்டார் சைக்கிள் மறையும்வரை பார்த்துக்கொண்டு நின்றாள். மோட்டார் சைக்கிள் மறைந்ததும் வந்து படுத்தாள். இரவு அவளுக்கு நித்திரை வரவில்லை. இமைகளைக் கசக்கிக்கொண்டு படுத்தாள்.

**றோட்டில் சைக்கிள்களும் வாகனங்களும் கூடுதலாக ஓடத் தொடங்கின. கேட்ட துப்பாக்கிச் சண்டையில் ஆமிக்காரர் செத்தால் பருத்தித்துறையில் இருந்து வெளிக்கிடும் இராணுவத்தினர் தெருவில் போகிற சனங்களை பிடித்துக்கொண்டு போவார்கள். நித்தி வெளியில் போகாதபடி பார்த்துக்கொண்டு பூங்கொடி முற்றத்தைக் கூட்டினாள்.**



பூறாட்டி கொண்டு வரும் காசை கொஞ்சம் கொஞ்சமாக இரண்டாயிரம் ரூபாய் சேர்த்து விட்டாள். இன்னும் ஆயிரம் சேர்த்தால் பிலிப்பிடம் தோடு எடுக்கலாம் என நினைத்துக் கொண்டு படுத்தாள். பிலிப்பு சொன்ன தவணை முடிய இரண்டு நாட்கள் இருக்கின்றன. இரண்டு நாட்களுக்குள் தோடு எடுக்கவேணும். மூவாயிரத்துக்கும் வட்டி ஐநூறு ரூபா வரும். இரவு அவள் கந்தவிக்கிழவனை கனவில் கண்டாள். தாடி வளர்த்து நடக்க முடியாமல் கோயில் வாசலில் படுத்திருப்பதாக. பூறாட்டிக்கு தான்கண்ட கனவைச் சொல்லும் போது, பூறாட்டி சொன்னான் ஆவரங்காலால் வரும்போது சந்நிதியில் கிழவனை பார்த்துவிட்டு வருவதாக. கிழவன் வீட்டுக்கு வரச் சம்மதித்தால் கூட்டி வருவதாகவும் சொன்னான்.

மாடு கட்டைக்குள் நின்று கத்தியது. இரவும் கத்தியது. கந்தவிக்கிழவனை மாடு மறக்கவில்லை. அவரை நினைத்துக் கத்துவதாக நினைத்தாள். அவர் வீட்டை விட்டு போன நாளில் இருந்து மாடு இரவில் கத்தியபடியே இருக்கும்.

கிழவன் நிற்கும்போது மாட்டுக்கு நல்லசாப்பாடு. நுங்குகள் கொண்டுவந்து சீவிப்போடுவார். அறுகம்புல்லு செருக்கிவந்து போடுவார். இடைக்கிடை புண்ணாக்கும் கரைச்சு வைப்பார். வடலி ஓலைகளை வெட்டிவந்து ஈர்க்குகளை வார்ந்து ஓலைகளை போடுவார். கிழித்த ஈர்க்குகளில் சுளகு பின்னி கடைக்குக் கொடுப்பார். தென்னம் ஈர்க்குகளை வார்ந்து எடுத்து கூட்டுமாறு செய்து கடைகளுக்குக் கொடுப்பார்.

இன்று அவளுக்கு கிழவனின் நினைவாகவே வந்து கொண்டிருந்தது. சூலம் புடுங்கிய கோபம் இருக்குமட்டும் அவரை நினைக்கவில்லை. கோபம் தணிந்ததும் அவரை நினைத்தபடியே இருக்கின்றாள்.

"டட் டட் டட் டடட டடடட"

தூரத்தே துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. அந்தத் துப்பாக்கிச் சத்தங்கள் அவளின் நினைவுத் தேனீக்களை கலைத்தன. சத்தங்கள் இடைவிடாமல் பத்து நிமிடங்கள் வரை கேட்டன. பின் இடைக்கிடை கேட்டன. மண்டான், வல்லைப்பக்கமாக இருக்க வேணும் என நினைத் தவள் எழுப்பி வெளியே போனாள். நிலம் வெளிக்க ஆயத்தமாகியது. வீடுகளில் இருந்து கதைகள் பெருகின. அவள் பூறாட்டியை நினைத்து வெளியில் வந்தாள். றோட்டில் சனங்கள் போகத்தொடங்கவில்லை. சிவன் கோயில் ஐயர் மட்டும் கோயிலுக்குப் பூசை வைக்கப்போனார்.

நெல்லியடியில் சிற்றம்பலம் பொலிஸை சுட்டமாதிரி எங்கேயோ பொலிஸ்காரர்களை சுடுவதாக அவள் நினைத்தாள். றோட்டுக்குச் சனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக தலையைக்காட்டினர். பிலிப்பு சைக்கிளில் மிசினைக் கட்டிக்கொண்டு தோட்டத்துக்குப் போனான். அவன் அந்தச்சத்தங்கள் பற்றி ஆராயவில்லை. தோடு ஞாபகத்தில் வர பிலிப்பைக்கண்டு பயந்தாள். பிலிப்பு ஒன்றும் கதைக்காமல் அவளை விலத்திச் சென்றான்.

சத்தங்கள் ஓய்ந்துவிட்டன. நித்தி வந்தான். துப்பாக்கிச் சத்தங்கள் கேட்க நித்தி எழும்பி வெளியில் போனான். அவன் பின்கதவால் வெளியில் போனான். அவன் போனது அவளுக்குத் தெரியாது. வரும்போது வேம்பில் குச்சி முறித்து பற்களைத் துலக்கிக் கொண்டு வந்தான்.

"எங்கை சத்தம் கேட்டது?"

"வல்லைப் பக்கமாம்"


வல்லைப்பக்கம் என்றதும் கூட்டிய விளக்குமாற்றை அப்படியே மரத்தோடு சாற்றிவிட்டு, பூறாட்டியை நினைத்தாள். அன்றைக்கு வைக்கோலுக்குள் ஒளித்த பொடியளைப் போல யாரும் வர, ஆமிக்காரரும் வந்து நேருக்கு நேர் முட்டுப்பட்டு சண்டை பிடிக்கிறார்களோ... என பூங்கொடி நினைத்தாள். அந்தச்சண்டையில் பூறாட்டி அம்பிடக்குடாது என வல்லை முனியப்பரை வேண்டினாள்.

றோட்டில் சைக்கிள்களும் வாகனங்களும் கூடுதலாக ஓடத் தொடங்கின. கேட்ட துப்பாக்கிச் சண்டையில் ஆமிக்காரர் செத்தால் பருத்தித்துறையில் இருந்து வெளிக்கிடும் இராணுவத்தினர் தெருவில் போகிற சனங்களை பிடித்துக்கொண்டு போவார்கள். நித்தி வெளியில் போகாதபடி பார்த்துக்கொண்டு பூங்கொடி முற்றத்தைக் கூட்டினாள்.

பிலிப்பு தோட்டத்தில் மிசினை வைத்துவிட்டு, வயறை தோளில் காவிக்கொண்டு வந்தான். மிசினில் வயறைப் பூட்டிவிட்டு மிசினை இயக்க, பெற்றோல் அடிக்க ஒருவர் வேணும். நித்தியை வழமையாகக் கூட்டிக்கொண்டு போவார். நித்தி வரும்போது பயிற்றங்காய் கொண்டு வருவான். பிலிப்பு வயறை வைத்துவிட்டுச் சொன்னான். "ஆவரங்காலிலை இயக்கத்தின்ரை முகாமை அடிச்சவங்களாம். தெருவிலை போனதுகள் ரண்டுபேர் செத்துக்கிடக்காம்"

(வருவாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலைகளின் அரசியல்!

○ ஆர்.பிரகாஷ்

ஈராக் - சிரிய இஸ்லாமிக் ஸ்டேட்ஸ் (ஐ.எஸ்.ஐ.எஸ்.) அமைப்பின் தலைவர் அல் குரைசி, வடமேற்கு சிரியாவில், அவர் பதுங்கிருந்ததாகக் கருதப்படும் இடத்தில் அமெரிக்கப் படைகளின் சுற்றிவளைப்பில் கொல்லப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு, 'ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் மூளை' என்று வர்ணிக்கப்பட்ட அப்போதைய அந்த அமைப்பின் தலைவரான அபுபக்கர் அல் பக்தாதி, அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டதை அடுத்து ஐ.எஸ்ஸைப் பொறுப்பேற்றவர் குரைசி. வீழ்ந்துகிடந்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை மீண்டும் தூக்கி நிறுத்தவும் அந்த அமைப்பின் முக்கியமான பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் குரைசி மூளையாகச் செயற்பட்டவர். இதனால் கடந்த ஐந்து ஆண்டுகளாகவே தீவிரமாகத் தேடப்பட்டுவந்த குரைசி கடந்த வியாழக்கிழமை பின்னிரவு அமெரிக்காவால் தீர்த்துக் கட்டப்பட்டார்.

ஆனால், உலகில் அவ்வப்போது மேலோங்கும் ஆதிக்கவாதப் போக்குகளின்போது தன்னை எதிர்த்து நிற்கும் நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கையை உரத்துச் சொல்வதற்காக இந்தப் படுகொலைகளை அமெரிக்கா தருணம் பார்த்து நிகழ்த்துகின்றதா என்ற சந்தேகம் குரைசியின் கொலையை அடுத்து வலுப்பெற்றுள்ளது.

2019 ஆம் ஆண்டு அல் பக்தாதி கொல்லப்பட்டபோது அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே போர்மேகம் சூழ்ந்திருந்தது. மூன்றாம் உலகப்போரின் போர்முனை என்று கருதும் அளவுக்கு அப்போது நிலைமை சென்றது. பக்தாதியின் கொலையை அடுத்து ஈரான், அமெரிக்காவிடம் கொஞ்சம் அடக்கிவாசிக்கவே செய்தது. ஒருவனை அடித்து அடக்குவதன் மூலம் , மற்றொருவனை மௌனிக்க வைக்கும் கைங்கரியம் இது. இதையே தற்போது ரஷ்யா விடயத்திலும் அமெரிக்கா செய்திருக்கின்றதா என்பதைத்தான் அல் குரைசியின் படுகொலை கட்டியம் செய்கின்றது.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் மோதல்போக்கு நிலவுகின்றது. நேட்டோவில் உக்ரைன் இணைவதை எதிர்க்கிறது ரஷ்யா. இதனால் உக்ரைன் எல்லையில் லட்சத்துக்கும் மேற்பட்ட தன் சிப்பாய்களையும் ரஷ்யா நிறுத்தியுள்ளது. ஆனால், உக்ரைனுக்கு இமாலயப் பலமாக அமெரிக்கா உள்ளது. 'உக்ரைனை ஆக்கிரமிக்க முயன்றால் அமெரிக்கா ரஷ்யாவுடன் போர் புரியும்' என்று அமெரிக்கா அறிவித்த நாளில் இருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு 'வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறிய கதை'யாகவே உள்ளது. இந்தப் பின்னணியில்தான் சிரியாவில் அல் குரைசியைப் பலியெடுத்து கெத்துக் காட்டியிருக்கின்றது அமெரிக்கா. தனது படைபலத்தை, தன் உளவுத்துறையின் துல்லியத்தன்மைபற்றி ரஷ்யாவுக்கும் இதர எதிரிகளுக்கும் மறைமுகமாக எச்சரித்துள்ளது அமெரிக்கா.

அல் பக்தாதியும் சரி, அல் குரைசியும் சரி, கிட்டத்தட்ட ஒரேமாதிரியாகவே கொல்லப்பட்டனர். அமெரிக்கப் படைகள் சுற்றிவளைத்ததையடுத்து தப்பிக்க வழியின்றி தம் குடும்பத்துடன் அவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொண்டனர். இவர்களின் சாவு எவ்வாறு ஒரேமாதிரியாக சம்பவித்ததோ அதேபோன்று அவர்கள் மீதான இராணுவநடவடிக்கையின் பின்னணியும்கூட கிட்டத்தட்ட ஒரே வகைதான். அமெரிக்கா ஏதோவொரு செய்தியை துல்லியமாகச் சொல்கின்றது. அந்தச் செய்தி ஐ.எஸ்ஸுக்கு மட்டுமானதல்ல என்பது மட்டும் உண்மை.



விளையாட்டு


○ ஆர்.லயனல்



# நடால் யுகத்துக்கான வீரன்!

தோல்வியின் பிடி உங்களை ஓர் மலைப்பாம்பாக இறுக அணைத்திருக்கின்றது. வெளிச்சமே அற்ற காரிருள் உங்களைச் சூழ்ந்திருக்கின்றது. மீட்சிக்கான வழியே இல்லை என்ற நிலைப்பாடு. ஆனாலும், அப்போதும் போராடிக் கொண்டிருங்கள். ஏதோ ஒரு விடியல், ஏதோ ஒரு வழி, ஏதோ ஒரு பிடிமானம் உங்களைப் பற்றிக்கொள்ளும். இதுதான் ரென்னிஸ் களத்தில் நடால் 'இறுக்கமாக நடைமுறைப்படுத்தும்' கொள்கை. இந்தக் கொள்கையால் - ஓயாத போராட்டத்தால் - நடால் அடைந்த வெற்றிகள் ஏராளம். அப்படியொரு அசாத்திய வெற்றியுடன்தான் அவுஸ்ரேலியப் பகிரங்கக் கிண்ணத்தைக் கைப்பற்றி, 21 பகிரங்கக் கிண்ணங்களைக் கைப்பற்றிய உலகின் முதல் வீரர் என்ற வரலாற்றுச் சிறப்புக்குச் சொந்தக்காரர் ஆகியுள்ளார் நடால்.

இந்த ஆண்டின் முதலாவது பகிரங்கத் தொடரான அவுஸ்திரேலியப் பகிரங்கத் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ரென்னிஸ் உலகின் முடிசூடா மன்னர்களும் நடாலின் கடும் போட்டியாளர்களுமான ஜோகோவிக், பெடரர் ஆகியோரும் நடாலைப் போலவே 20 பகிரங்கக் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளனர். இதனால் இந்த ஆட்டத்தில் கிண்ணம் வென்றால் நடால் 21 கிண்ணங்களுடன் அவர்களை முந்திச் செல்வார் என்ற நிலைமை. உலகமே ஆவலுடன் காத்திருந்த நடாலுக்கும் மெட்வதேவுக்கும் இடையிலான அந்த இறுதியாட்டம் பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமானது.



முதலிரு செற்களையும் 2:6, 5:7 என்ற கணக்கில் இழந்தார் நடால். ஆக, அடுத்த மூன்று செற்களில் ஒன்றை நடால் இழந்தாலும் மெட்வதேவ் சம்பியன். இறுதி மூன்று செற்களையும் கைப்பற்றினால் மட்டுமே நடால் சம்பியன். நடால் வீழ்ந்துவிட்டார். இளமைத் துடிப்பு மிக்க மூன்றாம் தலைமுறை வீரரான மெட்வதேவ் கிண்ணத்தைக் கிட்டத்தட்ட கைப்பற்றி விட்டார் என்று சமூக வலைத்தளங்களில் பல்லாயிரம் பதிவுகள். அதன் பின்னர்தான் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

இரையைக் களைக்க வைத்து அதை ஆட்கொண்டு மூச்சை நிறுத்தும் மலைப்பாம்பு போன்று மெட்வதேவை ஆக்கிரமித்தார் நடால். 6:4, 6:4 என்ற கணக்கில் அடுத்த இரு செற்களும் நடாலின் வசமாகின. தற்போது நிலைமை 2:2. அதாவது இறுதி செற்றை எவர் கைப்பற்றுவாரோ அவர்தான் சம்பியன் என்ற நிலை. வாய்ப்பே இல்லை என்ற ஆட்டத்தில் 50:50 என்ற வாய்ப்பை ஏற்படுத்திய நடால் இறுதி செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றை 7:5 என்று கைப்பற்றி கிண்ணம் வென்றார்.

இதுதான் நடால். களத்தில் நடால் செய்வது இதைத்தான். உங்கள் இதயத்தில் ஓர் இனம்புரியாத வலியை ஏற்படுத்துவார். அதன் இயக்கத்தை எகிற வைப்பார். 'எல்லாம் முடிந்துவிட்டது. இனிச் சாத்தியமே இல்லை' என்று நீங்கள் கருதும் நேரத்தில், நம்பவே முடியாத வகையில் அந்த ஆட்டத்துக்கு உயிர்கொடுப்பார், மீண்டு வருவார். ரென்னிஸ் உலகம் பெடரர் என்ற ஆகச் சிறந்த வீரனைக் கண்டுள்ளது. பெடரரின் தனிக்காட்டு ராஜா என்ற சித்தாந்தத்தை சிதறடித்தவர் நடால். ஜோகோவிக் பேரெழுச்சி பெற்ற காலங்களில் ஜோகோவிக் - பெடரர் என்ற ஒப்பீட்டை விட ஜோகோவிக் - நடால் என்ற ஒப்பீடுதான் பேசப்பட்டது ,பேசப்படுகின்றது. தற்போது நடாலையும் மூன்றாம் தலைமுறை வீரரான மெட்வதேவையும் ஒப்பிட ஆரம்பித்துள்ளார்கள். ஏனைய வீரர்களில் இருந்து நடால் வேறுபடுவது இந்த இடத்தில்தான். அவர் யுகத்துக்கான வீரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





ஆபத்து வருமுன்னே விழித்து கொண்டதனால் பல மாணவச் சிறார்களது விழிகள் தப்பிக்கொண்டன.

குறித்த நிறுவனத்தினர் , அந்த 61 மாண வர்களிடமும் கண்ணாடிகளுக்கான முற் பணத்தையும் கோரியுள்ளனர்.
அந்தப் பாடசாலையில் பயிலும் மாணவர் களின் பெற்றோரில் பெரும்பான்மையா னோர் பொருண்மியத்தில் நலிவடைந்த வர்கள். எனவே அவர்களால், அன் றைய தினமே தங்கள் பிள்ளைகளுக் கான மூக்குக் கண்ணாடிகளுக்குரிய முற்பணத்தைச் செலுத்துவதற்கான பணம் இருந்திருக்கவில்லை.
ஆனால் ஒரு சில வசதிபடைத்த பெற் றோர் பணத்தைச் செலுத்தியிருந்தனர். பெற்றோரது கருத்தின்படி அந்தக் கண் ணாடிகளது விலை வழமையான விலையை விடவும் அதிகமாக இருந் தது. இந்தநிலையில் அதிபரைத் தொடர்பு கொண்ட குறித்த நிறுவனத்தி னர் பிள் ளைகளுக்கு கண்ணாடிகள் வழங்குவ தற்காக முற்பணத்தைச் செலுத்துமாறு கோரினர். அதற்கு கடும் எதிர்ப்புத் தெரி வித்த அதிபர் "எல்லாப் பெற்றோரும் பணத்துடன் வரவில்லை. அனைத்துப் பெற்றோரும் வசதிபடைத்தவர்களும் அல் லர். எனவே எந்தப் பெற்றோராவது தாமாக முன்வந்து முற்பணம் தந்தால் பெற்றுக் கொள்ளுங்கள். மிகுதிப் பிள்ளைகளுக்கு நானே பொறுப்பாளி" எனத் தெரிவித் துள்ளார்.



## ஊடகவியலாளருக்கு வந்த சந்தேகம்

மேற்படி சம்பவத்தில் தொடர்புபட்ட பெற்றோர் ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவருடன் தொடர்பு கொண்டு "என்னுடைய பிள்ளை வழமை போன்று வாசிப்புத் தொடக்கம் எல்லாப் பணிகளையும் மேற்கொள்கிறார். ஆனால் அவருக்குப் பார்வைப் பிரச்சினை உண்டு என்பதால் கண்ணாடி பாவிக்க வேண்டும் என்று ஆலோசனை தரப்பட்டுள்ளது. என் னுடைய பிள்ளையைப் போன்று அதே பாடசாலையில் பயிலும் 61 பிள்ளைகள் கண்ணாடி பாவிக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.
இதே காலப்பகுதியில் "கிளிநொச்சியில் ஒரே பாடசாலை யில் 71 மாணவர்களுக்கு கண்பார்வையில் குறைபாடு" என அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்திருந்தன. எனவே குறித்த ஊடக வியலாளர் உசாரடைந்து மருத்துவர் ஒருவரைத் தொடர்பு கொண்டு இந்த விடயம் குறித்த உரையாடியி ருக்கின்றார். அந்த மருத்துவரும் "இந்த எண்ணிக்கை உண்மையாயின் இதுவொரு அனர்த்தம், அபாய அறிகுறி. எனவே இந்த விடயத்தை ஆழமாக ஆராய வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.
இதன் பின்னர் அதிபருடன் குறித்த ஊடகவியலாளர் தொடர்பு கொண்டு "கண் பரிசோதனையை மேற் கொண்டவர்கள் யார்?" என வினவிய போது ,சந்தேகம் மேலும் வலுவடையத்தொடங்கியிருக்கிறது. அதனை யடுத்து சம்பந்தப்பட்ட 71 மாணவர்களின் கணிசமான பெற்றோருடன் தொடர்பு கொண்டு ஊடகவியலாளர் பேசிய போது கிடைத்த தகவல்கள் அவருக்குப் பேரதிர்ச் சியை ஏற்படுத்தின.

## மருத்துவ அதிகாரிகள் செய்தது என்ன?

இறுதியாக கண்டாவளை உதவி சுகாதார மருத்துவ அதிகாரியான (AMOH) மருத் துவர் பிரியாந்தினி கமலசிங்கத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்ட அந்த ஊடகவியலாளர் "தங்கள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் மேற்கொள் ளப்பட்ட கண் பரிசோதனையில் 71 மாண வர்களுக்கு பிரச்சினை உள்ளது என வெளியாகியுள்ள செய்திகள் உண் மையா? அதுபற்றிய மேலதிக விவரங் களைத் தெரிவிப்பீர்களா?" என்று வினவி யுள்ளார். ஆனால் அவரோ "நான் பயிற்சி ஒன்றின் காரணமாக களுத்துறையில் நிற்கிறேன். ஆனால் என்னுடைய அலுவ லகத்தில் இந்தக் கண்பரிசோதனை தொடர்பில் எவ்வித அனுமதியும் பெறப்ப டவில்லை. ஒரு அறிவித்தல் கூட வழங்க வில்லை. இது தொடர்பில் வேறு எதுவும் தெரியாது" என்றும் பதிலளித்துள்ளார்.
அதன்பின்னர், அப்போது கண்டாவளையில் சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பதிற் கடமையாற்றிய கிளிநொச்சி மாவட்ட தொற்று நோயியல் மருத்துவர் நிமால் அருமை நாதனை ஊடகவியலா ளர்தொடர்பு கொண்டு வின விய போது "குறித்த கண் பரிசோதனை விடயம் தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது .கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிம னையிலும் எவ்வித அனு மதியும் பெறப்படவில்லை" எனத் தெரிவித்திருந்தார்.
இந்தப் புலனாய்வுத் தேடல்களின் இறுதியா கவே "மாணவர்களின் கண் பரிசோதனை விட யத்தில் மோசடி இடம் பெற்றுள்ளது" என்றும் "வியாபார நோக்கத் துக்காககண்மருத்துவ மாபியாக்களினால் வறிய பெற்றோரின் பிள்ளைகள் இலக்கு வைக்கப்பட்டுள்ள னர்" என்றும் , நடந்த சம்பவத்தின் உண்மை நிலைவரம் குறித்து ஊடகங்களின் ஊடாக வெளிப்ப டுத்தப்பட்டது. இது அனைவர் மத்தியி லும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## களத்தில் இறங்கிய மனித உரிமைகள் ஆணைக்குழு

இதனடிப்படையில், அதிரடியாகக் களத்தில் இறங்கிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ் .பிராந்திய அலுவலகம், ஊடகங்களில் வெளிவந்த செய் தியைச் சொந்தப் பிரேரணையாக ஏற்று, உடனடியாக கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாள ரிடம் இந்த விடயம் தொடர்பில் அறிக்கை தருமாறு கோரியது.

## சுகாதார துறையினரின் நடவடிக்கை

விடயத்தின் தீவிரத் தன்மையை உணர்ந்த கிளிநொச்சி பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளரது நேரடி மேற்பார்வையில் 71 மாணவர் களையும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில், கண் சத்திர சிகிச்சை நிபுணரிடம் மீள்பரிசோதனைக்கு உள்ளாக்கத் தீர்மானிக்கப் பட்டது.
அதற்கமைவாக அவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு கட்டம் கட்டமாக மாணவர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு மீள்பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன. 27.12.2021 இலிருந்து 11.01.2022 வரை நடந்த இந்த பரிசோதனைகளில் 55 மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.



## உண்மையை அம்பலப்படுத்திய அறிக்கை

55 மாணவர்களிடம், மாவட்டத்துக்குப் பொறுப் பான கண் சத்திர சிகிச்சை நிபுணர் மேற்கொண்ட பரிசோதனை அறிக்கையில், 38 மாணவர்களது கண்களிலோ அல்லது பார்வைத்திறனிலோ குறிப்பிடத்தக்களவு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் ஏனைய 17 மாணவர்களுக்கு மட்டுமே கண்ணாடிகள் அல்லது மேலதிக பரி சோதனைகள் தேவைப்படுவதாகவும் கண்டறி யப்பட்டது.
இந்த அறிக்கையே வறிய மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கண் மாபியா வியா பாரத்தை வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது. மேற்படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்காது விட்டிருந்தால், 10 வயதுக்குட்பட்ட 38 வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இன்று மூக்குக் கண்ணாடிகளுடன் வலம் வந்தி ருப்பார்கள்.
அது மாத்திரமன்றி அந்த அப்பாவிப் பெற்றோர் பணத்தையும் கொடுத்து, தங்கள் பிள்ளைக ளுக்கு நன்மை செய்வதாக நினைத்து கண் பார் வையோடு விளையாடும் அபாயநிலை உருவா கியிருக்கும். எனவே தங்கள் பிள்ளைகள் இந்த ளவோடு காப்பாற்றப்பட்டிருப்பதனை எண்ணி ,அந்தப் பெற்றோர் இப்போது நிம்மதிப் பெரு மூச்சு விடுகின்றனர்.

## பாடசாலைகளுக்குப் பறந்த சுற்று நிருபம்

இந்த விடயத்தைத் தொடர்ந்து வடக்கு மாகாண கல்வி அமைச்சு அனைத்துப் பாடசாலைகளுக் கும் ஒரு சுற்றுநிருபத்தினை அனுப்பியுள்ளது. அதாவது "பாடசாலைகளில் மேற்கொள் ளப்படுகின்ற மருத்துவச் சிகிச்சை நடவடிக்கைகளை அந்தந்த பிர தேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் அல்லது மாவட்ட சுகாதார திணைக்களங்களின் அனுமதி மற்றும் ஒத்துழைப்புட னேயே மேற்கொள்ள வேண் டும்" என்று அதில் பாடசாலைக ளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆபத்து வருமுன்னே விழித்துக் கொண்டதனால் பல மாணவச் சிறார்களது விழிகள் தப்பிக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்ப்புதினம்

○ இராகவன்

இந்த இழவு சொல்லுற விசயத்தில ஒரு முசுப் பாத்தி நடந்ததெண்டு போனகிழமை சொன்னனான் எல்லோ? அதைப் பற்றிச் சொல்லுறன் கேளுங்கோ.

எங்கடையூரில மெயின்றோட்டைக் கடந்து வயலுகளுக்குள்ளால கிழக்காக ஒரு கிலோமீற்றர் நடந்தால் ஒரு தோட்டவெளிவரும். அதை 'ஆவலப்புலம்' எண்டு சொல்லுவினம். அதுக்குள்ள கனபேர் தோட்டஞ்செய்வினம். வெங்காயம், கத்தரி, மிளகாய் இதுகளோட பூசணி, பாகல், புடோல், வெள்ளரி, வத்தகை எண்டு ஊடுபயிர்களும் செய்யிறது வழக்கம். அநேகமாக எல்லோரும் குத்தகைக்கு எடுத்துத்தான் செய்யிறவை. இப்படியொருக்கால் மாமனும் மருமகனும் பக்கத்தில பக்கத்தில தோட்டஞ் செய்ய வேண்டி வந்திட்டுது. இதில மாமன்காரன் நல்ல மனிசன். கரவு, வஞ்சகமில்லாத சீவன். ஆனால் மருமகன் எதிர்மாறு. வெறுங்கள்ளன். மாமன்காரன் மிளகாய் நட மருமகன் வெங்காயம் வைச்சான்.

இதுக்குள்ள மாமன்காரன் மிளகாளயோட பாகலும் வைச்சிருந்தவர். அந்த மூட்டம் அந்தாள் நட்டிருந்த பாகலெல்லாம் காய்ச்சுச் சொரிஞ்சுது.

"இந்தமுறை பாகலில கொஞ்சங்காசு பாக்கலாம்" எண்டு அந்தாள் சந்தோசப்பட்டுது. காயளெல்லாம் நல்ல பருவத்துக்கு வந்தவுடன "நாளைக்குக் காலமை வெள்ளென வந்து காயள ஆய்ஞ்சு நெல்லியடிச் சந்தைக்குக் கொண்டு போவம்" எண்டு பிளான் பண்ணிக் கொண்டு போய் ,அடுத்தநாள் கருக்கலோட அடுக்கெடுத்துக் கொண்டு வந்து பார்த்தால் .....! என்னத்தைப் பாக்கிறது? அந்தாள் விறைச்சுப் போச்சு.



வெறுங்கொடியள்தான் நிக்குது. மருந்துக்குக் கூட ஒரு பாகற்காய் இல்லை. முதல்நாள் பொழுதுபடேக்குள்ளதான் அந்நாள் தோட்டத்திலயிருந்து வெளிக்கிட்டது. அந்தநேரம் மருமகன்காரன் தன்ர வெங்காயத்தறைக்குள்ள மசுகிக் கொண்டு நிண்டதைக் கண்டு கொண்டுதான் வந்தவர். அப்பவும் அந்தாள் "உவன் உதுக்குள்ளைள நிண்டு மசுகிறான். பாவற்காயில கைவைக்கிறானோ தெரியாது" எண்டும் நினைச்சுது. பிறகு "ஒண்டுக்குள்ளயொண்டு. சொந்தத்துக்குள்ளை சொந்தம்.
கள்ள வேலை பாக்கமாட்டான்" எண்டு நம்பிக் கொண்டு வந்திச்சுது.

இப்ப 'நக்கிற நாய்க்குச் செக்கென்ன? சிவலிங்கமென்ன?' எண்ட நிலையாய்ப் போச்சுது. பாகல் கொடியளைப் பாக்கப் பாக்க அந்தாளுக்கு வயிறு பத்தியெரிஞ்சுது. அந்தநேரம் மருமகன்காரன் அந்தாளின்ரை கண்ணில பட்டிருந்தால் அடிச்சுச் சாக்கொண்டிருக்கும். அப்படியொரு கோவம் வந்திச்சுது. எண்டாலும் ஒரு மாதிரிச் சமாளிச்சுக் கொண்டு வீட்டை திரும்பி வந்திட்டுது. அந்தாள் வெறுங்கையோட வாறதைப் பாத்திட்டு மனிச்காரி "என்னப்பா பாவக்காய் ஆயப் போறன் எண்டு விடிய முன்னம் வெளிக்கிட்டியள். இப்ப வெறுங்கையோட வாறியள்?" எண்டு கேட்டா. "எல்லாம் மருகன் செயல்" எண்டு சொல்லிப் போட்டு தன்ர வேலையளப் பாக்கப் போட்டார். அண்டைக்குப் பொழுதுபட்டாப் போல அந்தாள் வீட்டால வெளிக்கிட்டுது.

கையில ஒரு தும்புக்கட்டைக் கொட்டன். ஊருக்குள்ள போய் ஒவ்வொரு வீட்டு வாசலிலயும் நிண்டு "அண்ணை! வீட்டுக்காரர்! பாவக்காய் ஆஞ்சவர் காலமாகிவிட்டார்" எண்டு இழவு சொல்லத் தொடங்கிச்சுது. ஊர் நாயளெல்லாம் குரைக்கத் தொடங்கிச்சுது. அந்தாளைக் கலைச்சுக் கொண்டு போன நாயளுக்கெல்லாம் தும்புக்கட்டை கொட்டனால செம அடி விழுந்திச்சுது. ஒவ்வொரு அடியிலயும் மருமகனில இருந்த கோவம் தொப்பிளிச்சுது. அண்டைக்கு ஊரே பரபரத்துப் போச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிமாநேத்ரன்

# துப்பறியும்



## AK 67


12

'காமிக்ஸ் தொடர்'

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்




# முயற்சி...



மனிதா எழுந்து பறந்து வந்தே
மண்ணில் மாசற்ற வழியில் உழைத்து
உண்மையையும் நேர்மையையும் துணைக் கொண்டே
முயற்சித்துப் பொன்னும் பொருளும் தேடியே!
பார் மதித்திட பரவசமாய் வாழ்ந்தே!
தேசத்தில் நேசம் கொண்டே பாசமிகு
உறவுகள் சூழவே மேலும் மேலும்
தரத்தினை மேம்படுத்த பாடுபட்டே தங்கமாய்
மின்னியே தரணியில் மங்காப் புகழை
ஈட்டியே வறியோர் பசிப்பிணி அகற்றி
மற்றவர் முன்னே வரவே ஊன்று
கோலாகி ஊக்கமுடைமையின் வித்தாய் முளைத்திடு

கவிஞர் ரஜிதா , யாழ்ப்பாணம்